28 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 28 கதிர் 060 வள்ளுவர் ஆண்டு 2044 தை 12 வெள்ளிக்கிழமை (25/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



வெற்றியைப் பறித்து விட்டார் ரெய்னா 23

போர்க்களம் புகத் தயாராக அமெ. வீராங்கனைகள் 09

காங்கிரஸ் அரசு தமிழர்களுக்கு துரோகம் இழைக்கிறது 08

# காணாமற்போனவர்களுக்கு இந்தியாவே முழுப்பொறுப்பு

## பழி போடுகிறார் கோத்தபாய



வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது படையினரால் பதியப்பட்டு பொறுப் பேற்கப்பட்ட எவரும் காணாமற்போக வில்லை.

கொழும்பு, ஜனவரி 25

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது படையினரால் பதியப்பட்டு பொறுப்பேற்கப்பட்ட எவரும் காணாமற்போக வில்லை. இறுதிப்போரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தவர்கள், இந்திய வைத்தியசாலைகள் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.) ஆகியவற்றினூடாகவே வருகை தந்தனர். எனவே, அவர்களிடம் போய்ச் சேர்ந்தவர்கள் தொடர்பில் இந்தியாவும் ஐ.சி.ஆர்.சி.யுமே பொறுப்புக்கூறவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இராணுவத் தளபதியினால் நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணைச் சபையின் அறிக்கை, பாதுகாப்புச் செயலாளரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது. அதன்போது, காணாமற்போனோர் பார்க்க பக்கம் 04

## மன்னாரில் ஜேர்மன் தூதுவர்



மன்னார், ஜன.25

மன்னாரில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மடுக்கரை மக்களுக்கு ஜேர்மன் அரசின் நிவாரண உதவியை இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் நேற்று வழங்கினார்.

மடுக்கரை கிராம அலுவலகர் பிரிவிற்கு உட்பட்ட சுமார் 400ற்கும் அதிகமான குடும்பங்களுக்கு இந்த உலர் உணவு அல்லாத இதர உதவிப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி யுர்கீன் மொர்காட் நேற்று மன்னாருக்கான பயணம் ஒன்றை மேற் பார்க்க பக்கம் 04

# சர்வதேச சமூகத்தை அலட்சியப்படுத்தாதீர்

## 'கொழும்பிடம் இடித்துரைத்தது புதுடில்லி

கொழும்பு, ஜன.25

ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு உட்பட்ட விடயங்கள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை இலங்கை அலட்சியப்படுத்திவிட முடியாது என்று இந்தியா வலியுறுத்திக் கூறியுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுடனான சந்திப்பின்போது இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் இந்தியாவின் இந்நிலைப்பாட்டைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்தச் சந்திப்பில் இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் ரஞ்சன் மத்தாய், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இலங்கை வெளியுறவுச் செயலாளர் பார்க்க பக்கம் 04

## பீரிஸின் கருத்தை நிராகரித்த அந்தோனி

புதுடில்லி,ஜன 25

இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்து, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்ட கருத்தை, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி நிராகரித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு, தமிழ்நாட்டு அரசியல்வாதி பார்க்க பக்கம் 04

## இலங்கை மீது 'சைபர்' தாக்குதல்

கொழும்பு, ஜன.25

இலங்கையிலுள்ள சில இணையத்தளங்கள்மீது நேற்று முன்தினம் இரவு திடீரென சைபர் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதனால் கணினிகளில் பதிவுசெய்து சேமித்து வைக்கப்பட்டுள்ள பல முக்கிய ஆவணங்கள் அழிந்து பார்க்க பக்கம் 04

## அவசர தேவைக்காகவே வடக்கில் இராணுவத்தினர்

கொழும்பு,ஜன 25

வடக்கில் சிவில் நிர்வாகமே இடம்பெற்று வருகின்றது. தெற்கில் இராணுவ முகாம்கள் இருப்பதைப் போன்றே வடக்கிலும் அவசர தேவைகளுக்காக இராணுவ முகாம்களை அமைத்து இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்- என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை இராணுவம் இலங்கையில் நிலைகொள்ளாமல் வெளிநாடுகளில் சென்று முகாம்களை அமைத்து நிலைகொள்ள முடியாது. தெற்கில் போன்றே வடக்கிலும் அவர்கள் தங்கியுள்ளனர். வடக்கில் பொலிஸாரே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி வருகின்றனர். அங்கு எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படினும் பொலிஸாரே முன்னின்று தீர்த்து வைக்கின்றனர். இந்நிலையில், அவசர தேவைகளின் பொருட்டே இராணுவத்தினர் செயற்படுவர்.

போர் காரணமாக வடக்கில் முடக்கப்பட்டிருந்த அபிவிருத்தி மற்றும் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. இருப்பினும், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து அங்கு நிலைமை மாறியுள்ளது. மக்கள் தங்களது தொழில்களைச் சுதந்திரமாகச் செய்கின்றனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்து வருகின்றது. போர் இடம்பெற்ற நாடொன்று இதுவரை செய்யாத சாதனையை பார்க்க பக்கம் 04

# அரசின் சண்டித்தனத்தால் ஜி.எஸ்.பி. சலுகை நாசம்

## சபையில் குமுறினார் தயாசிறி எம்.பி.

கொழும்பு, ஜன.25

அரசு சண்டித்தனம் செய்வதால் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இல்லாமல் போயுள்ளது. இதன் எதிரொலியாக ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் சில ஆடைத் தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்தும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்குப் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது ஆடைக் கைத்தொழில் தொடர்பில் நிதி திட்டமிடல் அமைச்சரிடம் தயாசிறி ஜயசேகர கேள்விகளை எழுப்பியிருந்தார். அவற்றுக்கு பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பதிலளித்தார். பார்க்க பக்கம் 04

## இனவாதத்தை தடுக்கவும் தெரிவுக்குழு

கொழும்பு, ஜன.25

சமூகங்களுக்கிடையில் அடிப்படைவாதங்களும், மோதல்களும் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதற்கான விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சகல தரப்பினரும் அரசியல் பேதங் [illegible] வழங்கவேண்டும்.

சபை முதல்வரும், அமைச பார்க்க பக்கம் 04

# மஹிந்தவை வீழ்த்த ஒபாமா நிர்வாகம் சதி

## அமைச்சர் விமல் வீரவன்ஸ கூக்குரல்

கொழும்பு, ஜன.25

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு [illegible] கொண்டு [illegible] ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைப் போட்டியிட முடியாதவாறு தடுத்து நிறுத்தி, இந்த அரசை இல்லாமல் செய்வதற்கே ஒபாமாவின் பிரதிநிதிகள் திட்டம் தீட்டி வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ.

அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று முன் தினம் புதன்கிழமை தல்கிரையில் வீடமைப்புத் திட்டமொன்றைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:- பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அழிந்தது ஜனநாயகம் இனியும் பொறுமை காக்க முடியாது!

## கொழும்பு அங்கிலிக்கன் பேராயர் போர்க்கொடி

> நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றமும் அரசமைப்பை அலட்சியம் செய்த பின்னர், இலங்கையில் ஜனநாயகம் தோன்றுவதற்கு இனிமேல் வாய்ப்பில்லை.

நாட்டில் தற்போது ஜனநாயகம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது. மதம் சார்ந்தவர்கள் என்ற ரீதியில் நாம் இனிமேலும் இதை பொறுத்துக்கொள்ள முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதிவண. திலோராஜ் கனகசபை.

திருச்சபையும், ஏனைய மத அமைப்புகள் மற்றும் குடியியல் சமூகமும், மீண்டும் மீண்டும் எச்சரித்திருந்த போதிலும், நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றமும் அரசமைப்பை அலட்சியம் செய்த பின்னர், இலங்கையில் ஜனநாயகம் தோன்றுவதற்கு இனிமேல் வாய்ப்பில்லை என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மிகக் கடும் சொற்களில் தமது அதிமேற்றிராணியாருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் நடைபெறும் அராஜகங்களைப் பார்த்து கிறிஸ்தவ திருச்சபை என்ற வகையில் அமைதியாக இருக்கமுடியாது.

அமைதியாக இருப்பது எமது கடவுளை அவமதிப்பதும், கடவுளின் மக்களுக்குச் செய்யும் துரோகமுமாகும்.

எனவே, இறுதியான முடிவை எடுப்பதற்கு திருச்சபை எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

- இப்படி அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர நாளன்று வெள்ளை ஆடை அணிந்து பிரார்த்தனைகளில் பங்கேற்குமாறும் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு பேராயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 'விஸ்வரூபம்' திரையிடத் தடை

கொழும்பு,ஜன 25

உலக நாயகன் கமல் ஹாஸன் இயக்கி நடித்துள்ள 'விஸ்வரூபம்' திரைப் படத்தை இலங்கையில் திரையிட அரசு தற்காலிகத் தடை விதித்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை சர்வதேச ரீதியில் இந்தத் திரைப்படம் வெளியிடவிருந்த நிலையிலேயே இலங்கை அரசு இதற்குத் தற்காலிகத் தடை விதித்துள்ளது.

இதேவேளை, 'விஸ்வரூபம்' திரைப்படத்திலுள்ள சர்ச்சைக்குரிய காட்சிகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தணிக்கைச் சபை அறிவித்துள்ளது.

மேற்படி திரைப்படத்தை வெளியிடுவதால் என்ன பிரச்சினை உருவாகும் என்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (த)

## இரு பொலிஸார் கடத்தப்பட்டனர்

கொழும்பு,ஜன 25

ஆயுதங்களுடன் காவலுக்கு இருந்த பொலிஸார் இருவர் கடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

தீய செயல்கள் தடுப்பு பிரிவைச்சேர்ந்த பொலிஸார் இருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது

பொலிஸ் அதிகாரிகள் 22 பேர் கொண்ட குழு, உடவளவ தேசிய வனாந்தரத்தில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாவை அழித்தொழித்துக் கைப்பற்றுவதற்குச் சென்றிருந்தது. கஞ்சா பயிர்செய்கையைச் சுற்றிவளைத்துக் கைப்பற்றிய அந்தக் குழு ஆயுதங்களுடன் இரண்டு பொலிஸாரை காவலுக்கு நிறுத்திவிட்டுப் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிவிட்டது.

அந்த இரு பொலிஸாரே வன ஜீவராசிகள் அதிகாரிகளினால் கடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (த)

# சபாநாயகர் சமலுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கொழும்பு,ஜன 25

சபாநாயகர் சமல் ராஜபக்சஷக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் சபாநாயகரின் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அதன் அடிப்படையிலேயே சபாநாயகருக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லா தீர்மான யோசனை ஒன்றை முன்வைக்க ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் கிரியல்ல, சுஜீவ சேனசிங்க, விஜயதாச ராஜபக்ச, அஜித் பெரேரா ஆகியோர் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனையைத் தயாரிக்கவுள்ளனர்.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இது குறித்து பேச்சு நடத்தப்படவுள்ளது. (த)

# ஜனாதிபதியின் வருகைக்காக காத்திருக்கும் யாழ்.கட்டடங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவிருந்த யாழ்.போதனா வைத்தியசாலை கட்டடம் மற்றும் யாழ்.மாவட்ட செயலக முகாமைத்துவ மற்றும் திறன்விருத்தி நிலையக் கட்டடம் என்பன இன்னமும் திறந் து வைக்கப்படாமல் எப்போது திறக்கப்படுவது என்ற தீர்மானமும் இல்லாமல் உள்ளன.

ஜப்பான் அரசின் நிதியுதவியில் 2ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில் நான்கு மாடியைக் கொண்டதாக யாழ்.போதனா வைத்தியசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதமளவில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இறுதியில் கடந்த தைப் பொங்கல் விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்டத்துக்கு ஜனாதிபதி வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் கடைசி நேரத்தில் ஜனாதிபதி யின் யாழ்.வருகை இரத்தும் செய்யப்பட்டன.

மக்களின் அத்தியாவசிய-அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான வைத்தியசாலை கட்டடத் திறப்பு விழா ஜனாதிபதியின் யாழ். வருகை இரத்துச் செய்யப்பட்டதுடன் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட வேண்டிய கட்டடங்கள் பல இன்னும் மூடியே உள்ளன.

(த-5)

## வன்புணர்வின் பின் சிறுமி கொலை; சந்தேக நபர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.25

மண்டைதீவுப் பகுதியில் வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்ட 4 வயதுச் சிறுமியின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை முற்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.எம்.மகேந்திரராசா சந்தேக நபர்கள் இருவரினதும் இரத்த மாதிரிகளை எடுத்து மரபணுப் பரிசோதனைக்கு அனுப்புமாறும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரும் மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

> சந்தேக நபர்கள் இருவரும் மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவு 2 ஆம் வட்டாரம் பகுதியில் தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து அப்பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியான குணசேகரம் சுதாகினி (வயது-4) கடந்த மாதம் 28ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். விசாரணைகளில் அவர் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இந்தச் சிறுமியின் கொலை தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் சிறுமியின் உடற்பாகங்கள் இழையவியல் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் இந்த இரு சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(த-4-14)

# காணாமல் போனோரை இறந்தோராக பதியும் அரசின் நடவடிக்கை பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

காணாமல் போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்யும் விசேட சட்டவரைவின் கீழ் வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு 54 பேர் மட்டுமே இறந்தவர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதனால், இந்தத் திட்டம் பிசுபிசுத்துப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்டவரைவு அறிமுகப்படுத்தப்பட்ட கடந்த இரண்டு ஆண்டுகளில் 91 பேரே இதுவரை இறந்தவர்களாகப் பதிவாகியுள்ளனர்.

இறுதிக்கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு என்ன நடந்தது என்று எதுவுமே தெரியாத நிலையில்,கடந்த 2011 ஆம் ஆண்டு காணாமல் போனோரை இறந்தவர்களாகப் பதிவு செய்யும் சட்டம் விசேடமாக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த விசேட ஏற்பாட்டுச் சட்டத்தின் அடிப்படையில், ஒரு வருட காலத்துக்கு மேலாக காணாமல்போன எவரையும் இறந்தவர்களாக கருதி பதிவை மேற்கொள்ள முடியும். காணாமல் போனவர் மீளத்திரும்புவாராயின் அந்தப் பதிவை இரத்தாக்க முடியும்.

மேலும் எந்தத் தரப்பினராலும் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களுக்கும் இந்தப் பதிவை மேற்கொள்ளமுடியும் .

ஒரு வருடத்துக்கு அதிகமாக காணாமல் போனவர்கள் தொடர்பில் பதிவு செய்வதாயின் ஏதாவதொரு முறைப்பாட்டு ஆவணத்தைச் சமர்ப்பித்து பிரதேச செயலகங்கள் ஊடாகப் பதிவை மேற்கொள்ளலாம்.

காணாமல் போனோரை இறந்தவர்களாகக் கருதி பதிவு செய்யும் விசேட சட்டவரைவு இந்த ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது.

வடக்கில்,கடந்த 2011 ஆம் ஆண்டு 37 பேரும், 2012 ஆம் ஆண்டு 54 பேரும் இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர்.

பெரும்பாலான மக்கள் தமது உறவுகள் திரும்பி வருவார்கள் என்று நம்பிக் கொண்டிருப்பதாலேயே,வடக்கு மக்கள் இந்தப் பதிவு நடவடிக்கைகளில் ஆர்வமில்லாமல் உள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (த-5)

## மத்தல விமான நிலையம் மார்ச் 18ஆம் திகதி திறப்பு

கொழும்பு,ஜன 25

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள மத்தல விமான நிலையம் எதிர்வரும் மார்ச் 18ஆம் திகதி திறக்கப்படும் என சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரையில் நான்கு விமான நிறுவனங்கள் மத்தல விமான நிலையத்துடன் இணைந்து செயற்பட இணங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(த)

## சுன்னாகம் பஸ் நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஜன.25

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் இந்தத் திறப்பு விழா நிகழ்வு இடம்பெறும்.

இந்த பஸ் தரிப்பிடம் சுமார் 10 மில்லியன் ரூபா நிதியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. புனர்நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததையடுத்து இந்தத் திறப்பு விழாவை யார் ஏற்பாடு செய்வது என்பதிலும் இழுபறி நிலவியது.

ஆயினும் தற்போது வலி.தெற்குப் பிரதேச சபை இந்தத் திறப்பு விழாவை ஏற்பாடு செய்துள்ளது. அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பஸ் தரிப்பு நிலையத்தை திறந்து வைப்பார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரி 31 இற்கு முன் ஆயிரம் ரூபாவைப் பெறுக

தென்மராட்சி பிரதேசத்தில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபா கொடுப்பனவை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை தொடக்கம் இந்தக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ச்சியாக மூன்று தினங்கள் பொது விடுமுறையாக உள்ளதால் ஜனவரி 31 ஆம் திகதிக்குள் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## டெங்கு பரிசீலணை

மாசேரி கிராம அலுவலர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் வீடு வீடாகச் சென்று பரிசீலனை செய்யப்பட்டது.

சுகாதார திணைக்களப் பணிப்பாளர்கள் குழுக்களாகப் பிரிந்து சென்று இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது டெங்குநோயை கட்டுப்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைவோம் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (ம-122)

## இராமநாதன் சிலைக்கு வந்ததே சோதனை..!



வரலாற்றுப் புகழ் மிக்க இராமநாதன் சிலைக்கு சமாதி கட்டும் நிகழ்வு மிகவும் பூடகமான முறையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வருகின்றது. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் முன்னைய பிரதான கட்டட வாசலில் சுமார் ஆறு அடி பீடத்தில், ஆறு அடி உயரத்தில் சைவத் தமிழ்த் தலைவர் வள்ளல் சேர்.பொன். இராமநாதனின் சிலை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

தற்போது அவரது சிலையை அந்த இடத்தில் இருந்து அகற்றி, இராமநாதனின் வீடாக காணப்பட்ட வளாகத்தினுள் அதுவும் சிலையில் அரைப்பங்கு நிலத்தின் கீழ் மறைக்கப்பட்ட நிலையில் குழியினுள் புதைத்து அரைவாசிப் பகுதி மட்டும் தெரியும் வகையில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வள்ளல் இராமநாதன் சிலை அமைந்திருந்த இடத்தில் உள்ள கட்டடத் தொகுதி பாடசாலைக்குச் சொந்தமானதாக இருந்தபோதிலும் தற்போது இந்த கட்டடம் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பயன்பாட்டுக்கு வரவுள்ளதாகவும், அதன் காரணமாக இந்த சிலை அகற்றப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. (ம-86)

## தீவகத்தில் 'நிமாலி' மாதுளையை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25

தீவகப் பகுதிகளில் நடுத்தரப்பருவம் கொண்ட நிமாலி மாதுளையை உற்பத்தி செய்வதற்கு விவசாயத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று யாழ்.விவசாய பணிப்பாளர் கே.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குடாநாட்டின் வளம் குறைந்த தீவகப் பகுதிகளில் முதற் கட்டமாக இந்த உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தெரிவு செய்யப்பட்ட 28 விவசாயிகள் மாதுளங்கன்றுகளைப் பயிரிட்டு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குருநாகல் மாக்கார்துறை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து மென்மையான விதைகளைக் கொண்ட நடுத்தரப்பருவமுடைய நிமாலி மாதுளையை வர்த்தக ரீதியில் விரிவுபடுத்த இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக தீவகப்பகுதிகள், கைதடி, வேலணை ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆர்வமுடைய விவசாயிகளைத் தெரிவு செய்து மாதுளங்கன்றுகளை வழங்கி உற்பத்தி நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தை மேலும் விரிவு படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன எனவும் தெரிவித்தார். (ம-7)

## மண்டைதீவு ஆஸ்பத்திரிக்கான கட்ட வேலைகள் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.25

மண்டைதீவு வைத்தியசாலைக்கான கட்டட வேலைகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே போர் காரணமாக சேதமடைந்த இந்தக் கட்டடம் தற்போது முற்று முழுதாக இடிக்கப்பட்டு அத்திபாரத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மண்டைதீவு ஆஸ்பத்திரி 1984 இல் பிரதமராக இருந்த சேர்.ஜோன்.கொத்தலாவலையால் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த ஆஸ்பத்திரி மீள் நிர்மாணம் செய்யப்படும் நிலையில் ஆஸ்பத்திரிக்கான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் அந்த வீதியையும் புனரமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

### தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில்

# தகவல் தொடர்பாடல் நிலையங்களை பின்தங்கிய கிராமங்களில் நிறுவ திட்டம்

யாழ்ப்பாணம், ஜன.25

*தொழில்நுட்ப வளர்ச்சியில் பின்தங்கிய கிராமங்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் பொருட்டு, யாழ்ப்பாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களை நிறுவுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

ஈ-ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தை இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் நடைமுறைப்படுத்துகின்றது. இதனூடாக யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தொழில்நுட்பத்தில் பின்தங்கிய கிராம சேவையாளர் பிரிவுகள் இனங்காணப்பட்டுள்ளன.

குறித்த கிராமத்திலுள்ள திறம்பட செயற்படும் கிராம மட்ட அமைப்புகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முதல்கட்டமாக கணினி உபகரணங்கள் என்பன குறித்த கிராமமட்ட அமைப்புக்கு வழங்கப்படும். அத்துடன் ஒரு வருடத்துக்கான இணையக்கட்டணம் இலவசமாக வழங்கப்பட்டு அதன் பின்னர் குறித்த கிராம மட்ட அமைப்புக்களே இதற்கான பணத்தை செலுத்த வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் ஊர்காவற்றுறை (ஜே/49) கிராம அலுவலர் பிரிவும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலி தெற்கு(ஜே/ 162) கிராம அலுவலர் பிரிவும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பண்டத்தரிப்பு (ஜே/146) கிராம அலுவலர் பிரிவும், இளவாலை (ஜே/155) கிராம அலுவலர் பிரிவும், தெல்லிப்பழை பிரதேச செயலர் தந்தை செல்வாபுரம் (ஜே/230) கிராம அலுவலர் பிரிவும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சுன்னாகம் தெற்கு (ஜே/196) கிராம அலுவலர் பிரிவும்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நீர்வேலி தெற்கு (ஜே/268) கிராம அலுவலர் பிரிவும், அச்சுவேலி வடக்கு (ஜே/285) கிராம அலுவலர் பிரிவும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உடுப்பிட்டி வடக்கு (ஜே/ 353) கிராம அலுவலர் பிரிவும்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பருத்தித்துறை கிராம அலுவலர் பிரிவும் (ஜே/401), சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் கொடிகாமம் மத்தி(ஜே/327), வரணி இயற்றாலை (ஜே/343) சாவகச்சேரி நகரம் (ஜே/300)கிராம அலுவலர்பிரிவும்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் திருநெல்வேலி மத்தி வடக்கு (ஜே/114), கோண்டாவில் மத்தி கிழக்கு (ஜே/118) கிராம அலுவலர் பிரிவும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் றெக்கிளமேசன் மேற்கு (ஜே/69), மூர் வீதி வடக்கு (ஜே/87) கிராம அலுவலர் பிரிவும்

வேலணை பிரதேச செயலர் பிரிவில் அல்லைப்பிட்டி (ஜே/10) கிராம அலுவலர் பிரிவும், நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் நெடுந்தீவு மத்தி மேற்கு (ஜே/3) கிராம அலுவலர் பிரிவும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் காரை கிழக்கு (ஜே/48) கிராம அலுவலர் பிரிவும் முதல் கட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

## பௌர்ணமி தின நிகழ்வு

தென்மராட்சி, ஜன.25

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்துக்குரிய முழுநிலா நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மாகாண கல்விப் பணிப்பாளர் ப.செல்வராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கண்டிய நடனம், முஸ்லிம் கலாசார நிகழ்வு, தென்மோடி நாடகம், வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்வுகளுடன் மலர் வெளியீடும் இடம்பெறும். (ம-9)

## பெருந்தொகையான பணத்துடன் கைவிடப்பட்ட 'பேர்ஸ்' கையளிப்பு

தென்மராட்சி, ஜன.25

''சுவிப் ரிக்கற்'' விற்பனை செய்பவரின் மேசையில் வர்த்தகர் ஒருவரால் கைவிடப்பட்ட பெருதொகைப் பணம் அடங்கிய 'பேர்ஸ்' உரியவரிடம் கையளிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி புறநகர்ப்பகுதியில் வர்த்தக நிலையம் நடத்தும் ஒருவர் கடைக்குத் தேவையான பொருள்கள் வாங்குவதற்காக சாவகச்சேரி வந்து, சுவீப் ரிக்கற் பெறுவதற்காக பணத்தைக் கொடுத்துவிட்டு பேர்ஸைத் தவறுதலாக மேசை மீது வைத்துச் சென்றுள்ளார்.

சிறிது நேரத்தின் பின்னர் தேடுவாரற்று காணப்பட்ட பேர்சை எடுத்த சுவீப் ரிக்கற் விற்பனையாளர் அருகில் இருந்த கடை உரிமையாளர்களின் உதவியுடன் திறந்து பார்த்த போது அதனுள் பெருமளவு பணம் இருந்ததைக் கண்டுள்ளார். பேர்ஸினுள் காணப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சுவீப் ரிக்கற் நிலையத்துக்கு அவர் வரவழைக்கப்பட்டு பேர்ஸ் கையளிக்கப்பட்டது.

பணத்தை பாதுகாத்து ஒப்படைத்தமைக்காக உரியவரால் நன்றியுடன் வழங்கிய ஒரு தொகை பணம் வழங்கப்பட்டாலும்அதை சுவீப் ரிக்கெட் விற்பனையாளர் வாங்க மறுத்து விட்டார் என்று கூறப்பட்டது. (ம-9)

## நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

வட்டு.மூளாய் ஐக்கிய நாணய சங்கத்தின் 80 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் காலை 9.30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் க.ராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

**கிளைக்குழுக் கூட்டம்**

வடவரணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு குழு உறுப்பினர்கள் யாவரையும் சமுகமளிக்குமாறு தலைவர் வீ.பாலசிங்கம் கேட்டுள்ளார். (ம-122)

**பயிற்சிப்பட்டறை**

இலங்கை சாரணர் சங்கத்தின் சின்னங்களுக்குப் பொறுப்பான செயலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று முதல் தொடர்ந்து 3 தினங்கள் மீரிகம ஸ்ரீ.ரஸநாயக்க சாரணர் செயற்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-9)

**கலந்துரையாடல்**

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுக்கான சனசமூக நிலைய செயற்பாடு, முன்னேற்றம், எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-9)

**பொதுக்கூட்டம்**

கரணவாய் மேற்கு கல்துவம் கலைநேசன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் மாலை 5 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் பொ.குகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளன. (ம-8)

**கல்வி உதவி வழங்கல்**

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க சமூக அபிவிருத்தி மன்றின் மூலம் வசதி குறைந்த சிறுவர்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ். தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸானாவை மறந்துவிட்ட முஸ்லிம் தலைவர்கள்

சவூதி ரியாலுக்கு அடிபணிந்து முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ரிஸானாவை மறந்துவிட்டனர். ரிஸானா குறித்து உண்மையான ஆவணங்களை சவூதி அரேபிய நீதிமன்றில் கையளித்திருந்தால் அவருக்கு இந்நிலைமை ஏற்பட்டிருக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்தது.

ரிஸானா நபீக்கைப் பாதுகாப்பதற்குப் போதுமானளவு காலம் இருந்தபோதிலும் அரசு சட்டரீதியான வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டது.

ரிஸானா நபீக் தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜன் ராமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

171 நாடுகளைக் கொண்ட சர்வதேச சிறுவர் பாதுகாப்புப் பிரகடனத்தில் கையொப்பமிட்டுள்ள சவூதி, சிறுவர்களைச் சிரச்சேதம் செய்வதில்லை என உறுதியளித்துள்ளது. எனினும், ரிஸானா நபீக் சிறுவர்தான் என்பதை இவர்களால் நிரூபிக்க முடியாமல் போய்விட்டது - என்றார்.

## அவசரத்தேவை..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

இலங்கை இந்தக் குறுகிய காலப் பகுதியில் ஈட்டியுள்ளது. இதுகுறித்து நாம் பெருமையடைய வேண்டும்- என்றார்.(த)

## சர்வதேச..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

கருணாதிலக்க அமுனுகம, இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம், இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு முயற்சிகள் துரிதப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், இந்திய வீடமைப்புத் திட்டம் என்பன குறித்தும் பரஸ்பர கருத்துகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையின் முன்முயற்சியாக ஜனநாயகத்தை நிலைநாட்டுதல், மனித உரிமைகள் மேம்பாடு உட்பட்ட பல விடயங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் தெரிவிக்கப்பட்டுவரும் கரிசனைகளை இலங்கை அரசு தட்டிக்கழித்துவிட முடியாது, அவை தொடர்பில் இலங்கை ஆக்கபூர்வமான கவனத்தை செலுத்தவேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பமென்று இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தீர்வுப் பேச்சுக்களை ஆரம்பிப்பது, வடமாகாணத் தேர்தல் உட்பட்ட விடயங்களில் இலங்கை அளித்த வாக்குறுதிகளில் கணிசமான முன்னேற்றம் இல்லாமை குறித்தான புதுடில்லியின் அதிருப்தியும் இந்தச் சந்திப்பின்போது வெளிப்படுத்தப்பட்டதாக அறியமுடிகின்றது. (த)

## அரசின்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

அவ்வேளை, இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பி கருத்து வெளியிட்ட தயாசிறி, ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இல்லாததால் ஆடைக் கைத்தொழில்துறை பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. சில தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் மேலும் சில தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படும் அபாயம் உள்ளது. சண்டித்தனம் காட்டப்படுவதாலேயே ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இல்லாமல் போயுள்ளது - என்று தெரிவித்தார்.

எல்லாவற்றையும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையுடன் முடிச்சுப் போடாதீர்கள் என இவ்வேளையில் பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். (த-சி)

## மன்னாரில்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

கொண்டிருந்தார். இதன்போது அவர் மதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.அத்துடன் மடுக்கரைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருள்களை வழங்கினார். தமது நாட்டு அரசினதும், மக்களதும் சிறிய அன்பளிப்பே இந்த உதவி எனவும் அவர் தெரிவித்தார்.

மடுக்கரை கத்தோலிக்க தேவாலய வளாகத்தில் இடம்பெற்ற நிவாரணப்பொருள்கள் கையளிக்கும் நிகழ்வில் டபிள்யூ.எச்.எச் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பாபரா சிலி, நானாட்டான் பிரதேச செயலாளர் சி.ஏ.சந்திரய்யா, சேவாலங்கா மன்றத்தின் வட பிராந்தியத்துக்கான விசேட திட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி அனற் றொய்ஷ், சேவாலங்கா மன்றத்தின் மன்னார் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சி.ஏ. குபேர குமார் மற்றும் அளவக்கை பங்குத்தந்தை அருட்திரு சுரேஸ் றெவ்வல் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ -ரி)

## பீரிஸின்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

கள் எதிர்ப்புத் தெரிவிப்பது பற்றிக் கவலைப்படவில்லை என்றும், அவர்கள் வெறுப்புணர்வால் தான் அவ்வாறு செய்வதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து புதுடில்லியில், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது-

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் வெறுப்புணர்வின் அடிப்படையில் எதிர்ப்புத் தெரிவித்ததாக நான் கருதவில்லை.-

இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது எமது பொறுப்பு. ஆனாலும், தமிழ்நாட்டின் உணர்வுகளையும் நாம் மதித்து நடந்து கொள்வோம். அவர்களுக்கு தமிழ்நாட்டில் இராணுவப் பயிற்சி அளிக்காமல் தவிர்ப்போம்.-

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள இராணுவ நிலையங்களில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிக்கப்படும். இலங்கை சில நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும், தமிழர்களுக்கான புனர்வாழ்வுப் பணிகள் எதிர்பார்த்த வேகத்தில் இடம்பெறவில்லை -என்று அதிருப்பதி தெரிவித்துள்ளார். (த)

## இலங்கை மீது...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

போயுள்ளன. இந்தச் சைபர் தாக்குதல் குறித்து தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, பாதுகாப்புப் பிரிவு ஆகியன தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றன.

இலங்கைத் துறைமுகம், இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முதலான நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இணையதளங்களுக்கு இந்த சைபர் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதனால் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களிலுள்ள கணினிகளில் பதிவுசெய்து சேமித்துவைக்கப்பட்டுள்ள பல எழுத்துமூலமான ஆவணங்கள் அழிந்துபோயுள்ளன. இதனால் குறித்த நிறுவனங்கள் தமது பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணைய தளத்துக்கு இடம்பெற்றுள்ள இந்த சைபர் தாக்குதலே மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இணையத்தள பாவனையாளர்கள் இந்த சைபர் தாக்குதல் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுவதோடு, இது தொடர்பில் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்றுவருகின்றன. (த-சி)

## இனவாதத்தை...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு பகிரங்கமாக அழைப்புவிடுத்தார்.

ஜே.வி.பி. உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, நாட்டில் ஏற்பட்டுவரும் இன, மத மோதல்கள் தொடர்பாகவும், அதனைத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்டுவரும் செயற்றிட்டங்கள் என்ன என்றும் கோரி சபையில் கவனயீர்ப்புப் பிரேரணையொன்றை முன்வைத்தார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தக் கூற்றுக்கு மத விவகாரங்கள் பிரதியமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன பதிலளிக்க எழுந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அதனை ஆட்சேபித்த அநுரகுமார திஸாநாயக்க இவ்விடயத்தில் பௌத்த மதத்துக்கும், ஏனைய மதத்துக்கும் இடையில் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறவில்லை. எனவே, எனது கூற்றுக்குப் பிரதமர் அல்லது சபை முதல்வர் பதிலளித்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறினார்.

எனினும், பதிலளிக்க எழுந்த பிரதி அமைச்சர், ''சமூகங்களுக்கு இடையில் எந்த விதமான அடிப்படைவாதப் பிரச்சினையும் இல்லை. அத்தகைய முறைப்பாடுகளும் இல்லை'' என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா,

நாட்டில் ஆங்காங்கே இடம்பெற்றுவரும் கசப்பான சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி மிகவும் அவதானத்துடன் கவனித்து வருகின்றார். இந்த அடிப்படைவாத மோதல்கள் உள்நாட்டில் தூண்டப்படுகின்றனவா, அல்லது வெளிச்சக்திகளால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றனவா என்பதைக் கண்டறியவேண்டும்.

எனவே, இவ்விடயம் தொடர்பாகப் பரிசீலனை செய்து ஆவனசெய்யும் வகையில், சபையின் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அரசியல் பேதங்களுக்கு அப்பால் பொதுநல நோக்குடன் அனைவரும் பங்களிப்பை வழங்கவேண்டும் - என்று சபை முதல்வர் குறிப்பிட்டார். (த-சி)

## காணாமற்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

போர் இடம்பெறும் நாடொன்றில் காணாமற்போதல், உயிரிழத்தல், காயமடைதல் என்பவை சாதாரணமானவை. கடந்த 30 வருடங்களாக நிலவிய போர் காரணமாக இராணுவத்தைச் சேர்ந்த மூவாயிரம் பேர் காணாமற்போயுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரையில் தெரியாது.

இதேவேளை, போர் இடம்பெற்ற இறுதி இரண்டரை வருட காலப்பகுதியில் இராணுவத்தைச் சேர்ந்த 6 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 20 ஆயிரம் பேர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் அங்கவீனமுற்றுள்ளனர்.

குறிப்பிட்டதொரு பிரதேசத்தில் இரு தரப்புகளுக்கிடையில் போர் இடம்பெறும் போது அந்தப் பகுதியில் சிக்குண்டுள்ளவர்கள் உயிரிழக்க வாய்ப்பு உள்ளது. அல்லது காணாமற்போக வாய்ப்புண்டு. போர்க் காலத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளால் வடக்கில் 100 சதவீதமான நிலப்பரப்பு ஆட்கொள்ளப்பட்டிருந்தது.

அதன்போது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கென பலர் பலவந்தமாக அவ்வியக்கத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். அவர்கள் போரின் போது இறந்திருக்கலாம். ஆனால், இதுவரை அவர்கள் தொடர்பில் தகவல்கள் இல்லை.

இறுதிப் போரின் போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்த மக்களை முதலில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் இந்திய வைத்தியசாலைகளுமே பொறுப்பேற்றன. அவையே பின்னர் அந்த மக்களை படையினரிடம் அழைத்து வந்தன. அவ்வாறு படையினரிடம் அழைத்துவரப்பட்டவர்கள் பதியப்பட்டே பொறுப்பேற்கப்பட்டனர்.

இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட எவரும் இதுவரையில் காணாமல்போகவில்லை. அவ்வாறு காணாமற்போயிருப்பார்களாயின், அது இந்திய வைத்தியசாலைகளிடமோ அல்லது செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடமோ சரணடைந்தபோதோ அல்லது அதற்கு முன்னரோ காணாமல்போயிருக்க வேண்டும் - என்றார். (த-சி)

## மஹிந்தவை வீழ்த்த...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**

பராக் ஒபாமாவின் 3 பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகின்றனர். இலங்கையில் நீதியும் சட்டமும் குலைந்து போயுள்ளன என்று அமெரிக்க ஜனாதிபதிக்கு அங்கு நித்திரை கொள்ள முடியவில்லையாம்.

இலங்கை வரும் பிரதிநிதிகளிடம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவைச் சாட்சி சொல்ல வைப்பதற்கு இங்குள்ள சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் சில முகவர்களும் முயற்சிக்கின்றனர்.

ஷிராணி பண்டாரநாயக்க குற்றம் இழைத்தவர். அவர் நாடாளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் ஊடாக மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள்மூலம் பதவி நீக்கப்பட்டார்.

**சரத்பொன்சேகாவைப் பயன்படுத்தினர்**

சரத் பொன்சேகாவைப் பயன்படுத்தி சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைத் தீர்மானத்தை நிறைவேறச் சாட்சிக்காரராகவும் பாவித்தார்கள். அவர் இலங்கைக்கு எதிராகவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் இலங்கை ஊடகங்களில் தெரிவித்த கருத்தே சில வெளிநாட்டு சக்திகளுக்கு சாட்சியாக அமைந்தன.

மேலும் இலங்கைக்கு எதிராக வேண்டுமென்று போர்க்குற்றப் பழிசுமத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் நிறைவேற்றினார்கள். சில வெளிநாடுகளில் உள்ள வெள்ளைப் புலிகளும் இலங்கைக்கு தண்டனை விதிக்க அந்த நாட்டில் வாழும் இலங்கைப் புலிகளும் மிகவும் பிரயத்தனம் செய்துவருகின்றன.

**பின்லேடனைப் பிடிப்பதற்கு அமெரிக்கா முன்னெடுத்த திட்டங்கள்**

பின்லேடனைப் பிடிப்பது எவ்வாறு? பின்லேடன் பாகிஸ்தானில் உள்ளார் என அமெரிக்காவின் இரகசியத் துப்பு தேடுபவர்கள் பாகிஸ்தானுக்குள் உட்புகுந்தனர். அதன்பின் பாகிஸ்தான் முழுவதிலும் பின்லேடனைப் பிடிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தனர்.

பாகிஸ்தானுக்கு கடன் வழங்கும் திட்டமொன்றை ஆரம்பித்து அதனை முழு நாட்டுக்கும் நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் செயற்பட்டனர். அதன் பின்னர் பாகிஸ்தானில் வாழும் மனிதர்களிடையே ஒரு பயங்கரத் தொற்றுநோய் பரவியுள்ளதாகச் செயற்படத் தொடங்கினர்.

அதனைக் கண்டுபிடிப்பதற்குப் பாகிஸ்தானில் வாழும் சகல மக்களுக்கும் நாடு முழுவதிலும் இரத்த பரிசோதனை நடத்தப்படல் வேண்டும் எனச் செயற்பட்டனர். அதற்காக ஒரு கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தினர்.

அந்த இரத்தப் பரிசோதனைகளை அமெரிக்காவுக்கு கொண்டுசென்றனர். அதற்காக பாகிஸ்தான் இரத்தப் பரிசோதனை அதிகாரியை அமெரிக்காவுக்கு அழைத்தனர். அவருக்குப் பெரும்தொகைப் பணம் வழங்கினார்கள். அதில் பின்லேடனின் இரத்தப் பரிசோதனை உள்ளதா எனப் பரிசோதித்தனர். அவர் பாகிஸ்தானில் இருப்பதை உறுதிப்படுத்தினர். அவரது டி.என்.ஏ. இரத்த பரிசோதனை மூலம் அவரது முகவரியையும் கண்டுபிடித்தனர். அமெரிக்கப் படையினர் பின்லேடன் வாழும் வீட்டைச் சுற்றிவளைத்து அவரைப் படுமோசமாகக் கொலை செய்தனர். இவ்வாறு சதித்திட்டங்களைச் செயற்படுத்துபவர்கள்தான் அமெரிக்கர்கள்.

**போரை நிறுத்தும் நிர்ப்பந்தத்துக்கு ஜனாதிபதி தலை சாய்க்கவில்லை**

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலும் இவ்வாறே பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சர் மற்றும் பேர்னாட் குவான்கர் எனும் இரண்டு அமைச்சர்களும் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க முற்பட்டனர். அந்தத் தருணத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்புக்கு வெளியே சென்று எம்பிலிப்பிட்டியவில் தங்கிநின்று அவர்களை அங்கு அழைத்து வரும்படி உத்தரவிட்டிருந்தார்.

அவர்களை திறந்த அரங்கில் ஒரு மரத்துக்குக் கீழ் இருக்கச்சொல்லியே ஜனாதிபதி அவர்களைச் சந்தித்து கொழும்புக்கு வழியனுப்பி வைத்தார். போரை நிறுத்துவதற்கு அவர்கள் விதித்த நிர்ப்பந்தங்களுக்கு ஜனாதிபதி தலைசாய்க்கவில்லை. அந்தச் சம்பவ வடுக்கள் இன்னும் அவர்களது நெஞ்சில் இருந்து அகலவில்லை.

**ஒபாமாவின் பிரதிநிதிகள் தீட்டும் திட்டங்கள்**

அதுமட்டுமல்ல, அமெரிக்கா சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்கி மஹிந்த அரசைக் கவிழ்ப்பதற்குப் பெரும் திட்டம் தீட்டி அவருக்குத் தேவையான நிதி மற்றும் ஆலோசனைகளையும் வழங்கினர்.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைச் சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக யோசனைகளைக் கொண்டுவந்து சர்வதேச நீதிமன்றத்தில் அதனைப் பரிசீலிப்பதற்கு சில அதிகாரிகளை நியமித்து, அதனை நடைமுறைப்படுத்தி, 2015இல் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை போட்டியிட முடியாதவாறு தடுத்து நிறுத்தி இந்த அரசை இல்லாமல் செய்வதற்கே அமெரிக்காவில் ஒபாமாவின் பிரதிநிதிகள் திட்டம் தீட்டி வருகின்றனர்.

அதன்பின்னர் இந்த நாட்டின் இராணுவத்தினரையும் போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வழங்குவதற்கே இவர்கள் முயற்சிக்கின்றனர்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் காணியிலுள்ள குடும்பங்களால் அபிவிருத்தி வேலைகளில் தடைகள்

## அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் இந்தக் கதி

அக்கராயன், ஜன.25

பாடசாலைக்குரிய காணியில் குடும்பங்கள் சில வெளியேறாது தொடர்ந்தும் வசித்து வருவதால் அபிவிருத்தி வேலைகள் தடைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பாடசாலைக்குரிய காணியில் குடியிருக்கும் குடும்பங்களை வேறு இடத்தில் குடியமர்த்துமாறு பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், கரைச்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கு இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியில் குடியிருக்கும் குடும்பங்களினால் பாடசாலையை அபிவிருத்தி செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அபிவிருத்திச் சங்கத்தினால் கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடும்பங்கள் பாடசாலைக்குரிய காணியில் தொடர்ந்தும் நிலை கொண்டிருந்தால் புதிய கட்டடங்கள் அமைப்பதிலும் பாடசாலையை இயக்குவதிலும் ஏற்பட்டுள்ள இடர்கள் தொடர்பாகவும் இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் இரண்டு புதிய பாடசாலைகள்

அக்கராயன், ஜன.25

கிளிநொச்சி கல்வி வலயத்தில் இரு புதிய பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

பளையில் பளை இந்து ஆரம்ப வித்தியாலயம். கரைச்சி கிருஷ்ணபுரத்தில் இராமகிருஷ்ண வித்தியாலயம் என்பனவே அந்த இரண்டு பாடசாலைகளுமாகும்.

இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபராக திருமதி சூ.இராசேந்திரமும் பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபராக செல்வி வேலுப்பிள்ளை பாலபத்மினியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு பாடசாலைகளும் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# வவுனியாவில் திருடர்கள் தொல்லை

வேப்பங்குளம்,ஜன.25

வவுனியாவிலுள்ள சில கிராமங்களில் கோழித் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப் படுவதாகத் தெரியவருகினறது.

ஆசிகுளம், கல்நாட்டியகுளம், வேப்பங்குளம் ஆகிய கிராமப் பகுதிகளிலேயே கோழித்திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

# 28 வருடங்களாக வசிக்கும் எம்மை வெளியேற்ற முயற்சி

## உடையார்கட்டில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்

*முல்லைத்தீவு, ஜன.25*

*முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியில் கடந்த 28 வருடங்களுக்கும் மேலாக குடியிருக்கும் தம்மைச் சிலர் திட்டமிட்டு வெளியேற்று வதற்கு முயற்சிகள் மேற்கொள்வதாக அங்கு வசிக்கும் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.*

உடையார்கட்டு மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள காணித்துண்டுகளில் சுமார் 15 குடும்பங்கள் கடந்த 28 வருடங்களுக்கும் மேலாக வசித்து வருகின்றன.

குறிப்பிட்ட சில குடும்பங்களின் காணிகள் , உடையார்கட்டு ஆரம்ப வித்தியாலயத்துக்கென ஒதுக்கப்பட்டு அந்தக் காணிகள் கையேற்கப்பட்டு விட்டன.

இந்த நிலையில் மேலும் இந்தப் பகுதியில் குடியிருக்கின்ற மூன்று குடும்பங்கள் தம்மை வெளியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தமக்குரிய சகல வாழ்வாதாரத் திட்டங்களும் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். மேலும் குறித்த காணிகளில் தம்மால் நடப்பட்ட பயன்தரு மரங்கள் தற்போது பயன்தரும் நிலையில் உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பத்தில் அப்போதைய அரச அதிபரின் அனுமதியுடன் தாம் நிரந்தர வீடுகளை அமைத்துள்ளதாகவும் தற்போது தாம் இங்கிருந்து வெளியேற்றப்பட்டால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் உதயனுக்குத் தெரிவித்தனர். (க-6)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 1,441 சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு

புதுக்குடியிருப்பு,ஜன.25

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தித் திட்டத்தைத் நடைமுறைப்படுத்துவதற்கென முதல் கட்டமாக ஆயிரத்து 441 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இறுதிக் கட்ட போரின் பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களிலிருந்தே இப்பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாணிக்கபுரம், தேவிபுரம், மன்னா கண்டல் வள்ளுவர்புரம், விசுவமடு மேற்கு மற்றும் விசுவமடு கிழக்கு ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான உதவிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலர் ஐ.பிரதாபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும், அமைச்சருமான ரிஷாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் உட்பட திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-400)

# கைகலப்பில் முடிவடைந்த வாழைக்கன்று விநியோகம்

கிளிநொச்சி,ஜன.25

கிளிநொச்சி கண்டாவளையில் வாழைக்கன்றுகள் வழங்குவதில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்ததாகத் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி கண்டவளைப் பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாய போதனாசிரியர் அலுவலகத்தில் வைத்து வழங்க வேண்டிய வாழைக்கன்றுகள் தனியார் ஒருவரின் வீட்டில் வைத்து வழங்கும் போது இந்தக் கைகலப்பு நிகழ்ந்ததாக அறியமுடிகின்றது.

கண்டாவளைப் பிரதேசத்தில் FAO நிறுவனத்தினால் விவசாயத் திணைக்களத்தினூடாக கடந்த வாரம் ஆயிரம் வாழைக்கன்றுகள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இவை அந்தப் பிரதேசத்தின் கமக்கார அமைப்பினூடாகவே வழங்கப்பட்டதாகவும், ஆனால் முரசுமோட்டை விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டாமல் தன்னிச்சையாக தனியார் வீடொன்றில் வைத்து அவற்றை வழங்கியபோது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்ததாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக அந்தப் பகுதியின் கமக்கார அமைப்பின் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, இது தொடர்பாகத் தமக்கு எதுவுமே தெரியாது என்றும் அலுவலகத்தில் வைத்து வழங்க வேண்டிய வாழைக்கன்றுகளை தனியார் வீடொன்றில் வைத்து வழங்கியமை முறையற்றது என்றும் தெரிவித்தார். (க-6)

# மிதிவெடி தொடர்பாக விழிப்பூட்டும் செயற்பாடுகளில் 'ஷேட்' நிறுவனம்

வவுனியா 'ஷேட்' நிறுவனம் மிதிவெடி அபாயம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

வவுனியா மாவட்ட திட்ட இணைப்பாளர் இ.உமாபதி தலைமையிலான குழுவினர் கிளிநொச்சியில் கரைச்சி, பூநகரிப் பிரதேசங்களிலும் வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை மருதமடு, பாலமோட்டை, கள்ளிக்குளம் பகுதியிலும் மீள்குடியமர்ந்த மக்களுக்கு மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்தப் பகுதிகளில் இன்னமும் மிதிவெடி அகற்றப்படாத இடங்கள் பலவுள்ளன.

இதனால் சிறுவர்கள் விளையாடும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறும் சந்தேகத்துக்கு உரிய வகையில் காணப்படும் பொருள்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டாம் எனவும் நிலத்தின் கீழ் காணப்படும் வயர் மற்றும் இரும்புப் பொருள்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்குமாறும் இந்த நிறுவனம் விழிப்புணர்வு தொடர்பான கருத்துக்களை மீள்குடியமர்ந்த மக்களுக்குக் கூறி வருகின்றது.

(க-402)

**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி**
(தேசிய பாடசாலை)

**இல்ல மெய்வல்லுநர் போட்டி 2013**

காலம் - 25.01.2013 வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணி

இடம் - கல்லூரி மைதானம்

தலைவர்
திரு.S.சிவநேஸ்வரன் (அதிபர்)

பிரதம விருந்தினர்
திரு.S.சந்திரராஜா
(வலயக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்
திரு.S.குருபாதம்
(முகாமையாளர், கொமர்ஷல் வங்கி -மானிப்பாய்)

கௌரவ விருந்தினர்
திரு.S.உதயபாலன்
(ஓய்வு பெற்ற உப அதிபர்,மானிப்பாய் இந்துக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம்.

**காலத்தால் மறவாத 18ஆவது ஆண்டு**



**அமரர் ஏரம்பு சோதிலிங்கம்**

(தலைவர் மதிஒளி ச.ச.நிலையம்,
பண்டிதர் நூல் நிலையம்,
இணக்க சபை உறுப்பினர், மண்டைதீவு)

சோதி என்னும் எழில் நாமம் சொன்னால்
மண்டைதீவு எனும் பெயர் துலங்கிடுமே
பாமரர் முதல் சட்டம் படித்தவர் வரை
புகழ் நாமம் தெரிந்திடுமே
புன்னகை தவழும் அழகு முகம் யாவரையும்
கவரும் பேச்சாற்றல் ஏழைமுதல் எதிரி
வரைகவர்ந்டுமே மானிடர்களை மயக்கிய
மன்னவரை மனம் பொறுக்காமல்
காலனவன் கவர்ந்து விட்டான்
ஓம் சாந்தி!

27, கருவேலடி லேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது நிறுவனத்தின் சகஊழியர் செல்லத்துரை அன்ரனி யோகராசா (ஓடக்கரை பருத்தித்துறை) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

ஸ்ரீமகா விஷ்ணு
70, 72 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பவானி ஸ்ரோர்ஸ்
இராச வீதி, நீர்வேலி.

(உரிமையாளர்களும், ஊழியர்களும்)

**நீங்கா நினைவுகளுடன்**

5ஆம் ஆண்டு



19ஆம் ஆண்டு



| சின்னையா இராசதுரை | | இராசதுரை இராஜேஸ்வரன் |
|---|---|---|
| 08.07.1931 | பிறப்பு | 26.08.1968 |
| 22.01.2008 | இறப்பு | 03.01.1994 |

திதி 25.01.2013

எத்தனை உறவுகள் எமக்கு இங்கு இருந்தாலும்
நித்தம் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் உங்கள்

நாவற்காடு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## சந்திரா சிவகுருநாதன்

அன்னை மடியில்
21.12.1948

ஆண்டவன் அடியில்
19.01.2011

திதி 25.01.2013 பூர்வபட்ச சதுர்த்தசி

சாந்தத்தின் சத்தியகுலப் பெண்மையே
சரிபாதி இடம் தந்தாய் உன் வாழ்வினிலே
காலனவன் கொண்டு சென்றான் உன்உயிரை
உன் முன்னே கதறுகிறோம் புரியலையா
எமக்குத் தாலாட்டு இசைத்தாயே
உனக்கு நாம் இசைப்பது கானமே
அன்புக் கடலில் நீந்த வைத்தாயே
மறுகிமிடம் மறைந்து விட்டாயே பூமியை விட்டு
கண்ணீர் மல்க கதறுகின்றோம்
ஒரு முறை வந்து செல்லாயோ தாயே
எம்மைத் தூக்கி வளர்த்த உன்கைகளால்
ஒருமுறை அணைக்க மாட்டாயா தாயே

ஏங்கித் தவிக்கிறோம் அன்னையே
எம்மைத் தூக்கி அணைப்பாய் ஒருமுறை
நீ மறைந்து இரண்டு வருடம்!
மீண்டும் அம்மாவாக வந்து உதி எமக்காக!

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்.**

"குருஸ்தான்", நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(28540)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காத்திருக்கும் போக்கைத் தமிழர்கள் மாற்றிக் கொள்ள வேண்டிய வேளை இது

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அவசியம் சர்வதேசத்தினால் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச தரப்புக்கும் இடையிலான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. போர் முடிவடைந்து தற்போது மூன்றரை வருடங்கள் கடந்துவிட்டன. ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தற்போது 10 மாதங்கள் கடந்துவிட்டன. இன்னமும் இரண்டு மாதங்களில் ஜெனிவாவில் இலங்கை விவகாரம் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. ஆனால் இலங்கையில் நல்லிணக்க முயற்சி இதுவரை ஓர் அங்குலம் கூட நகரவில்லை. முட்டுக்கட்டையை நீக்குவதற்கு ஏற்புடைய நியாயமான ஆலோசனைகூட முன்வைக்கப்படவில்லை.

2011 இல் பேச்சுகள் இடம்பெற்ற வேளையில் அரச தரப்பு வழங்கிய உறுதிமொழிகளில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இருந்தபோதிலும் கூட்டமைப்பு பேச்சுகளில் தொடர்ந்து பங்குபற்றி வந்தது. அரசு இருந்தாற்போலிருந்து திடீரெனத் தெரிவுக்குழு என்ற பொறியை முன்வைத்தது. பேச்சுகளில் முட்டுக்கட்டை ஏற்பட அதுவே பிரதான காரணம். அரச தரப்புக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகளில் இணக்கம் காணப்படும் விடயங்கள் பின்பு தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு விடப்பட வேண்டும் என்கிறது கூட்டமைப்பு. ஆனால் அதனை அரச தரப்பு ஏற்கவில்லை. பேச்சுகள் நடைபெறும் போதே தெரிவுக்குழுவும் இயங்கவேண்டும் என்கிறது அரசாங்கத் தரப்பு. இந்த இழுபறி காரணமாகப் பேச்சுகள் முறிவடைந்து ஒருவருடம் கடந்தாயிற்று.

இந்த நிலையில், இலங்கையில் அரசின் நல்லிணக்க முயற்சி தோல்வி கண்டுள்ளதை இந்தியாவில் வைத்து, அரசின்சார்பில் முதல் தடவையாக ஒப்புக்கொண்டுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

'ஆசியாவின் எழுச்சியும் இலங்கையின் வகிபாகமும்' என்ற தலைப்பில் டில்லியில் உள்ள பாதுகாப்புக் கற்கை மற்றும் ஆய்வுக்கான நிறுவனத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ள ஏனைய சில கருத்துகள் வருமாறு:-

* கூட்டமைப்புடனான பேச்சில் குறிப்பிட்ட சில விடயங்கள் இனம்காணப்பட்டன. தெரிவுக்குழுவில் அந்த விடயங்கள் ஆராயப்படும்.

* முப்பது ஆண்டு காலப் பிரச்சினைக்கு மூன்றரை ஆண்டுகளில் தீர்வு கண்டுவிட முடியும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

* பெரும்பாலான தமிழ் மக்கள் வடக்கு, கிழக்குக்கு வெளியேதான் வாழ்கிறார்கள். எனவே, அதிகாரப் பகிர்வை ஒரு முக்கிய விவகாரமாக எடுத்துக்கொண்டு பேசவேண்டிய தேவை கிடையாது.

டில்லியில் அமைச்சர் பீரிஸ் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் வெளியிட்டுள்ள மேற்கண்ட கருத்துகள் மூலம் அரசியல் தீர்வு, நல்லிணக்கம் ஆகியவற்றில் இலங்கை அரசு, இன்னமும் உறுதியான நிலையில் இல்லை என்பது தெட்டத்தெளிவாகப் புலனாகிறது.

வடக்கு, கிழக்குக்கு வெளியே கூடுதலான தமிழர்கள் வாழ்வதால் அந்தப் பகுதிகளுக்கு அதிகாரப் பகிர்வு முக்கியம் அற்றது என்ற பீரிஸின் விதண்டாவாதம் சரியாக இருந்தால் இன்று பாகிஸ்தான் என்ற ஒரு நாடே இருந்திருக்க முடியாது. பிரிவினையின் போது பாகிஸ்தானை விட இந்தியாவிலேயே கூடுதலான முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். இன்றும் அதே நிலைமைதான். இலங்கையில் வெளிநாட்டுப் படை எடுப்புகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆண்டார்கள் என்பது சரித்திரம். அதற்காகத் தற்போது அவர்கள் தனிநாடு கோரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வைத்தான் கேட்கிறார்கள்.

அடிப்படைப் பிரச்சினைகளுக்கு பேச்சுகளில் தீர்வு எட்டப்படாத நிலையில், தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு அவற்றை முன்வைப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை எட்ட முடியாது. தெரிவுக்குழுவில் தமிழர் பிரச்சினை குறித்த முடிவுகளை அரசுக்கு ஆதரவானோர்தான் பெரும்பான்மையாக இருந்து தீர்மானிக்கப்போகிறார்கள்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்த தெரிவுக்குழுவும் இத்தகைய விதத்திலேயே செயற்பட்டது. அதனாலேயே தமிழர்களை அரசியல் ரீதியாகத் தோற்கடிப்பதற்கான இறுதிப்பொறியே இந்தத் தெரிவுக்குழு என விமர்சிக்கப்படுகிறது.

இலங்கையின் வரலாற்றில் கடந்த காலங்களில் பண்டா - செல்வா ஒப்பந்தம் மூலமும், டட்லி- செல்வா ஒப்பந்தம் மூலமும், ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் மூலமும், நோர்வேயின் அனுசரணையுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் மூலமும் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வி கண்டுவிட்டன. தற்பொழுது அரச தரப்பு உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தெரிவுக்குழு மூலம் தீர்வுகாண முயற்சிப்பது என்பது முழுக்க முழுக்க கேலிக்கூத்து என்பதனை அனைத்துலகமும் உணர்ந்திருக்கும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென தனியாக ஒரு தெரிவுக்குழுவை நியமித்துவிட்டு, நல்லிணக்க முயற்சிகள் தோல்விகண்டுவிட்டதாக அமைச்சர் பீரிஸ் டில்லியில் தெரிவித்திருப்பது சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு கபட நாடகமேயன்றி வேறெதுவும் அல்ல.

இந்தியா உட்பட அனைத்துலக நாடுகளால் தனது குயுக்தியை புரிந்துகொள்ள இயலாது என்று எண்ணி, இலங்கை அரசு செயற்படுவதும், அமைச்சர் பீரிஸ் போன்றவர்கள் பிரசாரம் செய்வதும் காலத்தை விழுங்குவதற்கான உள்நோக்கம் கொண்டதே என்பதில் எள் அளவிலும் சந்தேகம் இல்லை.

சிங்கள அரசியல்தலைவர்கள், தமிழர்களையும் அனைத்துலகத்தையும் எத்தனை காலத்துக்குத்தான் ஏமாற்றப் போகிறார்கள், ஏய்க்கப்போகிறார்கள் என்று பொறுத்திருக்கும் நிலைப்பாடு மாற்றப்பட வேண்டும். அத்தகைய ஒரு நிலைப்பாட்டை தமிழ் மக்கள் மாற்றிக் கொள்ள வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது. இதுவே இன்றைய யதார்த்த நிலையும் ஆகும்.

# நல்லிணக்க முயற்சிகள் தோல்வி டில்லியில் ஒப்புக்கொண்டார் பீரிஸ்

டில்லி,ஜன.25

விடுதலைப் புலிகளுடனான 30 ஆண்டுகால ஆயுத மோதல்களின் பின்னர், மீளிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

கட்டுப்படுத்தும் முயற்சிகள் மற்றும் தீர்வுத் திட்டங்களுக்கு மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கு எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படாமை ஆகியனவே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

டில்லியில் செவ்வாய்க்கிழமை மாலை பாதுகாப்புக் கற்கைகள் மற்றும் ஆய்வு நிலையத்தில், 'ஆசியாவின் எழுச்சியும் இலங்கையின் பங்கும்' என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் கடந்த காலங்களில், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதில் அரசியல் ஒருமைப்பாடு இருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் நான் சமர்ப்பித்த ஒரு யோசனையை எதிர்க்கட்சிகள் தீயிட்டு எரித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களில் குறிப்பிட்ட விவகாரங்கள் இனங்காணப்பட்டன. அவை குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துரையாடப்பட வேண்டும். விரைவில் ஒரு தீர்வு எட்டப்படும் என்று நம்புகிறேன்.

எவ்வாறாயினும், அதிகாரப் பகிர்வு விவகாரத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பெரும்பாலான தமிழ் மக்கள் வடக்கு, கிழக்குக்கு வெளியேதான் வாழ்கிறார்கள். எனவே, இதை ஒரு முக்கிய விவகாரமாக எடுத்துக் கொண்டு பேசவேண்டிய தேவை இல்லை.

இலங்கை தனது சொந்த வழியிலேயே எல்லா சவால்களையும் எதிர்கொள்கிறது. 30 ஆண்டுகால இனமுரண்பாட்டுக்கு, விடுதலைப் புலிகளுடனான போர் முடிந்த மூன்றரை ஆண்டுகளில் தீர்வை எட்ட முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

எனினும், பொருளாதார, அபிவிருத்தி சார்ந்த துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக, போரால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளான, வீதிகள், நெடுஞ்சாலைகள், ரயில், தொலைத் தொடர்பு வலையமைப்புகள் மீளவும் கட்டியெழுப்பப்படுகின்றன. ரயில் பாதைகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவுகிறது.- என்றார்.

பின்னர், அங்கு எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அவர்,

பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணைத்துக் கொள்ள அரசு முயற்சிக்கிறது. அது விரைவிலோ அல்லது பின்னரோ நடக்கும் என்று நம்புகிறோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தை விடவும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவை இப்போது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் பல நாடுகள் தீவிரவாதப் பிரச்சினையை எதிர்கொள்கின்றன. தெற்காசிய நாடுகளுக்கு மத்தியில் பெரியளவில் பொருளாதார ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.- என்று கூறினார் பீரிஸ். (ம)

# பெரும்பான்மையின ஒப்பந்தகாரர்களால் முடக்கப்படும் அபிவிருத்திப் பணிகள்

### விசனம் தெரிவிக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

கொழும்பு,ஜன.25

வடமாகாண குளங்களின் திருத்த வேலைகள் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ்வரும் வீதிகளின் திருத்த வேலைகள் தென்பகுதி பெரும்பான்மையின ஒப்பந்தகாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டதால், வேலைகள் இடை நடுவில் கைவிடப்பட்டும் முழுமை பெறாமலும் உள்ளன.

இதனால் வடமாகாண அபிவிருத்திப் பணிகள் முடங்கியுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந. சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமாகாண வீதி புனரமைப்பு மற்றும் நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைக்கும் வருடாந்தப் பணிகள், தென்பகுதிப் பெரும்பான்மையின ஒப்பந்தகாரர்களிடமே ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

அரசின் உயர்மட்ட அமைச்சின் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் இந்த ஒப்பந்தகாரர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

இவர்கள் தமது வேலைகளை இடைநடுவில் நிறுத்துவதுடன் இவர்களால் மேற்கொள்ளப்படும் திருத்தவேலைகள் முன்னேற்றமின்றியும் உள்ளன.

வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தால் ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கப்பட்ட குளத் திருத்த வேலைகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

வவுனியா கல்மடுக்குளம் 46 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பந்தம் ஏற்கப்பட்டு அரைவாசி வேலையுடன் நிறுத்தப்பட்டுள்ளது. சேமமடுக்குளம் 43 மில்லியன் ரூபா ஒப்பந்தத்தில் இன்னமும் அதன் அணைக்கட்டு, வாய்க்கால் வேலைகள் முழுமை பெறவில்லை.

மன்னாரில் பண்டிவிரிச்சான் குளம் 79 மில்லியனுக்கும் பெரிய மடுக்குளம் 80 மில்லியனுக்கும் மற்றும் முள்ளிக்குளம் 50 மில்லியனுக்கும் முடிவுறவில்லை.

துணுக்காயில் வவுனிக்குளம் 376 மில்லியன் ரூபாவுக்கு வேலைகளைப் பொறுப்பேற்றும் கடந்த இரண்டு வருடங்களில் இதுவரை 30வீதப் பணியையே நிறைவு செய்துள்ளது.

வவுனியாவின் ஏ-9 வீதியின், தாண்டிக்குளத்திலிருந்து ஆரம்பமாகும் தாண்டிக்குளம் கல்மடு வீதியின் 15 கிலோ மீற்றர் பகுதி குன்றும் குழியுமாக பல வருடங்களாகக் காணப்படுகின்றது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் வரும் இந்த வீதியின் பத்தினியார் மகிழங்குளம், பாலையடிச்சந்தி வரையான ஒன்றரைக் கிலோமீற்றர் திருத்த வேலைகள் 2011 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு, 2012 ஒகஸ்ட் மாதம் முடிவுறும் விசேட திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது அங்கு கல் மற்றும் சிமெந்து உலர் கலவையிடப்பட்டு அரைகுறையாக வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

புதிது புதிதாக அரசினால் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக வடமாகாண சபையின் 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தினூடான குறைந்தபட்ச அதிகாரங்களைப் பறித்து மத்தியில் குவித்துள்ள "திவிநெகும" வாழ்வின் எழுச்சி மற்றும் வறுமையற்றதோர் இலங்கையை உருவாக்கும் நோக்குடனான சகல அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வழங்கப்படும் முன்னுரிமை மேலும் வடக்கின் அபிவிருத்தியை சிதைத்து விடுமோ என்ற ஐயத்தையே தோற்றுவித்துள்ளது.-என்றுள்ளது. (ம-400)

## வியாபார முகாமைத்துவ 'ஒன்லைன்' கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி கற்கை நெறியூடாக வியாபார முகாமைத்துவம் தொடர்பாக ஒன்லைன் மூலமான கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எந்தப் பாகத்திலும் இருந்தும் பட்டக்கற்கை நெறியை பூர்த்தி செய்யலாம் என்று வெளிவாரி பரீட்சை அலகு கல்வி இணைப்பாளர் கந்தையா சிவராசா தெரிவித்துள்ளார்.

பீ.பீ.எம்.என்ற வியாபார முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தை முதன் முதலில் 'ஒன்லைன்' மூலம் தமிழில் பட்டக் கற்கையை பூர்த்தி செய்யலாம்.

க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களைப் பெற்ற எவரும் இந்தக் கற்கை நெறியில் இணையலாம்.

தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உயர்கல்வி அமைச்சால் இந்தக் கற்கை நெறி செயற்படுத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் பேராசிரியர் கே.தேவராஜா, முகாமைத்துவ பீடாதிபதியுடன் தொடர்பு கொள்ளலாம் என்று கூறப்பட்டது. (ம-50)

## பன்றித்தலைச்சி அம்மன் பொங்கல்; ஆலோசனைக் கூட்டம் புதனன்று

பிரசித்தி பெற்ற மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

மார்ச் 18,25 ஏப்ரல் 1,8 ஆகிய நான்கு திங்கட்கிழமைகளில் நடைபெறவுள்ள பொங்கல் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, இலங்கை போக்குவரத்துச் சபை, தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கம், ஆலய தர்மகர்த்தா, பிரதேச செயலக சம்பந்தப்பட்ட துறைசார் அலுவலர்கள், சாவகச்சேரி பொலிஸார் உட்பட பலர் கூட்டத்துக்கு அழைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து வருடங்களாக தறப்பாள் கொட்டகையே எமக்குத் தஞ்சம்

## வேதனையுடன் கூறுகின்றனர் கைவேலி மக்கள்

முல்லைத்தீவு,ஜன 25

புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் மீள் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தாம் கடந்த ஐந்து வருடங்களாக தறப்பாள் கூடாரங்களிலேயே காலத்தைக் கழித்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் வசித்து வந்த தாம் கடந்த 2008 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்ததாக இவர்கள் கூறுகின்றனர்.

தமது வீடுகள் முழுமையாக அழிக்கப்பட் டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் 2008 ஆம் ஆண்டு எல்லா வற்றையும் இழந்து முள்ளிவாய்க்கால், மாத்தளன் அம்பலவன்பொக்கணை எனப் பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்து இறுதியாக செட்டிகுளம் மெனிக்பாம் முகாமுக்குச் சென்றதாகத் தெரிவிக்கும் இவர்கள் 2012 ஆம் ஆண்டு வரையும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர முடியாத நிலையில் மிகச்சிறிய தறப்பாள் கொட்டில்களில் அடைபட்டிருந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

பின்னர் கடந்த ஆண்டு தம்மை மீள் குடியமர்த்தும் போது ஐந்து தடிகளும் ஒரு தறப்பாளும் மட்டுமே தமக்கு வழங்கப்பட்டன என்று இவர்கள் கூறுகின்றனர்.

தற்போது அந்தத் தறப்பாளும் உக்கி உருக்குலையும் நிலைக்கு வந்து விட்டது. ஆனால் தற்காலிக வீடுகளும் இல்லை, நிரந்தர வீடுகளும் இல்லை. குறிப்பிட்ட சில நிறுவனங்கள் ஏதோ சில தேவைகளின் அடிப்படையில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களுக்கு தற்காலிக வீடுகளை வழங்கியுள்ளபோதும் அறுபது வீதமானவர்கள் தறப்பாள் கொட்ட கைகளிலேயே தொடர்ந்து வாழ்ந்து வருவதாகவும் இந்த மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

இவ்வாறு கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஐந்து வருடங்கள் தறப்பாள் கூரைகளைக் கொண்ட கொட்டில் வீடுகளிலேயே பெரும் அவல வாழ்வு வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-6)

## மின்சாரத்துக்காக காத்திருக்கும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள்

புதுக்குடியிருப்பு, ஜன.25

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்து பல மாதங்கள் கடந்த நிலையிலும் மின்னிணைப்பு வழங்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த கால போர் இடர்களால் இடம் பெயர்ந்து பின் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களே தாம் மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பப்படிவங்களை முல் லைத்தீவு மின்சார சபை அலுவலகத்தில் ஒப்படைத்து பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் உட்பட பலரும் மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் ஆனால், மின்சாரசபை ஊழியர்கள் மதிப்பீட்டைத் தயாரித்துச் சென்ற போதும் மேற்கொண்டு எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு, கைவேலி, சிவநகர் ஆகிய பகுதிகளில் உள்ள சில இடங் களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மின்சார சபையினர் காலம் கடத்தி வருகின்றனரே தவிர உருப் படியாக எந்தவித வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை என வும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-410)

## சிறப்புச் சித்தி பெற்ற மூன்று மாணவர்களுக்கு அன்பளிப்பு

புதுக்குடியிருப்பு,ஜன.25

கடந்த வருடம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரீட்சையில் தோற்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு சமூக நலன் விரும்பி ஒருவரால் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வள்ளிபுனம் இனிய வாழ்வகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இந்த மாணவர்களுக்கு தலா 50ஆயிரம் ரூபா வீதம் பணமாக காரைநகரைச் சேர்ந்த எஸ்.கதிர்காமநாதன் என்ற சமூக நலன் விரும்பியால் வழங்கப்பட்டுள்ளது.

வள்ளிபுனம் இனிய வாழ்வகத்தில் தங்கி கல்வி கற்கும் விழிப்புலன் அற்ற மாணவர்களின் நலன் கருதி இவரால் 55 லட்சம் ரூபா செலவில் பெண்கள் விடுதி ஒன்றும் அமைக்கப்பட் டுள்ளது. சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் விளை யாட்டு மைதானம் ஒன்றை யும் அவர் அமைத்துக் கொடுத் துள்ளார்.

அதனை இனிய வாழ்வகத்தின் நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வில் வைத்து மாணவர்களுக்கான பணம் கையளிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இனிய வாழ்வகத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.ஜெயகுலராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

சமூக நலன் விரும்பி எஸ்.கதிர்காமநாதன், கிளிநொச்சியில் முதியோர் நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-400)



முரசுமோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற கால்கோள்விழாவின் ஆரம்பத்தில் விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அருகிலுள்ள ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட வேளை.... (க-412)

## குருமன் காடு அபி. சங்கம் இயங்காததால் பாதிப்பு

குருமன்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைக் கப்பட்டு நீண்ட நாள்களாகியும் அது சீராக இயங்குவ தில்லை.

வவுனியா,ஜன.25

வவுனியா, குருமன்காடு கிராம அபி விருத்திச் சங்கம் சீராக இயங்காததால் அந்தப் பகுதியின் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படு வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குருமன்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைக்கப்பட்டு நீண்டநாள்களாகியும் அது சீராக இயங்குவதில்லை. அத்துடன் பொதுக்கூட்டங்களும் உரிய முறையில் இடம் பெறுவதில்லை. அதனால் இந்தப் பகுதிக்கு கிடைக்கவேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், அயல்கிராமங் களான வைரவ புளியங்குளம், வேப்பங்குளம் ஆகிய பகுதியிலுள்ள அபிவிருத்திச் சங்கங்களிடம் செல்கின்றன.

எனவே இந்தப் பகுதி மக்களின் நலன் கருதி கிராம அபிவிருத்திச் சங்கத்தை சீராக இயங்க வைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக் கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)

## பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட வீதி வேலைகள் இடைநடுவில்

புதுக்குடியிருப்பு,ஜன.25

புதுக்குடியிருப்பில் பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட வீதி புனரமைப்புப் பணிகள் ஸ்தம்பித்துள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல வீதிகளை கொங் கிறீற் வீதிகளாக அமைப் பதற்கான வேலைகள் தென் பகுதி ஒப்பந்த காரரிடம் ஒப் படைக்கப்பட்டது.

திம்பிலி, கோம்பாவில், ஸ்ரீசுப்பிரமணிய வித்தியா சாலைமற்றும் பிரதேச செயலகத்துக்கு அண்மை யில் உள்ள வீதி மற்றும் 4 கிலோ மீற்றர் நீளமான உள்ளக வீதிகளே கொங்கிறீற் வீதிகளாக அமைப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்ப்பட்டது.

வேலை கள் கடந்த ஓகஸ்ட் 26 ஆம் திகதி நாமல் ராஜபக்ஷவினால் பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கான ஆரம்ப வேலைகள் 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப் பட்டன.

அதனைத்தொடர்ந்து ஒப்பந்தகாரர் அந்த வீதிக ளுக்கு கருங்கல்லினாலான சல்லிகளைப் பரவிய போதிலும் சுமார் ஆறு மாதங்கள் கழிந்த நிலையிலும் அவ்வாறே காணப்படுகின்றன.

அத்தோடு ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்ட ஒப்பந்தக்காரர் இடைநடுவில் கைவிட்டுச் சென்றுள்ளதாக வும் தெரிய வருகின்றது.

வீதிகளில் சல்லி பரவிக் காணப்படுவதால் அந்த வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வீதி திருத்தத்துக்காக அமைக்கப்பட்ட கான்கள் மூடப்படாமையால் அவற்றில் மழை நீர் தேங்கி நிற்பதால் பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (க-410)

## கட்டையால் தாக்கப்பட்டார் தனியார் பஸ் நடத்துநர்

### உடையார் கட்டுப் பகுதியில் சம்பவம்

புதுக்குடியிருப்பு,ஜன,25

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் நடத்துநர் ஒருவர் வேறொரு தனியார் பஸ்ஸின் நடத்துநரால் பயணிகள் பார்த்துக் கொண்டிருக்க கட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது .

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை உடையார் கட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை யாழ். பஸ் நிலையத்தில் இருந்த பயணிகளுடன் முல்லைத் தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று விசுவமடுப் பகுதியில் கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸை முந்திக் கொண்டு சென்றுள்ளது.

இதனால் ஆத்திரம் அடைந்த கிளிநொச்சி தனியார் பஸ்ஸின் நடத்துநர் முந்திச் சென்ற பஸ்ஸின் நடத்துநர் உடையார் கட்டுச் சந்தியில் பயணிகளை இறக்கிக் கொண்டிருக்கும் போது ஓடிச் சென்று கட்டை ஒன்றினால் தாக்கியுள்ளார்.

இதன்போது தன்னைச் சுதாகரித்துக் கொண்ட தாக்குதலுக் குள்ளானவர் பதில் தாக்குதலுக்கு முயற்சித்த போதும், தாக்குதலை மேற்கொண்டவர் சரமாரியாகத் தாக்கிவிட்டு அந்த இடத்தை விட்டு வேகமாகச் சென்று மறைந்து விட்டார்.

இதனை அடுத்து தாக்குதலுக்கு உள்ளானவர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனால் சில நிமிடங்கள் பதற்ற நிலை காணப்பட்டதுடன் பயணிகள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் மணிக்கணக்கில் தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பயணிகள் பலரும் விசனம் தெரிவித்தனர். (க-400)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவை மீளாய்வு செய்யும் பணிகள்

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பம்

புதுக்குடியிருப்பு, ஜன.25

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு பெறுபவர்களை மீளாய்வு செய்யும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

தற்போது உதவிக் கொடுப்பனவைப் பெறுபவர்களுக்குத் தொடர்ந்தும் வழங்குவதற்காகவே இந்த மீளாய்வுப் பணி பின்வரும் திகதிகளில் காலை 9மணி முதல் 4மணிவரை இடம்பெறவுள்ளது.

அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்களில் இடம்பெறும் மீளாய்வுப் பணியில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் என்.தசரதன் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை விசுவமடு மேற்கு, விசுவமடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளிலும், 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாணிக்கபுரம், வள்ளுவர் புரம் மற்றும் தேராவில் பகுதிகளிலும்,

30ஆம் திகதி வியாழக்கிழமை உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு ஆகிய பகுதிகளிலும், பெப்ரவரி முதலாம் திகதி சுதந்திரபுரம், வள்ளிபுனம் ஆகிய பகுதிகளிலும், 5ஆம் திகதி தேவிபுரம், கோம்பாவில் கிழக்குப் பகுதிகளிலும், 7ஆம் திகதி புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு பகுதிகளிலும், 8ஆம் திகதி மல்லிகைத்தீவு; மந்துவில் ஆகிய பகுதிகளிலும், 11ஆம் திகதி திங்கட்கிழமை இரணைப்பாலை, ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளிலும், 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிவநகரிலும், 14ஆம் திகதி புதன் கிழமை மன்னா கண்டலிலும் இந்த மீளாய்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி, நாவற்குழி வயல்களில் வெள்ளைச் சம்பா நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம்,ஜன.25

கைதடி - நாவற்குழி பகுதி வயல்களில் முன்மாதிரியாக பயிரிடப்பட்ட வெள்ளை இன சம்பா நெல் இந்த முறை நல்ல விளைச்சலை விவசாயிகளுக்கு ஈட்டித்தந்துள்ளது.

விவசாயிகளால் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்த புதிய இன பி.ஜி 360 கிரிசம்பா மற்றும் பி.ஜி 358 வெள்ளைச்சம்பா என்பன நல்ல விளைச்சலைத் தந்துள்ளது.

இந்த வெள்ளைச் சம்பா இனத்தை பயிரிட்டுப் பெரும் விளைச்சலைப் பெற்ற விவசாயிகள் கடந்த செவ்வாய்க்கிழமை அங்கு வயல் விழா ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

இந்த வயல் விழாவில் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீபாலசுந்தரம், பரந்தன் விதை நடுகை உதவி விவசாயப் பணிப்பாளர் கே.சதீஸ்வரன், பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.சௌந்தராஜன், விதை கட்டுப்பாட்டு அதிகாரி வி.ரமணிதரன், விவசாய போதனாசிரியர் எஸ்.சிவபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் இரண்டு ஏக்கரில் பி.ஜீ. 358 இன வெள்ளை சம்பா விதை நெல்லுக்காக பயிரிடப்பட்டது.

மற்றைய இனமான பி.ஜி 360 கிரி வெள்ளை சம்பா முன்மாதிரியாகவும் பயிரிடப்பட்டது.

மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.சௌந்தரர்ஜன் வயல் விழாவில் இந்த சம்பா இன நெற்செய்கை குறித்து கருத்து தெரிவிக் கையில்:-

மாவட்டத்தில் முதல் தடவையாக இந்தப் பகுதியில் இந்த வெள்ளை இன சம்பா விதை முன்மாதிரியாகப் பயிரிடப்பட்டன. இது பெரு விளைச்சலைக் கொடுத்துள்ளமை மகிழ்ச்சி தருகிறது.

அதுவும் விதை நெல் உற்பத்திக்காக பயிரிடப்பட்ட இந்த வெள்ளை இனச் சம்பாவைக் கொண்டு அடுத்த போகத்தில் பயிரிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த செய்கைக்கான விதை நெல்லை விவசாயத் திணைக்களம் தருவித்து விவசாயிகளுக்கு வழங்கியிருந்தது.

தற்போதைய இந்த முன்மாதிரி செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது. இதனை அடுத்து அடுத்த போகத்துக்கும் இந்தச் செய்கையை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த புதிய இன சம்பா விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார். (ம-17)

## கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ வீதியில் தலைகீழாக புரண்டது



யாழ்ப்பாணம்,ஜன.25

வேகமாக வந்த ஒட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் சென்று கொண்டிருந்த சைக்கிளை மோதித் தள்ளி, வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காருடன் மோதி தலைகீழாக புரண்டது.

இந்தச் சம்பவம் நேற்று காலை 8.15 மணியளவில் கே.கே.எஸ். வீதி, தாவடிச் சந்திக்கு அருகில் நடைபெற்றது.

அதன்போது ஓட்டோச் சாரதியும், சைக்கிளில் சென்றவரும் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

இந்த சம்பவத்தின் போது நிறுத்தி வைக்கப்பட்ட காரின் உரிமையாளரும், விபத்துக்குள்ளான சைக்கிள் உரிமையாளரும் இணக்கப்பாட்டுக்கு வந்து பிரச்சினை சுமுகமாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-ரி)

## மானிப்பாய் பொலிஸில் நடமாடும் சேவை

நவாலி,ஜன.25

மானிப்பாய் பொலிஸார் நடத்தும் நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு காக்கைதீவு பிரதான வீதிக்கு அண்மையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேத் தலைமையில் நடைபெறும்.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பனவற்றை தொலைத்தவர்களின் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படும்.

உடன் அதற்கான பிரதிகள் வழங்கல், பொது முறைப்பாடுகளை ஏற்றல் சம் பந்தமான சேவைகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-100)

## 45 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலை வளாக ஆலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.25

45 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலை ஸ்ரீசாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் கோயில் கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வைத்தியசாலையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் நலன்விரும்பிகளது நிதியிலிருந்து கோயில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஜப்பான் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துவிட்ட நிலையில், அந்தக் கட்டடத்துக்கு அருகில் பல வருடங்களாக அமைந்துள்ள கோயிலைப் புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதற்குரிய நிதியைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட வைத்தியசாலை பணியாளர்கள் பலர் முன்வந்து நன்கொடை செய்திருந்தனர்.





வைத்தியசாலைக்கு வெளியே பலரிடமும் நிதி உதவி கோரப்பட்டது. அவர்களில் சிலர் உதவியிருந்தார்கள் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின.

நேற்று முன்தினம் காலை 8மணி தொடக்கம் கும்பாபிஷேக நிகழ்வுகள் இடம்பெற்றன.

பூசை வழிபாடுகள், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. தொடர்ந்து சுவாமி வீதிவலம் வந்து சிறப்புற வழிபாடு நடந்தது.

வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் நல்லை ஆதீன முதல்வர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-4)

## திருநெல்வேலி கொலை வழக்கு முதலாவது சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன 25

திருநெல்வேலி வாலை அம்மன் கோயிலுக்கு அருகில் கடந்த வருடம் ஒருவரை வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் முதலாவது சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

**சாட்சிகளை அச்சுறுத்தும் வகையிலான செயற் பாடுகள் இடம்பெற்றால் பிணை இரத்துச் செய்யப்படும்**

யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் சந்தேக நபர் தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கடந்த ஜூன் மாதம் அதே இடத்தைச் சேர்ந்த புவனேந்திரன் றஜீவன் (வயது -21) என்பவரே வெட்டிக்கொலை செய்யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் நல்லைநாதன், லோகநாதன் தர்சன், இரத்தினம் மகேஸ்வரன் சரவணபவன் ஆகியோர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். யாழ் நீதிமன்ற உத்தரவுக்கமைய மூவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் முதலாவது சந்தேக நபரான நல்லைநாதன் என்பவரைப் பிணையில் விடுவிக்கும்படியே பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

அதன்படி 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா இரண்டு இலட்சம்ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

சாட்சிகளை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றால் பிணை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்படுவார் என்றும் மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் கோப்பாய் பொலிஸில் ஒப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. (ம-4)

## பொதுமக்கள் பங்களிப்புடன் சாவகச்சேரியில் வீதி விளக்குகள்

தென்மராட்சி,ஜன 25

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் பங்களிப்புடனான வீதி விளக்கு பொருத்தும் திட்டத்தில் 60 வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் பங்களிப்புடனான வீதி விளக்குப் பொருத்த சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டது.

ஒவ்வொரு உறுப்பினரும்தலா 4 இடங்களில் மின் விளக்குகள் பொருத்தும் பொறுப்பை ஏற்றனர்.

எழுதுமட்டுவாழ் தெற் குப் பிரிவுக்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்படாமையால் அப் பகுதியைச் சேர்ந்த உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை, தனக்கு ஒதுக்கப்பட்ட நான்கு மின் விளக்குகளையும் மிருசுவில் வடக்குப் பகுதிக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டதை அடுத்து அப் பகுதியில் அவை பொருத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## வெள்ளாம் போக்கட்டியில் சனசமூக நிலையம் திறப்பு

தென்மராட்சி,ஜன.25

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெள்ளாம் போக்கட்டி சனசமூக நிலையக் கட்டடம் அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

நிலையத் தலைவர் வ.நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் சி.துரைராஜா முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு புதிய கட்டடத்திதைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் பிரிவு கிராம அலுவலர் ந.கௌரிதரன், சமூக ஆர்வலர் க.அருட்செல்வம், லயன் கு.நடராஜா உட்பட பலர் உரையாற்றினார்.

57 வருடங்களாக இயங்கி வரும் வெள்ளாம் போக்கட்டி சனசமூக நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடந்த வருட பன் முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கப்பட்ட தொகையில் இது நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## தைப்பூச நன்னாளில் மீசாலையில் உலக அமைதிக்கான நிகழ்வு

தென்மராட்சி,ஜன25

மீசாலை வடக்கு வேம்பிராய் சமரச சுத்த சன் மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தினர் உலக அமைதிக்கான ஜீவகாருண்யத்தை வலியுறுத்தி நடத்தும் தைப்பூசப் பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி கோட்ட மண்ட பத்தில் நடைபெறும்.

ஓய்வு பெற்ற அதிபர் செ.சுப்பிரமணியம் தலை மையில் நடைபெறும் நிகழ் வில் இராமலிங்கம் தயா னந்தனின் "தைப்பூச மகிமை" என்னும் சொற் பொழிவும், அதனை அடுத்து கோட்டத்தால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான நினைவுப் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கலும், முதல் மூன்று இடங் களைப் பெற்ற சாவகச் சேரி இந்துக் கல்லூரி மாணவர்களான இ.கௌசிகன், சி. சோபனா, பு.மிதுலன் ஆகியோருக்கு சிறப்புப் பரிசில் வழங்கலும் இடம்பெறும். பரிசில்களை திருமதி நாச்சியார் செல்வநாயகம், [illegible] இராமானுஜம் (இந்தியா) கனகராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர். (ம-9)

## காலபோக அறுவடையில் விவசாயிகள் ஆர்வம்

தென்மராட்சி,ஜன.25

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற் பயிர்களை அறுவடை செய்வதில் நெற்செய்கை யாளர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வருட காலங்களில் தைப் பூச தினத் தன்றே வயல்களில் விழாக்கள் நடத்தி நெற் செய்கையாளர்களால் அறுவடை செய்வது வழக்கம்.

ஆனால் கடந்த வாரம் திடீரென மழை பெய்ததாலும் தொடர்ந்து மழை பெய்வதற்கான அறிகுறி காணப்படுவதாலும் நெல் அறுவடையை முன்கூட்டியே ஆரம்பித்துள்ளனர் என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

அறுவடை செய்யப்படும் நெற்பயிர்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு வீடுகளுக்கு கொண்டு வரப்பட்டு சூடடிப்பதாகவும் தெரிவித்தனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'விஸ்வரூபம்' திரையிடத் தமிழகஅரசு தடை

நடிகர் கமலஹாசன் நடிப்பில் உருவான விஸ்வரூபம் படத்தை வெளியிட தமிழ் நாடு அரசு தடை விதித்துள்ளது.

இந்தநிலையில், விஸ்வரூபம் படத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான காட்சிகள் இடம் பெற்றுள்ளன. அதனால், அந்தத் திரைப்படத்தை வெளியிடக்கூடாது என்று முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தன. அதைத் தொடர்ந்து விஸ்வரூபம் படத்தை முஸ்லிம் அமைப்புகளுக்கு கமல்ஹாசன் திரையிட்டு காட்டினார். படத்தை பார்த்த அமைப்பினர் முழுமையாக முஸ்லிம்களுக்கு எதிராக படம் எடுக்கப் பட்டிருக்கிறது. அதனால் திரையிட அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தினர். (வ)



புதுடில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய பூட்டான் அரசர் ஜிக்மே கேசார் நாம்ஜியெல் வாங்சுக் மற்றும் அரசி ஜேட்சன் பெமா ஆகியோரை வெளியுறவுத் துறை இணை அமைச்சர் ஈ. அகமது வரவேற்றார்.

## சுஷில்குமார் மீது அவதூறு வழக்கு

டில்லி, ஜன.25

இந்து தீவிரவாதம் குறித்து பேசியுள்ள சுஷில் குமார் ஷிண்டேவுக்கு எதிர்ப்புக்கள் வலுத்து வரும் நிலையில், அவர்மீது டில்லி நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதுகுறித்து டில்லி பெருவியல் நீதிமன்றத்தில் தீப்தி குமார் என்பவர் பொது நல வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறுவதற்காக ஷிண்டே இந்துதீவிரவாதம் என்று பேசியுள்ளார்.

இது ஏனைய மதத்தினர் இந்து மதத்தைக் குறித்து தவறான அபிப்பிராயம் கொள்ள மட்டுமல்ல, இந்துக்களை



வெறுக்கும் அளவுக்கு ஷிண்டேவின் கருத்துக்கள் வகை செய்யும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஷிண்டேவின் மீது அவதூறு வழக்குத் தொடரப் போவதாகவும் தீப்திகுமார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மனுவின் மீதான விசாரணையை எதிர்வரும் 28 ஆம் திகதி எடுத்துக் கொள்ள நீதிபதிகள் தரப்பு முடிவு செய்துள்ளது. (வ)

## குடியரசு தினத்தன்று டில்லியில் தாக்குதலுக்கு தீவிரவாதிகள் திட்டம்

### உளவுத்துறை எச்சரிக்கை

டில்லி, ஜன.25

குடியரசு தினமான நாளை டில்லியில் 4 இடங்களை குண்டு வைத்துத் தகர்க்க பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரித்துள்ளது.

மும்பைத் தாக்குதல் வழக்கில் தூக்கிலிடப்பட்ட பாகிஸ்தான் தீவரவாதி அஜ்மல் கசாபின் மரணத்துக்கு பழிவாங்கப் போவதாக லஷ்கர்-இ-தொய்பா மிரட்டியது. இந்தநிலையில் குடியரசு தினமான நாளை சனிக்கிழமை அந்த அமைப்பு தெற்கு டில்லியில் உள்ள கோவில், சாந்தினி சவுக், காந்தி நகர் சந்தை மற்றும் ஒரு மெட்ரோ ரயில் நிலையம் ஆகிய 4 இடங் களைக் குண்டு வைத்து தகர்க்கத் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரித்துள்ளது.

மேற்படி தாக்குதல்களை அல் குவைதா மற்றும் தெஹ்ரிக்- இ-தாலிபான் ஆகிய அமைப்புகளுடன் சேர்ந்து நடத்த லஷ்கர்-இ- தொய்பா திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து டில்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் சாதாரண உடை அணிந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வாகன சோதனையும் தீவிரப்படுத்தியுள்ளனர். (வ)

## காஷ்மீரில் பனிப்பொழிவில் சிக்கிய 150 பேர் மீட்பு

ஜம்மு, ஜன.25

காஷ்மீரில் நிலவிவரும் கடுமையான குளிரில் சிக்கிய 150 பேர் விமானப் படையினரால் மீட்கப்பட்டனர்.

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக கடுமையான பனிப்பொழிவு நிலவுகிறது. உறைநிலையான பூஜ்ஜியம் டிகிரியையும் தாண்டி, சில மாவட்டங்களில் நேற்று முன்தினம் தட்பவெப்ப நிலை மைனஸ் 6 டிகிரி யாக நீடித்தது. இரத்த ஓட்டத்தை உறைய வைக்கக்கூடிய கடும் குளிரில் அதிகமான மக்கள் சிக்கித் தவித்தனர்.

இந்திய விமானப்படையின் அதிகாரி பி.பாட் டன்கே மற்றும் ஜம்மு வட்டார தளபதி பிரதீப் குப்தா மேற்பார்வையில் பாதிக்கப்பட்ட மக்கள் விமானம் மூலமாக அந்தப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்டனர்.

அதிகமான பனிப்பொழிவு ஏற்பட்ட கிஷ்ட்வார் மாவட்டத்தின் நவபஞ்சி, சொன்டார் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 150 பேர், எம்-17 ரக ஹெலிகொப்டர்களின் உதவியுடன் வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (வ)

## ஜெகனின் பிணை மனு மீண்டும் நிராகரிப்பு

ஹைதராபாத், ஜன.25

வை.எஸ்.ஆர். கட்சியின் தலைவரான ஜெகன் மோகனின் பிணை மனுவை ஆந்திர மாநில உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் மீண்டும் நிராகரித்து விட் டது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட ஜெகன் மோகன் நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார். அவரது வழக்குக்கான குற்றப் பத்திரிகை இன்னும் தாக்கல் செய்யப் படாத நிலையில், ஏற்கனவே



ஜெகன்மோகனின் பிணை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இந்த நிலையில், மீண்டும் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நேற்று முன்தினம் நிராகரிக்கப் பட்டது. (வ)

### இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி கொடுப்போம் என்ற

# அந்தோனி கருத்துக்கு வைகோ கண்டனம்

சென்னை, ஜன.25

தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி கொடுப்போம் என்று கூறியுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி யின் கருத்துக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-



இலட்சக்கணக்கான ஈழத் தமிழ் மக்களை ஆயுதம் ஏந்தாத பொதுமக்கள், குழந்தைகள், தாய்மார்கள் உட்பட அனைவரையும் ஈவு இரக்கமின்றி இலங்கை இராணுவம் கொடூரமாகப் படுகொலை செய்தது. தமிழ் இனப் படுகொலையை இலங்கை அரசு நடத்தியதில் கூட்டுக் குற்றவாளிதான் காங்கிரஸுக்கு தலைமை தாங்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாகும்.

திட்டமிட்டே அந்தத் துரோகத்தை இந்திய அரசு செய்தது. தமிழர்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை இந்தியாவுக்குத் திரும்பத் திரும்ப அழைத்து வந்து சிவப்புக் கம்பள வரவேற்பையும் கொடுத்தது. தமிழர்கள் இதயத்தில் சூட்டுக்கோலைத் திணிப்பது போல், இலங்கை விமா னப் படைக்குத் தாம்பரத்தில் பயிற்சியும், இராணுவ அதிகாரிகளுக்கு நீலகிரி, வெலிங்டனில் பயிற்சியும் கொடுத்தது.

ஈழத்தில் இன்றும் இலங்கை இராணுவம் கொடுமை செய்து வருகிறது. தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். இத்தனைக்குப்பின்னரும் இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி கொடுப்போம் என்று அந்தோனி ஆணவமாகப் பேசுகிறார் என்றால், அது அவரது தனிப்பட்ட குரல் அல்ல. சோனியா காந்தி இயக்குகின்ற காங்கிரஸ் தலைமை தாங்கும் அரசின் கொக்கரிக்கும் ஓங்காரக் குரல். இதன் மூலம் மத்திய அரசின் துரோக முகம் மேலும் அம்பலப்படுகிறது-என்றார்.

இதேவேளை இந்தியா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுக்கும் இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனிக்கும் இடையில் நேற்று முன்தினம் புதன் கிழமை சந்திப் பொன்று இடம் பெற்றது.

இதன்போது, தமிழக மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு இலங்கை இராணுவத்தினருக்கான பயிற்சிகள் தமிழகத்துக்கு வெளியே வழங்கப்படும் என்று அந்தோனி குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் தமிழர் மறுவாழ்வுப் பணிகள் எதிர் பார்த்த வேகத்தில் இல்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

## அணு ஆயுதப் போருக்குத் தயாராகுங்கள் என்ற பத்திரிகை விளம்பரத்தால் காஷ்மீரில் பரபரப்பு!

ஸ்ரீநகர், ஜன.25

அணு ஆயுதப் போருக்குத் தயாராகுங்கள். அதற்கேற்ற வகையில் வீடுகளில் பங்கர்களை அமையுங்கள் என்று ஒரு பத்திரிகையில் வெளியான விளம்பரத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த விளம்பரத்துக்கு முதல்வர் உமர் அப்துல்லாவும் கண்டனம் தெரிவித்துள்ளார். முட்டாள்தனமான யோசனை என்று அவர் இதை வர்ணித்துள்ளார். இத்தனைக்கும் உமர் அப்துல்லா தலைமையிலான மாநில அரசின் பேரிடர் தவிர்ப்புப் பிரிவின் சார்பில் தான் அந்த விளம்பரம் காஷ்மீர் நாளிதழ் ஒன்றில் வெளியாகியுள்ளது.

> அந்த விளம்பரத்துக்கு முதல்வர் உமர் அப்துல்லாவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்திய பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நிலவும் பதற்றமான சூழல், தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் அந்த விளம்பரத்தை பேரிடர் தவிர்ப்புப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அதில் அணு ஆயுதப் போரை எதிர் நோக்கி மக்கள் உஷாராக இருக்க வேண்டும். அவ்வாறு நேரிட்டால் எப்படி தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டும், பங்கர்கள், பாதுகாப்பு நடவடிக்கைகளை அமைப்பது எப்படி என்பது உள்ளிட்ட யோசனைகள் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது காஷ்மீர் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி விளம்பரம் குறித்து ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கருத்துத் தெரிவிக்கையில்:-

இது முட்டாள்தனமான யோசனை என்று கூறியுள்ளார். அந்த விளம்ப ரத்தில், ஒரு கழிப்பறை அளவிலான தடுப்பு அறை களை வீட்டுக்குள்ளேயே அமைக்கலாம். அதில் ஒரு குடும்பத்தினர் 14 நாள்கள் வரை தங்கியிருக்க முடியும். அது பாதுகாப்பானதும் கூட என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. விளம்பரம் குறித்து மாநில பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கூறுகையில், இது முன்னெச்சரிக்கை நடவடிக்கைதானே ஒழிய வேறு எதற்கும் இதில் தொடர்பு இல்லை என்று விளக்கியுள்ளனர். (வ)

## மீண்டும் டெசோ மாநாடு

சென்னை,ஜன.25

திராவிட முன்னேற்ற கழகத்தின் டெசோ மாநாடு இலங்கையின் சுதந்திர தினத்தன்று இடம்பெறும் என்று கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

சென்னை, அறிவாலயத்தில் இந்த மாநாடு இடம் பெறவுள்ளது. ஏற்கனவே நடத்தப்பட்ட டெசோ மாநாட்டின் தீர்மானங்களை ஐக்கிய நாடுகளிடம், ஸ்டாலின் மற்றும் டி.ஆர். பாலு ஆகியோர் சில மாதங்களுக்கு முன்பு அளித்திருந்தனர்.

இந்த நிலையில் இலங்கை சுதந்திர தினமான எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி அடுத்த டெசோ மாநாடு நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்தும் இருப்பதா?

**பிரிட்டன் மக்களே முடிவெடுப்பர்; பிரதமர் கமரூன் தெரிவிப்பு**



லண்டன், ஜன.25

பிரிட்டனின் ஆளும் கஒன்சர்வேட்டிவ் கட்சி அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றால், பிரிட்டன் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிப்பதா அல்லது இல்லையா என்பது குறித்து ஒரு மக்கள் கருத் தறியும் வாக்கெடுப்பை நடத் தப் போவதாக பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

நெகிழ்வுத் தன்மையுடைய, பொருந்திப் போகக்கூடிய மேலும் வெளிப்படையான ஓர் உறவை உருவாக்கும் வகையில் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சமரசப் பேச்சுக்களை நடத்தும். அதன் முடிவுகள் 2018 இல் மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் கமரூன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்தும் இருக்கும் வகையிலான உறவையே தான் விரும்புவதாகவும் தெரிவித்துள்ள அவர், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் அதன் குடிமக்களுக்கும் இடையே இடைவெளி அதிகரித்துக் கொண்டு செல்வதை பிரிட்டனால் உணரக் கூடியதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் கடும் மழை காரணமாக வீதிகள் எங்கும் வெள் ளம் கரைபுரண்டு ஓடுகிறது. கடும் வெள்ளம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில் நேற்று சிறிதளவு நிலநடுக்கம்

டோக்கியோ, ஜன.25

ஜப்பானில் நேற்று சிறியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதுகுறித்து அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள குறிப்பில்-

ஜப்பானின் தென்கிழக்கே நெமூரா நகரில் கடலுக்கு அடியில் 22 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.2 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் நகரில் கட்டடங்கள் லேசாக குலுங்கின. எனினும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. உயிர்சேதம் குறித்த தகவல்களும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணுசக்தி சோதனை நிறுத்தப்பட மாட்டாது

## வடகொரியா திட்டவட்டம்

நியூயார்க், ஜன. 24

தமது அணுசக்தி தொடர்பான ஆராய்ச்சிகள் தொடரும் என்று வடகொரியா மீண்டும் அறிவித்துள்ளது. அண்மையில் வடகொரியாவின் அணுசக்தி ஆராய்ச்சிகள் குறித்து ஐ.நா. கருத்து வெளியிட்டிருந்தது.

வடகொரியா தனது ஏவுகணை மற்றும் அணுசக்தி தொடர்பான ஆராய்ச்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். ஆராய்ச்சிகள் தொடருமானால் வடகொரியாவுக்கு எதிராகப் புதிய தடைகளை கொண்டு வர நேரிடலாம். அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சிகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை குறிப்பிட்டிருந்தது.

ஐ.நா.சபையின் இந்தக் கருத்துக் குறித்து உடனடியாக மறுப்புத் தெரிவித்த வடகொரியா, அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணை சோதனைகள் தொடரும். கொரிய தீவகற்பத்தில் அணு ஆயுதம் இல்லாது செய்யும் முயற்சிகள் கைகூடாது. அதுகுறித்த பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்துள்ளது.

அண்மையில் வடகொரியா நீண்ட தூரம் சென்று இலக்கைத் தாக்கக் கூடிய ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்திருந்தது. இதனையடுத்து உலக நாடுகள் பலவும் வடகொரியாவின் ஏவுகணைத் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நைஜீரியாவில் குண்டு வெடிப்பு: 23 பேர் சாவு

அபுஜா, ஜன.25

நைஜீரியாவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் வடகிழக்கு டம்போடா பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வேடுவர்களை இலக்கு வைத்தே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தனி இஸ்லாமிய நாட்டுக் கோரிக்கை முன்வைத்துப போராடி வரும் பார்கோ ஹார்மோ தீவிரவாதிகள் நாட்டின் பல பகுதிகளில் இவ்வாறான தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இறுதிச் சடங்கின்போது தற்கொலைத் தாக்குதல்

**ஈராக்கில் 25 பேர் உயிரிழப்பு; 75 இக்கும் அதிகமானோர் படுகாயம்**



பாக்தாக், ஜன.25

ஈராக்கில் இறுதிச் சடங்கு ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர். 75இக்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்றுமுன்தினம் வட ஈராக்கில் ஷைட்டி முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பள்ளிவாசலில் மரணச் சடங்கு நடந்து கொண்டிருந்த போது அங்கு திடீரென நுழைந்த தற்கொலைக் குண்டுதாரி தனது உடலில் அணிந்திருந்த குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளார். அதில் 25 பேர் உயிரிழந்தனர். 75 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த அரச உத்தியோகத்தர் ஒருவரின் இறுதிச் சடங்கின் போதே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை இன்னமும் அதிகரிக்கக் கூடும் எனவும் கூறப்படுகின்றது.

கடந்த மூன்று நாள்களில் மட்டும் இடம்பெற்ற வன்முறைகளில் மொத்தம் 88 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

# இஸ்ரேலிய பொதுத்தேர்தல்

## ஆளும் கூட்டணி - எதிர்க்கட்சிகள் சமபலத்தில்



ஜெருசலம், ஜன.25

இஸ்ரேல், நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான ஆளும் கூட்டணியும், எதிர்க்கட்சிகளின் கூட்டணியும் தலா 60 இடங்களில் வெற்றி பெற்று சமபலத்தில் உள்ளன.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் மொத்தம் 120 ஆசனங்கள் உள்ளன. கடந்த புதன் கிழமை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் நெதன்யாகுவின் லிகுட் கட்சியும், தீவிர தேசியவாத குழு கட்சியும் இணைந்து தேர்தலில் போட்டியிட்டன.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின் படி ஆளும் லிகுட் கட்சி கூட்டணிக்கு 60 இடங்களும், எதிர்க்கட்சி கூட்டணிக்கு 60 இடங்களும் சமமாக கிடைத்துள்ளன.

அதனால் ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சி கூட்டணியில் உள்ள சில கட்சிகளின் ஆதரவு நெதன்யாகுவுக்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதன்மூலம் நெதன்யாகு மீண்டும் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் முன்னரைப் போன்று பெரும்பான்மை இல்லாததால், பாலஸ்தீன மற்றும் காஸா விடயங்களில் முடிவுகளை எடுப்பது சிரமமாக மாறியுள்ளது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# எல்லையில் இந்திய அத்துமீறல் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது

## பாகிஸ்தான் பிரதமர் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், ஜன.25

எல்லைப் பகுதியில் இந்தியாவின் அத்துமீறல்களும், பயங்கரவாதிகள் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்களும் பாகிஸ்தான் எதிர்நோக்கியுள்ள சவால்கள் என்று அந்த நாட்டின் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் உள்ள தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் உரையாற்றியபோதே இவ் வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தல் மே மாதத்தில் நடக்க உள்ள நிலையில், எல்லைப்பகுதியில் இந்தியா சமீபத்தில் நடத்திய அத்துமீறல்களும், பயங்கரவாதிகள் தொடர்ச்சியாக நடத்தி வரும் தாக்குதல்களும் நாம் எதிர்நோக்கியுள்ள சவால்களாகும். முக்கிய பிரச்சினையான ஜம்மு காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தியாவுடன் விரிவான பேச்சுக்களை பாகிஸ்தான் தொடங்கியது. எல்லையில் நிலவும் பதற்றமான நிலைமையை அரசு முற்றிலும் உணர்ந்துள்ளது.

ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய ஒற்றுமையைப் பராமரிக்கவும் தேசிய நலன்களைக் காக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

நமது தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் நாடு தழுவிய அளவில் கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ளது. [illegible] பயங்கரவாதிகள் முயற்சிப்பதை அனுமதிக்க மாட்டோம் என்றார்-அஷ்ரப்.

# அமெரிக்க வீராங்கனைகள் போர்களில் பங்கேற்கலாம்

## பாதுகாப்புச் செயலர் லியோன் பனிட்டா தெரிவிப்பு



வோஷிங்டன், ஜன.25

அமெரிக்காவில் இராணுவ வீராங்கனைகள் போர்களில் பங்குபற்றுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் போர் இடம்பெற்று வரும் முன்னரங்கப் பகுதியில் அமெரிக்க இராணுவ வீராங்கனைகள் செல்வதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

இந்தத் தடை உத்தரவை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லியொன் பனிட்டா தெரிவித்துள்ளார்.

இந்தத் தடை நீக்கம் காரணமாக முன்னரங்க கமாண்டோ படைகளில் ஆயிரக் கணக்கான பெண் வீராங்கனைகள் இடம்பிடிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இந்தத் தடை நீக்கம் உடனடியாக நடைமுறைக்கு வராது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் படையதிகாரிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தலைமையில் இருந்து சர்தாரி பதவி விலக வேண்டும்

## லாகூர் உயர் நீதிமன்றம் உத்தரவு

லாகூர், ஜன.25

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி விலக வேண்டும் என்று லாகூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான விளக்கங்கள் ஏதும் இருப்பின் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதிக்குள் ஜனாதிபதி விளக்கமளிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

சர்தாரி கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும். தனது கட்சியின் அரசியல் செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று 2011ஆம் ஆண்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஜனாதிபதியாகப் பதவி வகிப்பவர் கட்சி சார்பற்றவராக இருத்தல் வேண்டும் என்ற விதிமுறையை மீறியமைக்காகவே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டிருந்தது.

எனினும் அந்த உத்தரவைப் புறக்கணித்த சர்தாரி தொடர்ந்தும் தலைமைப் பொறுப்பை வகித்ததுடன், தனது கட்சி அரசியல் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அதையடுத்து நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் சர்சாரி மீது மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கின் விசாரணைகள் நேற்றுமுன்தினம் லாகூர் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது. விசாரணைகளின் பின்னரே நீதிபதிகள் இவ்வாறு உத்தரவிட்டுள்ளனர்.

''நீதிமன்ற உத்தரவை அதிபர் ஏன் செயல்படுத்தவில்லை? என்ற விளக்கத்தை ஜனாதிபதி நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவர் மீதான குற்றம் உறுதிப்படுத்தப்படும்வரை நீதிமன்றம் எந்தவித பிடி ஆணையையும் பிறப்பிக்காது.

இதுகுறித்து ஜனாதிபதி தெளிவான விளக்கத்தை எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காதுவிடில் இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளை நிறுத்தி, நீதிமன்றம் தனது தீர்ப்பை வெளியிடும்'' என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# பெண் குழந்தை பிரசவிக்க சீன நாட்டில் பின்னடிப்பு

## அதனால் விகிதாசாரத்தில் வித்தியாசம்

பீஜிங், ஜன.25

சீனாவில் அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் ஆண் - பெண் விகிதாசாரத்தில் பெரும் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

உலகின் மக்கள் தொகை மிகுந்த நாடான சீனாவில் 1980ஆம் ஆண்டு முதல் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மக்கள் தொகை அதிகரிப்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தால் இப்போது புதிதாக ஒரு சிக்கல் தோன்றி உள்ளது.

சீனாவில் ஆண்-பெண் விகிதாசாரத்தில் சமநிலை ஏற்படாமல் பெரும் வித்தியாசம் நிலவுகிறது. 2012 ஆம் ஆண்டு சீனாவில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில், 117 ஆண் குழந்தைகளுக்கு 100 பெண் குழந்தைகள் மட்டுமே பிறந்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்த வித்தியாசத்துக்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை திட்டமே காரணம் எனக் கூறப்படுகிறது. ஒரு தம்பதி ஒரு குழந்தை மட்டுமே பெறவேண்டும் என்ற கட்டாய சட்டம் இருப்பதால் ஆண் குழந்தை பெறவே விரும்புகின்றனர். எனவே, கர்ப்பமாக இருக்கும் போது கருவில் பெண் குழந்தை இருந்தால் அதனை கருக்கலைப்பு செய்துவிடுவது சீனாவில் வழமையாகி விட்டது என்று கூறப்படுகிறது.

# வடகொரியாவின் நகர்வுகளைக் கண்காணிக்க ஜப்பான் செலுத்துகிறது செயற்கைக் கோள்

டோக்கியோ, ஜன.25

வடகொரியாவின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க உளவு செயற்கைக் கோளை ஜப்பான் விண்ணில் செலுத்த உள்ளது.

வடகொரியா அணு ஆயுத தயாரிப்பு, நீண்ட தூரம் சென்று இலக்கைத் தாக்கக் கூடிய ஏவுகணை போன்றவற்றை அண்மைக்காலத்தில் மேற்கொண்டு வருகிறது.

அதன் காரணமாக தென்கொரியா, ஜப்பான், தைவான் போன்ற நாடுகளின் பாதுகாப்புக்கு வடகொரியா அச்சுறுத்தலாக உள்ளது என்று குற்றம்சாட்டப்படுகிறது.

இந்தநிலையில், வடகொரியாவின் ஆயுத நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு ஜப்பான் முடிவு செய்துள்ளது. இதற்காக, உளவு செயற்கைகோளை ஒன்றை ஏவுகணை வடகொரியாவை கண்காணிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது ஜப்பான்.

இந்த செயற்கை கோள் தானிகாஷிமா விண்வெளி ஆய்வு மையத்தின் ஏவுதளத்தில் இருந்து எதிர்வரும் நாளை மறுதினம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதில் அதிநவீன ரேடார் சாதனங்களும், கண்காணிப்புக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வடகொரியா இது குறித்து கருத்து எதுவும் வெளியிடவில்லை.

# தென் அமெரிக்க நாடுகளில் டெங்கு: ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு

ரியோடி ஜெனிரோ, ஜன.25

தென்அமெரிக்காவில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்காவின் பிரேசில், பராகுவே ஆகிய நாடுகளில் பல்லாயிரக் கணக்கானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரேசிலில் உள்ள கேம்போ கிரைனைட் நகரில் மட்டும் மூவாயிரம்பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

பராகுவேயில் 8500 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். 8 பேர் உயிரிழந்துள்ளனர். அயல் நாடுகளான உருகுவே, சிலி, பெரு ஆகிய நாடுகளிலும் டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது.


**வலி. வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் - (வ.து) பதிவு இல:N.J.71**

**வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல்**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 2013.02.09 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் துர்க்காபுரம் அரிமாக் கழக மண்டபத்தில் நடைபெறும். தனிநபர் பிரேரணைகள் 31.01.2013 முன்னதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

நா.தவநாதன் தலைவர். சு.ஏழூர் நாயகம் செயலாளர். க.இராதாகிருஷ்ணன் பொருளாளர்.

**வலி. வடக்கு பிரதேச செயலகம் தெல்லிப்பழை.** (28649)(6.7.11)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு— advt@uthayan.com 0215671111

**ஜனா கொம்பியூட்டர்**

பின்வரும் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. 10,000/= ரூபாவில் இருந்து கொம்பியூட்டர்களும், 6000/= ரூபாவில் இருந்து ரி.விகளும் மற்றும் கொம்பியூட்டர் உதிரிப் பாகங்களும், கொம்பியூட்டர் கேம்ஸ், சொவ்ற்வெயர் என்பனவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777508908. (26306) (6.7.2)
இல.295, ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வீதி, உதயநகர் மேற்கு.

**விற்பனைக்கு**

6 மாதங்கள் பாவித்த நல்ல நிலையிலுள்ள C FAN, Landmaster விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 9194 639 (28546) (45.6)

**வீடு வாடகைக்குண்டு**

கச்சேரி, நல்லூர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. N.G.O.விரும்பத்தக்கது.
தொடர்பு:0774705540,0776621654. (28511) (6.7.4)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்.கல்விக்கந்தோருக்கு ½ மைல் தூரத்துக்குள் மூன்று அறைகள்,இரண்டு ஹோல்கள், இரண்டு மலசல அறைகள் மற்றும் பிரயோசனங்களும், வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:021 2228582. (28526) (6.7.4)

**பணிநிலை வெற்றிடம்**

01. வெளிக்கள உத்தியோகத்தர் (Field Officer)
02. உதவியாளர் (வெளிக்கள வேலை)

**நேர்முகத்தேர்வு :**
**28.01.2012 திங்கட்கிழமை**
**மு.ப 09.00 மணி - 02.00 பி.ப மணிவரை**
(சுயவிபரக்கோவையுடன் சமுகமளிக்கவும்) (C/6015)(2.6)

ANDRA Digital Image
379/167, Kasthuriyar Road, Jaffna.
021 7201264 , 0776622981




**மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்**

**தைப்பூச இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்**

**தைப்பூச இலட்சார்ச்சனை பூர்த்தி திருமஞ்ச பவனி நிகழ்வுகள்(27.01.2013)**

காலை 5.30 மணி - திருவனந்தல்
காலை 7.30 மணி - ஸ்நபனாபிஷேகம்
காலை 8.30 மணி - காலைசந்தி பூசை
காலை 9.00 மணி - இலட்சார்ச்சனை ஆரம்பம்
மு.பகல் 10.30 மணி - பொது உபயம், இலட்சார்ச்சனை ஆரம்பம்
ந.பகல் 12.00 மணி - உச்சிக்கால பூசை, மகேஸ்வர பூசை (அன்னதானம்)

பி.பகல் 1.00 மணி - ஸ்நபனாபிஷேகம்
பி.பகல் 2.00 மணி - சாயரட்சை பூசை
பி.பகல் 2.30 மணி - இலட்சார்ச்சனை ஆரம்பம்
மாலை 4.00 மணி - இலட்சார்ச்சனை பூர்த்தி, - இரண்டாம் கால பூசை
மாலை 4.30 மணி - திருமஞ்ச பவனி
இரவு 7.00 மணி - திருவருட்பிரசாதம் வழங்குதல்
இரவு 7.30 மணி - அர்த்தசாம பூசை

தைப்பூச தினத்தன்று (27.01.2013)ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இலட்சார்ச்சனை பொது உபயமாக நடைபெறும்.

இதில் சங்கல்பம் செய்து இலட்சார்ச்சனையில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு தங்கள் பெயர் நட்சத்திரங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

மாவிளக்குப் பொருள்கள் நெய்தீபம், அர்ச்சனைப் பொருள்கள், நைவேத்தியப் பிரசாதம், பலகார வகைகள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மாவைக்கந்தா போற்றி! போற்றி! நின்பதம் சரணம்**
மாவைக்கந்தன் தொண்டன்

**மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள் [ஆதீனகர்த்தா]**

தொடர்பு:
T.P. No L.Ph. 0094 213210349
H.PH. 0094 778302573

S.Ratnasabapathikurukkal
A/C No. 117020042437
H.N.B.Chunnakam.
(C/6005)(5.6.2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(05)

உண்மை எதுவோ அதுவே நன்மை தருவதாயும், அழகாக இருப்பதாகவும் அவர்கள் நம்புகிறார்கள்.

மத நூல்கள் பெரும்பாலும், மனிதன் முழுக்க முழுக்க சுய நலமற்று வாழவேண்டும் என்று வலியுறுத்துகின்றன. ஆனால் இவர்களோ மனித வாழ்வில் சுயநலமும் பொதுநலமும் சேர்ந்து தான் செயற்படுகின்றது என்பதை உணர்ந்து வாழ்கிறார்கள்.

மனிதன் நல்லவற்றுக்கும், கெட்டவற்றுக்கும் இடையே போராடுகிறானா? அது தானா வாழ்க்கை? என்ற கேள்விகள் எழலாம். அத்தகைய போராட்டம் உண்மையாக இருக்கலாம். ஆனால் உயர் மனிதர்களோ, மகாத்மா காந்தி கூறியது போல "நல்லவற்றை நாடும் பேரவா தான் உலகை இயக்குகிறது! அதுதான் கெட்டவற்றை மிஞ்சுகிறது" என்ற நம்பிக்கை கொண்டு வாழ்கிறார்கள். காரியம் செய்கிறார்கள்.

இயல்பாக இவர்களுக்கு பிறர்கள் கூட்டம் ஏராளம். தங்களது குடும்பலின் குறைபாடுகளை இவர்கள் சகித்துக் கொள்கிறார்கள். அநேசாமயம், ஏமாற்று, பொய், கொடுமை என்பவற்றை அவர்கள் ஏற்பதில்லை. அநியாயம் கண்டவிடத்து போர்க்கொடி தூக்கிப் போரிடும் உள்ளம் கொண்டவர்கள் இவர்கள்.

அவர்கள் வாழ்வில் சங்கடம் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் அதை மிகைப்படுத்தாது மகிழ்வை அதிகம் அனுபவிக்கிறார்கள். உபயோகமற்ற பேச்சுக்களையும், அக்கப்போர்களையும், கிசுகிசுக்களையும் அவர்களால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. பிறரை உபயோகப்படுத்தும் சுயநலம் அவர்களிடம் இல்லை. எல்லோரையும் மரியாதையுடன் நடத்துகிறார்கள். பாரதியாரின். "யாரையும் மதித்து வாழ்" என்ற ஆத்திச்சூடி அவர்களது வாழ்வின் தாரக மந்திரமாக இயங்குகிறது. எதையும் சமாளிக்கும் மன இயல்பு கொண்டவர்கள் இவர்கள்.

தெரியாத விடயங்களும் மறைபொருள்களும் புரிந்து கொள்ள முடியாத விடயங்களும் இவர்களை வசீகரிக்கின்றன. விஞ்ஞானி ஐன்ஸ்டைன் இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவர் கூறுகிறார். உலகிலேயே மிக அழகான, அதிசய அனுபவம், தெரியாத விடயங்களைப் பற்றியதுதான். கலையும் விஞ்ஞானமும் பிறப்பதற்கே அதுதான் காரணம்.

பிராய்டு, 'ஆழ்மனம் சுய போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் மாஸ்லோ ' ஆழ்மனம் அன்பு கொண்டதாகவும், ஆரோக்கியமானதாகவும் மகத்தான ஆக்க சக்தி படைத்ததாகவும் இருக்கக் காண்கிறார்.

மனிதனின் வாழ்வே மாமனிதனாகும் முயற்சிதான். அது தான் நோக்கம் என்றால், பரிணாம வளர்ச்சி அதை நோக்கித் தான் செல்கிறது என்பது உண்மையானால், நாம் மாமனிதர்களையும், அவர்களது குணங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது தான் நமது முழுத்திறமைகளும் வெளிப்பட்டு அவை பூரணத்துவத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும்.

**திறமைகள் மலரட்டும்**

எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாமலே பலர் சென்று கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குள் இருக்கும் திறமைகள் என்ன? தாங்கள் எங்கே பிரகாசிக்க முடியும்? என்பதைப் புரிந்து கொள்ளாமலே பலர் ஏதோ கிடைத்த இடத்தில், அகப்பட்ட வேலையில், வாழ்வை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.

நாம் யார் என்பது ஒரு முக்கியமான விடயமல்ல, ஆண், பெண், வயோதிபர், இளைஞர், கீழ் சாதி, மேல் சாதி, ஏழை, பணக்காரன் ஊனமுற்றவர் எல்லாம் ஓரளவுக்குத்தான் நமக்கு எல்லை வகுக்குமே தவிர, அவற்றால் நம்மைச் சிறைப்படுத்த முடியாது. நாம் எங்கே போகிறோம்? எதை அடைய விரும்புகிறோம் என்பதுதான் முக்கியம். நமது திறமைகள் என்ன? அவற்றை உபயோகிக்கிறோமா என்று நம்மை நாமே புரிந்துகொள்வது தான் முக்கியம்.

"பல்கலைக்கழகத்தில் படிக்கும் பெண்போல் அடக்கத்துடனும், உலகம் அறியாக் குழந்தை நிலையிலும் இருக்கிறார் இந்திராகாந்தி" என்று எழுதினார் வெல்ஸ்ஹேங்கன் என்ற பிரபல அமெரிக்க நிருபர். அந்த அடக்கம், பயம், அறியாமை என்பனவெல்லாம் நிஜமா என்பதை எண்ணிப்பாருங்கள். "செய்து முடிப்பேன்" என்ற திடமனமும், " நிரூபித்துக் காட்டுவேன்! என்று சவால்களை ஏற்கும் குணமும், அடைந்தே தீருவேன்!" என்ற இலட்சியப் பற்றும் இருந்தது அவரிடம். எத்தனையோ பெரிய உலக ராஜதந்திரிகளான நிக்சனையும், கிஸிஞ்சரையும், தாட்சரையும், டிகாலையும், நாசரையும் அவர் சமாளித்தார். இந்திய அரசியலின் பழம் பெருச்சாளிகளும் புது முதலைகளும் விடுத்த சவால்களை அவர் ஏற்றார்.

எம்.ஜி. ஆருக்கு நாட்டைப் பற்றிய தெளிவு இல்லை; தன்னைப் பற்றிய தெளிவு இருந்தது. அதை எப்படி உபயோகித்துத் தன் புகழை, தான் விரும்புவதைச் சாதித்துக்கொள்ளலாம் என்ற தெளிவு இருந்தது. இதன் விளைவாக தன் செல்வாக்கை நிலை நிறுத்திக் கொண்டு பதவியில் இருக்க முடிந்ததே தவிர தமிழ்நாட்டுக்கு தமிழ்நாட்டின் நிகழ்காலத்துக்கோ, வருங்காலத்துக்கோ - நன்மை தருவதாய் அவர் ஆட்சி அமையவில்லை.

எல்லோருக்கும் தெரிந்த பெரிய மனிதர்கள் எதைத் தங்கள் இலட்சியம் என்று பேசுகிறார்கள் என்பதையும் அந்த இலட்சியத்தை அடைவதற்கு அவர்களுக்குள்ள திறமைகளையும், இரண்டையும் இணைக்க அவர்கள் உருவாக்கும் திட்டங்களையும் மூன்றாம் மனிதராக நின்று ஆராயுங்கள். வெற்றி பெற்றவர்களையும் தோல்வியடைந்தவர்களையும் எடுத்துக் கொண்டு ஆராயுங்கள். இது ஒரு நல்ல பயிற்சி.

ஒரு தாளில் எழுதிப்பாருங்கள். பின்னால் நம்மைப் பற்றியும் ஒரு மூன்றாம் மனிதனாக நின்று ஆராய இது வழிகாட்டும்.

*எம்.எஸ்.உதயமூர்த்தி* (தொடரும்)

# மூன்றாந்தர மாணவர்களுக்கும், ஆசிரியருக்கும் குறைவான இடைவெளி இருக்க வேண்டும்

## கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன.25

மூன்றாந்தர மாணவர்களுக்கும், ஆசிரியருக்கும் இடையேயான இடைவெளி குறைவாக இருக்க வேண்டும். அப்போதுதான் நெருக்கமான உறவு, தொடர்பு இரு பகுதியினருக்குமிடையே காணப்படும். இது மாணவர்கள் சுதந்திரமாக செயற்படவும், தமக்கு புரியாதவற்றைப் பயமின்றி ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

அத்துடன் தரம் இரண்டு, தரம் மூன்று கற்பிக்கும் ஆசிரியர்களிடம் பிள்ளைகளை மட்டுமன்றி அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி ஆவணங்களையும் ஒப்படைத்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இல்லாத, இரண்டாம், முதன்மை நிலைக்குப் பிரவேசிக்கும் பிள்ளைகளுக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பநாள் விழா 2013 ஆம் ஆண்டே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசின் இந்தத் திட்டமானது வரவேற்கப்படக்கூடிய ஒன்றாகும் என்று கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.யார்க்கருவிநாயகர் வித்தியாலய மூன்றாந்தர மாணவர்களுக்கான ஆரம்ப விழா அண்மையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நற்குணலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டாம் முதன்மை நிலைக்குப் பிரவேசிக்கும் பிள்ளைகளுக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்ப நாள் இன்றாகும். ஏறத்தாழ இரண்டு வருட காலத்தை முதலாம் முதன்மை நிலை ஆசிரியருடன் கழித்த மாணவர்கள் மூன்றாந் தரத்தில் பிரவேசிக்கும் போது ஒரு புதிய வகுப்பறைச் சூழலையும், புதிய ஆசிரியரையும் சந்திக்கும் நாள்.

3ஆம் தர ஆசிரியர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்கள் எதிர்கொள்ளும் மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில், மாணவர்களை மாற்றியமைக்கக் கூடிய திட்டத்தை உடனடியாக வகுத்துக் கொள்ள வேண்டும். வேலைத் திட்டத்தை வகுக்கும்போது 3 ஆம் தர மாணவர்களது ஆற்றல்களையும், இயலாமைகளையும் இனங்கண்டு அதற்கேற்ப வகுக்க வேண்டும்.

தற்போதைய கல்வித் திட்டத்தில் 19 செயற்பாடுகளை மையமாகக் கொண்ட கண்காட்சி ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். மாணவர்கள் தமது கருத்துக்களை, எண்ணங்களை 19 செயற்பாடுகளுக்கூடாக ஆக்கங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம் தமது திறன்களை வெளிக்காட்டுவதுடன், மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கின்றது. மாணவர்கள் சிறப்பாக பல பரிமாணங்களில் தொழிற்பட இந்தநாள் வழி கோலுகின்றது-என்றார். (எ)



வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட பௌர்ணமி தின விழாவில் இடம்பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வின் ஒரு காட்சி (ம-86)

# வட மாகாணத்தில் இந்திய அரசின் நிதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

இந்திய அரசின் நிதியுதவியுடன் வட மாகாணத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாதிரி கிராம அபிவிருத்தித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இவ்வார முற்பகுதியில் யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 75 வருடங்களாக சேவையை ஆரம்பித்துள்ள இந்தியன் வங்கி, யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 2 வருடங்களாக சேவையை வழங்கி வந்தாலும், இதன் சேவை மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் இந்திய அரசின் ஒத்துழைப்புடன் பெரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படு கின்றன. குறிப்பாக யாழ். மாவட்டத் தில் மட்டும் 8 ஆயிரத்து 800 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்காக அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள இயக்குவதற்கு முழுமையான பங்களிப்பை இந்திய அரசு வழங்கியுள்ளது.

இதனை விட போக்குவரத்து வசதிக்காக ரயில் பாதைகளைப் புனரமைக்கும் பணியை இந்திய அரசு மேற்கொண்டு வருகின்றது. அபிவிருத்தி தொடர்பாக வேலைத் திட்டங்களில் விவசாயம், கால்நடை, சிறுகைத்தொழில் என உதவிகளையும் வழங்கியுள்ளது.

இந்த வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் சரியான முறையில் அபிவிருத்தியை நோக்காக வைத்து செயற்படுத்தும் பட்சத்தில் திட்டம் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதன் மூலம் உரிய அடைவையும் பெற முடியும்.

கடன் உதவிகளைப் பெறுகின்றவர்கள் அதனை சரியான வழிகளில் மீளச் செலுத்த வேண்டும். தனி நபர் ஒருவரின் அபிவிருத்திச் செயற்பாடுகள் பிரதேசத்தையும் அபிவிருத்தி அடையச் செய்யும்.


2015 ஆம் ஆண்டு வறுமைக் கோட்டின் கீழ் எவரும் இருக்கக் கூடாது எனும் மகிந்த சிந்தனையின் கீழ் மிகச் சுலபமாக வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட்டு மேற்கு கிராம மக்கள் இந்தியன் வங்கியிடம் இருந்து பெற்ற கடனை 99 வீதமானவர்கள் மீளச் செலுத்தி இருப்பதனைக் கொண்டு கடன் உதவி மூலம் எந்தளவு வருமானத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதையும், அவர்களது நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

தனிநபர் ஒருவரின் அபிவிருத்தி ஊக்கம் செய்யப்படும் போது பிரதேசம், மாவட்டம் முன்னேற்றம் கண்டு நாட்டில் அபிவிருத்தி ஏற்படும்.

மாவட்டத்தின் தேவைகளுக்காக இணைந்து செயற்படும் இந்திய அரசுக்கு நாம் உற்சாகம் வழங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்தி மாவட்டத்தின் அபிவிருத்திக்காகச் செயற்பட வேண்டும்-என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறுமலர்ச்சி கண்ட மாநபி

■ பைஸல் பழீல்

நாம் வாழும் இவ்விரிபுவியில் அன்றிலிருந்து இன்றுவரை ஒரு சமயத்தின் தலைவராகவும், ஒரு சாம்ராஜ்யத்தின் தலைவராகவும், ஒரு சமூகத்தின் தலைவராகவும் வாழ்ந்து வரலாறு படைத்த சிறப்புக்குரிய ஒரே மனிதர், மறுவிலாது எழுந்த முழு மதியாம் எங்கள் நபிகள் நாயகம் முஹம்மத்(ஸல்) அவர்களே எனச் சொன்னால் அதனை எதிர்மனங்கொண்டோரும் ஏற்றுக்கொள்வர்.

இவ்வாறு வள்ளல் நபி (ஸல்) வரலாறு படைக்கக் காரணம் என்ன எனச் சிந்திப்போமேயானால் அவர்களது வாழ்வெங்கும் மனிதகுலம் கடைப்பிடித்து வந்த மரபுவழி வாழ்வை மாற்றி அதிலே மறுமலர்ச்சி என்னும் சீர்திருத்தத்தை ஏற்படுத்திய விந்தையைக் காணலாம். உலகில் எந்தத் தலைவரும் - தீர்க்கதரிசிகளும் செய்யாத - செயற்கரிய சேவைகள் நம் நபி முஹம்மத்(ஸல்) அவர்களால் செய்யப்பட்டதை - சாதனைகளாக அவை மலர்ந்ததை வரலாற்றாசிரியர்கள் விதந்துரைக்கின்றனர்.

நபியவர்கள் தோன்றுவதற்கு முன்னர் பண்டைய அரேபியாவில் மக்கள் மாக்களாகவே வாழ்ந்தனர். குடியும் கூத்துமாக உல்லாச உப்பரிகையிலேயே அக்கால அரேபியர் வாழ்ந்தனர். கண்ட கண்ட உருவங்களை எல்லாம் தம் கைகளால் சிலைகளாக வடித்து அவற்றையே இஷ்ட தெய்வமாகஎண்ணி வணங்கி வரலாயினர். இதனால் அக்கால அரேபியரிடையே ''என் கடவுள்தான் பெரிது; உன் கடவுள்தான் சிறியது'' என்ற முரண்பாட்டு பேதங்கள் - பல்வேறு பிரிவுகளை ஏற்படுத்தி சிதறி - சின்னாபின்னப்பட்டு சீரழிந்து வாழ்ந்தனர்.

இந்தக் காட்டரேபியர்களை முதலில் ஏகத்துவ இறைக்கொள்கையை எடுத்தோதி ''இறைவனுக்கு உருவமில்லை; அவனே நம்மனைவரையும் படைத்தான்; அவனே சர்வசக்தி படைத்த வல்லவன்; அவனுக்கு இணையுமில்லை - துணையுமில்லை'' எனக்கூறி ஏகத்துவ சிந்தனையின் கீழ் ஒன்றுபடுத்தினர். இது இறைநபி (ஸல்) செய்த முதற் சீர்திருத்தம் அல்லது மறுமலர்ச்சி எனத் துணியலாம்.

அடுத்து அன்றைய அரேபியர் 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என வாழ்ந்து வரலாயினர். மனித வாழ்வின் உன்னத பண்புயர் விழுமியங்களை விளங்காத பதர்களாகவே, நபி இஸ்லாமியத் தூதை போதிக்க முன் அரபுமக்கள் வாழ்ந்து வரலாயினர். இவர்களிடையே மனித வாழ்வின் உயர் பண்புகளை விளக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழத் தக்க வழிமுறைகளை - வரம்பு நிலைகளை வள்ளல் நபியவர்கள் போதித்தார்கள். இறைதூதராக அல்லாஹ்வால் நபியவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அவ்வப்போது தேவைக்கேற்ப வானவர்கோன் ஜிப்ரீல் (அலை) மூலம் அருளப்பட்ட இஸ்லாமிய தூது, மக்கள் மத்தியில் மாநபியால் பரப்பப்பட்டது. வஹீ வசனங்கள் வையகமெங்கும் தூவப்பட்டன.

### இதன் விளைவு என்ன தெரியுமா?

நபித்துவம் கிடைத்து(40 ஆவது வயதில்) நபியவர்கள் வபாஃத் தாகும் வரையிலான(63 வயதில்) 23 வருட கால எல்லைக்குள் இஸ்லாமியத் தூதினைப் பூரணப்படுத்தி மாக்களாக - மதிதவறி வாழ்ந்த மனிதர்களை, மனிதப் புனிதர்களாக பூமான் நபியவர்கள் மாற்றினார்கள்; ஏற்றினார்கள். இது மாநபி செய்த மற்றொரு மறுமலர்ச்சியே.

இதற்கு உதாரணங்களாக உத்தம நபியின் சத்திய வாழ்வில் எத்தனையோ சம்பவங்களை எடுத்தாள முடியும். பதச்சோறாக ஒன்றை மட்டும் உரத்துச் சொல்வோமாக. ஏகத்துவ பிரசாரத்தை மேற்கொண்ட பெருமானார் நபி முஹம்மதை ''தலையை வெட்டுவேன்'' என வாளேந்தி வலம் வந்த உமர் என்னும் காட்டரபி இஸ்லாத்தைத் தழுவுகின்றார். பார் போற்றும் நபியின் பாசறையில் பட்டை தீட்டப்பட்ட பக்குவ மனிதராகப் படிப்படியே மாறுகின்றார்; தேறுகின்றார்.

இறை நபியவர்கள் வபாஃத்தான பின் 'குலபாயே ராசிதீன்' என்னும் கலீபாக்களின் பொற்காலம் பூக்கின்றது. 2 ஆவது கலீபாவாக உமர் (ரலி) அவர்கள் ஆட்சிபீடம் ஏறி, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை அரசாண்டு வருகின்றார். ஓர் இஸ்லாமிய ஆட்சி மனுக்குலத்திற்குப் பயனுறும் நல்லாட்சி எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக உமரின் ஆட்சி திகழ்கின்றது. தீன்மானம் கமழ்கின்றது. உமரின் ஆட்சியின் மாட்சியை மாற்றாரும் போற்றிப் புகழ்கின்றனர்.

பக்கத்தேயிருக்கும் பாரத தேசத்தின் தந்தை எனப் புகழப்படும் அண்ணல் காந்தி ஒரு முறை இவ்வாறு பகர்ந்தார்கள். ''இந்தியா இன்னும் சில காலத்தில் சுதந்திரம் பெற்றுவிடும். அப்படி என் தாயகம் இந்தியா சுதந்திரம் பெற்றபின், இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் 2 ஆவது கலீபா உமர் (ரலி) அவர்களைப் பின்பற்றி உமரின் ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்துங்கள்'' எனக் கூறினார் என்றால் வாளேந்தி வலம் வந்த மனிதர் எப்படி புவி போற்றும் புது மனிதனாக மாறினார் - தேறினார் என்றால் அது மாநபி செய்த மறுமலர்ச்சியன்றி வேறென்ன? சீர்திருத்தமன்றி வேறென்ன?

> ''இறைவனுக்கு உருவமில்லை; அவனே நம்மனைவரையும் படைத்தான்; அவனே சர்வசக்தி படைத்த வல்லவன்; அவனுக்கு இணையுமில்லை- துணையுமில்லை'' எனக்கூறி ஏகத்துவ சிந்தனையின் கீழ் ஒன்றுபடுத்தினர்.

இன்று உலகின் எந்த நாட்டிலும் பெண்ணியம் பற்றி பேசப்படுகின்றது. அதாவது, பெண்களுக்கான உரிமை - சுதந்திரம் பற்றி விளக்கப்படுகின்றது. ஆனால் மாநபியவர்கள் மாதர்களின் இழிநிலையைப் போக்கி பெண்ணினத்துக்கு வழங்கிய சுதந்திரத்தை சமூக விஞ்ஞானிகள் போற்றிப் புகழ்கின்றனர். 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' என வரலாற்றாசிரியர்களால் வர்ணிக்கப்பட்ட அறியாமைக்கால அரேபியாவில் பெண் குழந்தை பிறந்தால் அது அவமானச் சின்னம் எனக் கருதப்பட்டு உயிருடனேயே குழிதோண்டிப் புதைத்து விடும் கொடூரம் அன்று கொடிகட்டிப் பறந்தது. தந்தை இறந்துவிட்டால் தந்தையின் சொத்திலே மகளுக்குப் பங்கில்லை. பாத்தியதை சிறிதுமில்லை எனப் பேசப்பட்டது. பெண் என்பவள் குழந்தையைப் பெற்றுத் தரும் ஓர் இயந்திரம் என்றே அறியாமைக்காலத்தில் மதிக்கப்பட்டாள்.


இந்த நிலையை மாற்றியமைத்து பெண்களுக்கு ஆண்களைப் போன்று சமுதாய வாழ்வில் அனைத்து உரிமைகளும் உண்டு எனப் போதித்தார். கல்வி கற்பதிலிருந்து எல்லா வேலைகளையும் செய்யவும், சாதனைகளைப் புரியவும் உரிமையுண்டென உரைத்தார். ''தாயின் பாதத்தடியில்தான் பிள்ளைகளின் சுவர்க்கம் உண்டு'' என ஒரங்கமாக உரத்துக்கூறி பெண்ணின் நிலையை தரத்தை உயர்த்தினார். திருமண விடயங்களில் ஆண்களுக்கு கைப்பற்றவும் - கைகழுவவும் உரிமை இருப்பது போன்று, பெண்களுக்கும் உரிமை உண்டென உரைத்தார். தந்தையின் சொத்திலே பெண் மகளுக்கும் பங்குண்டு என்பதைப் பறைசாற்றினார். இது மாநபி செய்த மறுமலர்ச்சியே.

இப்படி தொட்ட துறை அனைத்திலும் பழைய இழிநிலையை இல்லாதொழித்து மனித குலம் மரணிக்கும்வரை சாத்தியமாகும் அறக்கொள்கைகளைப் போதித்து எல்லா விடயங்களிலும் வித்தக நபியவர்கள் மறுமலர்ச்சி கண்டார்கள் என்றால் அதில் மாற்றுக்கருத்துக்கு இடமேயில்லை.

மாநபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தன் வாழ்வில் எதைப் போதித்தார்களோ அதைச் சாதித்தும் காட்டினார்கள். எதையெல்லாம் சாதித்துக் காட்டியிருந்தார்களோ அதையெல்லாம் போதித்தும் இருந்தார்கள். இதிலிருந்து மாநபியின் வாக்கும் - போக்கும் - நோக்கும் நடைமுறை வாழ்வில் சாத்தியமாகக்கூடியவையே என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

இந்த அருமை - பெருமைகளையெல்லாம் உத்தேசித்தே அல்லாஹ் பெருமானார் மீது ஸலவாத் சொல்கிறான். மலக்குமார்களாகிய வானவர்களையும் நபி முஹம்மத் மீது ஸலவாத் சொல்லும்படி பணித்திருக்கிறான். அவ்வாறே மனிதர்களான முஸ்லிம்களையும் நபி முஹம்மத் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லும்படி ஏவுகிறான். ஆக அல்லாஹ்வும் மலக்குமார்களும் இன்ஸான்களாகிய மனிதர்களும் ஸலவாத் ஸலாம் என்னும் ஒரே இபாதத்தைச் செய்கின்றனர். இது நபிகள் நாயகத்தின் பெருமையையன்றோ பேசுகின்றது. அதனால் அண்ணல் நபி முஹம்மத் (ஸல்) மீது நாமும் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இலங்கையில் நீதித்துறை இழைத்த தவறே மஹிந்தவை அதிகார சக்தியாக மாற்றியது

1978இல் இலங்கைக் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்ட வேளையில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதிகளை இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி நியமிப்பார் என்று வரையறுக்கப்பட்ட போது, இலங்கையின் சுயாதீன நீதித்துறை இதனை எதிர்க்கவில்லை.

தலைமை நீதியரசராகக் கடமையாற்றிய கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மீது மிகக் குறுகிய காலத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அவரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு அவருக்குப் பதிலாக ஜனாதிபதியின் செயலக ஆலோசகராகப் பணிபுரிந்த மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமையானது ராஜபக்ஷ அரசைப் பலவீனப்படுத்தியுள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க பதவியிலிருந்து நீக்கப்பட்டமையானது சுயாதீன நீதித்துறை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என பெரும்பாலான சட்டவாளர்களும், நீதிபதிகளும் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களும் கூறுகின்றனர்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பின் பிரகாரம் இவ்வாறானதொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை மேற்கொள்ளப்பட முடியாது என உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. இந்த நகர்வானது அனைத்துலக சமூகத்தின் கவனத்தையும் கண்டனத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

ராஜபக்ஷவை மேலும் நிறைவேற்று அதிகார சக்தியாக மாற்றுவதற்கு இலங்கையின் உயர் நீதிமன்றம் உடந்தையாக இருந்ததாக சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

### குடியரசு யாப்பும் நிறைவேற்று அதிகாரமும்

1978இல் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்ட போது அதில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை கொண்டு வரப்பட்டது. அந்த வேளையில், இலங்கையின் உயர் நீதிமன்ற நீதிபதிகளை இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி நியமிப்பார் என்பது வரையறுக்கப்பட்டது. அப்போது இலங்கையின் சுயாதீன நீதித்துறை இதனை எதிர்க்கவில்லை. இது நீதித்துறை இழைத்த தவறாகக் காணப்படுகிறது.

இந்த அடிப்படையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மேலும் பலப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றம் துணைபுரிந்திருந்தது. எடுத்துக்காட்டாக, தேர்தலில் போட்டியிடாது தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கான தீர்வுக்கு உயர் நீதிமன்றம் எவ்வித எதிர்ப்பையும் காண்பிக்கவில்லை. இதனால் தற்போது ராஜபக்ஷவின் ஆளும் கூட்டணி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடிவதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த இருபதாண்டுகளாக இலங்கையின் நிறைவேற்று அதிகார சக்திக்கும் நீதித்துறைக்கும் இடையில் எந்தவொரு முரண்பாடும் ஏற்படவில்லை.

கடந்த சில மாதங்களின் முன்னர், நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் துறையின் அதிகாரங்களை மத்தியமயப்படுத்தி இலங்கை ஜனாதிபதியின் சகோதரர்களில் ஒருவரும் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவின் அமைச்சின் கீழ் வழங்குவது தொடர்பில் வரையப்பட்ட நாடாளுமன்றச் சட்ட வரைபு ஒன்றை உயர் நீதிமன்ற தலைமை நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவின் தலைமையிலான நீதிச் சேவைகள் ஆணைக்குழு எதிர்த்திருந்தது.

இதுவே மறைமுகமாக ஷிராணி பண்டாரநாயக்கவைப் பதவியிலிருந்து நீக்க காரணமாக அமைந்ததாக இவரின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

### குடும்ப ஆட்சியும் பொருளாதார சவாலும்

தற்போது இலங்கை ஜனாதிபதி மட்டுப்படுத்தப்படாத ஆட்சிக்காலத்தைக் கொண்டுள்ளார். இவரது சகோதரர்களும் நாட்டின் முக்கிய உயர் பதவிகளில் உள்ளனர். அத்துடன் இலங்கையின் பாதுகாப்புப் படைகள் ராஜபக்சவின் இளைய சகோதரரான பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவின் கட்டுப்பாட்டின் கீழுள்ளது. அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் நாடாளுமன்ற சபாநாயகர் காணப்படுகிறார். தற்போதைய சபாநாயகர் ஜனாதிபதியின் மூத்த சகோதரரான சமல் ஆவார். இதேபோன்று அவரின் பிறிதொரு சகோதரரான பசில் ராஜபக்ஷ பொருளாதாரத் துறையைக் கட்டுப்படுத்துகின்றார்.

> 1978இல் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டபோது அதில் நிற்றவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை கொண்டு வரப்பட்டது. அந்த வேளையில், இலங்கையின் உயர் நீதிமன்ற நீதிபதிகளை இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி நியமிப்பார் என்பது வரையறுக்கப்பட்டது.

தற்போது இலங்கையில் ஆட்சிப் போராட்டம் ஒருபுறமும் அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் மறுபுறமும் ஏற்பட்டுள்ளன. போர் முடிவுற்றதன் பின்னர் இலங்கை மீதான வெளிநாட்டு முதலீடுகள் குறைவாகக் காணப்படுகின்றன. 2011இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 8.3 சதவீதமாகக் காணப்பட்டது. கடந்த ஆண்டில் இந்த வீதம் 6.5 ஆகக் குறைவடைந்திருந்தது. நடப்பாண்டிலும் இதே வளர்ச்சியே காணப்படுவதாகப் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தே இலங்கையின் வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ளது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தக நடவடிக்கையில் ஏற்பட்ட முரண்பாட்டால் தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதியானது பகுதியளவில் கைத்தொழில் வளங்கள் மற்றும் விவசாய உற்பத்திகளில் தங்கியுள்ளதானது நல்லதொரு சமிக்ஞையாகக் காணப்படவில்லை.

### முன்னேற்றமில்லா மீள் இணக்கப்பாடு

இதேபோன்று இலங்கையில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு- கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் நாட்டில் மேற்கொள்ளப்படும் மீளிணக்கப்பாட்டு முயற்சி முன்னேற்றத்தை எட்டாது தடைப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், அமைதி முறையில் மாவீரர் நாளைக் கொண்டாட முற்பட்ட போதும் சில மாணவர்கள் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் மஹிந்த அரசு

இலங்கை அரசு மீது ஏற்கனவே போர்க்கால மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. ஐ.நா மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதம் மேற்கொள்ளப்படவுள்ளது.

முன்னாள் தலைமை நீதியரசர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பொதுநலவாய அமைப்பு தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்குபெறும் உச்சிமாநாடானது இந்தாண்டின் இறுதியில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த இடமான அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை அரசு மற்றும் இலங்கை ஜனாதிபதியின் தன்னிச்சையான செயற்பாடுகளையும் போர்க் கால மீறல்கள் தொடர்பில் அரசு பொறுப்பளிக்காமை போன்றவற்றைச் சுட்டிக்காட்டியுள்ள பொதுநலவாய அமைப்பின் முக்கிய இரு நாடுகளான கனடா மற்றும் பிரிட்டன் ஆகியன இலங்கையில் இந்த நிலை தொடர்ந்தால் தாம் அங்கு இடம்பெறும் உச்சிமாநாட்டைப் புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்திருந்தனர்.

ஜனாதிபதி ராஜபக்ஷ பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பொறுப்பளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்த நிலையில் ராஜபக்ஷ தனக்கு விசுவாசமான மொஹான் பீரிஸை புதிய தலைமை நீதியரசராக நியமித்துள்ளார்.

இலங்கையில் காணாமற் போனதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஊடகவியலாளர் ஒருவர் தற்போது பிறிதொரு நாட்டில் உயிருடன் வாழ்வதாக ஐ.நா விடம் மொஹான் பீரிஸ் முன்னர் தெரிவித்திருந்தார்.

அதாவது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையால் குற்றம் சாட்டப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டை நிராகரித்து விவாதிக்கும் போதே மொஹான் பீரிஸ் இவ்வாறானதொரு முரண்பாடான, சர்ச்சைக்குரிய தகவலை முன்வைத்திருந்தார்.

ஆனால் இந்தத் தகவல் உறுதிப்படாத ஒன்று என கண்டறியப்பட்டது. இவ்வாறானதொரு பிழையான, பொய்யான தகவலை வழங்கியிருந்த மொஹான் பீரிஸை இலங்கை ஜனாதிபதி தலைமை நீதியரசராக நியமித்துள்ளமையானது பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. இது நாட்டில் சுயாதீன நீதித்துறை ஒன்று இயங்குவதை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

பெரும்பாலான இலங்கையர்கள் தாம் இருண்ட பாதாள உலகின் விளிம்பில் நிற்பதை உணர்கிறார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமற்ற ஒன்றாகும். ★

*(நன்றி: புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை அறிந்தால் நிம்மதி

அவன் ஒரு கோபக்காரன். இவன் ஒரு சுயநலவாதி. அந்த மனிதன் எதற்கும் உதவாதவன். அவன் ஒரு பித்தன்.

இவன் ஓர் அகங்காரம் பிடித்தவன்.

இப்படி மற்றவர்களைப் பலர் விமர்சனம் செய்கிறார்கள். ஆனால், தங்களைப் பற்றி சுய விமர்சனம் செய்து கொள்கிறவர்கள் யார்?

இந்த வினாவுக்குப் பதில் இல்லை என்றே கூற வேண்டும்.

மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுகிறவர்கள் தங்கள் குறைகளைக் கவனிப்பதே இல்லை. அதனால் தான் அவர்களால் நிம்மதியோடு வாழ முடிவதில்லை.

உண்மை என்பது கசப்பான மருந்து. மருந்து கசக்கிறது. அதைச் சாப்பிடமாட்டேன் என்று சொல்பவன் பேதைமை உடையவன் தான். தங்களைப் பற்றி சுயவிமர்சனம் செய்து கொள்கிறவர்கள் தங்களைத் தாங்களே குணமாக்கிக் கொள்ள வல்லவர்கள்.

மற்றவர்களைக் காட்டிலும் உங்களைப் பற்றிய உண்மை உங்களுக்கே முழுமையாகத் தெரியும். எனவே நீங்கள் முதலில் உங்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

அப்போதுதான் நிம்மதிக்கு என்ன செய்ய வேண்டும் என்ற தெளிவு வரும்.

உங்கள் குடும்பத்தை நீங்கள் நேசிக்கிறீர்களா? எல்லோரிடமும் சமமான அன்பைக் கொண்டிருக்கிறீர்களா? குடும்பத்தை வறுமையில் ஆழ்த்தாமல் இருக்கிறீர்களா? விரயங்களைச் செய்துவிட்டு உங்களை நம்பியிருப்பவர்களைப் பட்டினி போடாமல் இருக்கிறீர்களா?

உங்களுடன் நட்புடன் வாழ்கிறவர்களை மனம் புண்படுத்தாமல் காரியங்களைச் செய்கிறீர்களா?

தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டித்துத் திருத்துகிறீர்களா?

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் இருக்கிறீர்களா? பணத்துக்காக சுயகௌரவத்தை விட்டுக் கொடுக்காதவர்களாக இருக்கிறீர்களா?

செல்வம் படைத்தவர்களுக்காகப் பரிந்துபேசி பாமரர்களைத் துச்சமாகப் பேசும் குணம் உடையவர்களாக இல்லாமல் இருக்கிறீர்களா?

ஏற்றுக்கொண்ட இலட்சியத்தில் உறுதியுடையவர் களாக இருக்கிறீர்களா? தடைகள் பல வந்தாலும், அதனைத் தகர்த்தெறியும் வல்லமை உங்களிடம் இருக்கிறதா?

தெய்வத்தை முழுமையாக நம்பி காரியம் ஆற்று கிறீர்களா? பெரியோர்களை மதித்துப் போற்றுகிறீர்களா? தாய், தந்தையை மனம் கோணாமல் பாதுகாக்கிறீர்களா? உங்களிடம் உதவி என்று கேட்பவர்களுக்கு முடிந்ததைக் கொடுக்கிறீர்களா?

மற்றவர்களை ஏளனம் செய்து நகையாடாதவர்களாக வாழ்கிறீர்களா? கலகம் செய்யும் அற்ப குணம் உங்களிடம் இல்லாமல் இருக்கிறதா?

உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மற்றவர்கள் மீது அபாண்டமான பழி சுமத்தும் அற்ப குணம் இல்லாதவர்களாக இருக்கிறீர்களா? உங்கள் கடமைகளைத் தவறாமல் செய்யும் குணம் உடையவர்களாக இருக்கிறீர் களா?

செய்நன்றி மறவாதவராக இருக்கிறீர்களா? நண்பர்களைக் கஷ்டமான காலங்களில் கைவிடாதவர் களாக இருக்கிறீர்களா? உறவினர்களுக்கு உதவி செய்யும் குணமுடையவர்களாக இருக்கிறீர்களா?



யாருக்கும் எண்ணத்தால் தீமை செய்யாமல் இருக்கிறீர்களா? எவருக்கும் சொல்லால் தீமை செய்யாமல் உள்ளீர்களா? எவருக்கும் செயலால் தீமை புரியாமல் இருக்கிறீர் களா? இவை அனைத்துக்கும் 'ஆமாம்' என்று உங்களால் சொல்ல முடியுமானால் நீங்கள் உத்தமர்தான்.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# 138 வருட கல்விச் சேவையில் நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை



ஞானி

(கடந்தவாரத் தொடர்ச்சி......)

1980 இதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் விடுதலைப் போராட்ட உணர்வு மேலிட்டது. போராட்டச் செயற்பாடுகள் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட சூழல் நிலவியது. இராணுவ நடவடிக்கை நாளுக்கு நாள் மேலிட்ட நிலையும் இருந்தது. இதனால் நகரப்புறப் பாடசாலையை நாடி மாணவர்கள் கிராமப்புறங்களில் இருந்து செல்லும் நிலை ஆரம்ப வகுப்பு மட்டத்தில் மிகமிகக் குறைவாகக் காணப்பட்டது. இந்த நிலையில் தமது பிள்ளைகளை வீட்டுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் சேர்த்து கற்பித்தனர்.

வலி.கிழக்குப் பிரதேசத்தில் மூத்த கல்விக் கூடங்களில் ஒன்றாகவும், நீர்வேலி கிராமத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்வி கட்டமைப்பின் காலத்தில் முதன்மையானதாகவும் விளங்கும் நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை, 138 வருட கல்விச் சேவையில் உயர்ந்து நிற்கிறது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் நீண்ட காலமாக ஏறத்தாழ 60 வருட காலம் ஓலைக் கொட்டிலில் தனது கல்விச்சேவையை மேற்கொண்டு வந்தது. அதன் பின்பு உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் நிரந்தரக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. ஆரம்பகாலக் கொட்டில் கட்டமைப்போடு, அதிபர் தங்கியிருந்து கடமை புரிவதற்கு அதிபருக்கான தங்குமனையும் அமைக்கப்பட்டிருந்தது என கூறப்படுகின்றது.

பாடசாலையின் ஆரம்ப காலம் தொடக்கம் அதிபர், ஆசிரியர்களாகக் கடமையாற்றியோர் மிகுந்த அர்ப்பணிப்போடு கடமையாற்றினர். அவர்களுக்குப் பாடசாலைச் சமூகத்தினால் சகல வகையிலும் பூரணமான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. கிராமத்தின் அங்கமாக பாடசாலை கருதப்பட்டது. பாடசாலையில் கடமை புரியும் அதிபர், ஆசிரியர்கள் தமது குடும்ப உறுப்பினர்களின் ஒருவராகச் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

நீர்வேலி கிராமத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்வி கட்டமைப்பின் காலத்தில் முதன்மை யானதாகவும் விளங்கும் நீர்வேலி சி.சி.த.க பாடசாலை 138 வருட கல்விச் சேவையில் உயர்ந்து நிற்கிறது. பாடசாலை ஆரம்பிக் கப்பட்ட காலம் தொடக் கம் நீண்ட காலமாக ஏறத்தாழ 60 வருடகாலம் ஓலைக் கொட்டிலில் தனது கல்விச் சேவையை மேற்கொண்டு வந்தது.

1935 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதிபரோடு நான்கு ஆசிரியர்கள் கடமை புரிந்துள்ளனர். அவர்களில் அதிபர் 54 ரூபாவையும், ஏனைய மூவரும் 49 ரூபா, 35 ரூபா, 20 ரூபா என்ற அளவில் மாதாந்தம் வேதனமாகப் பெற்றுள்ளனர். பிரிட்டன் மன்னரின் உருவம் பொறிக்கப்பட்ட 05 சத முத்திரையில் கையொப்பம் இடப்பட்டு வேதனம் பெறப்பட்டது. பாடசாலையின் ஆரம்பகால அதிபரின் பெயர் விவரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் 1928 ஆம் ஆண்டில் இருந்து அதிபர்களாக கடமையாற்றியோரின் விவரங்களை அறியக் கூடியதாக இருந்தது.

அதிபர் பெயர் விவரம் வருமாறு:-

ஏ.டி.சுப்பிரமணியம் 1928-1933, ஜே.ரி.சுப்பிரமணியம் 1933-1934, ஏ.எஸ்.சண்முகம் 1934- 1970, எஸ்.வேதவனம் 1971-1974, ரி.வேலுப்பிள்ளை 1974-1985, பி.கதிரவேலு 1985-1991, எஸ்.செல்வநாயகம் 1991-1991, எஸ்.குணலிங்கம் 1991-1996, கே.ஆர்.இராசசேகரம் 1996- 2002, எஸ்.செல்வநாயகம் 2002-2008, கு.குகானந்தன் 2008-2009, ப.[illegible] 2009-2010.

2010-06-16 ஆம் திகதியில் இருந்து இ.பசுபதீஸ்வரன் அதிபராகக் கடமையாற்றுகின்றார். இங்கே அதிபர்களாக, ஆசிரியர்களாகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டோர் பாடசாலை சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றனர். கரவெட்டியைச் சேர்ந்த ஏ.எஸ்.சண்முகம் 36 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்.

பாடசாலைச் சமூகத்தின் தேவையோடு கூடிய சமூகத்தின் வற்புறுத்தலை அடுத்து, 1994 ஆம் ஆண்டு தரம் 8 வகுப்பு வரை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அயலில் பிரபலமான பாடசாலைகள் இருந்த போதிலும் பாடசாலையில் வகுப்புக்களை 8 வரை நடத்துவதற்கு அனுமதி வழங்கி பாடசாலையை தரம் உயர்த்தியதற்குக் காரணம் கோப்பாய் கோட்ட ஆரம்பப் பாடசாலைகளில் நீர்வேலி சி.சி.தக. பாடசாலை கல்வி அடைவு மட்டத்திலும், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் இருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

த.வேலுப்பிள்ளை அதிபராக இருந்த காலப் பகுதியிலேயே பாடசாலையின் வளவில் குடிதண்ணீர் பெறுவதற்கான கிணறு அமைக்கப்பட்டதோடு புதிய கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. அத்துடன் 1982, 1983 ஆம் ஆண்டுகளில் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் முதல் தரமான ஆரம்பப் பாடசாலையாக நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை விளங்கியது.

பி.கதிரவேலு அதிபராக இருந்த காலப் பகுதியில் கிராம சேவையாளர் எஸ்.வேலாயுதபிள்ளையின் ஒத்துழைப்புடன் 1985 ஆம் ஆண்டு பாடசாலைக்கான சுற்று மதில் கட்டப்பட்டதோடு, பாடசாலைக்கான இரும்புக் கேற்றும் போடப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வோடு பாடசாலையின் ஆவணங்கள் அழிவடைந்ததோடு, கட்டடங்களும் சேதமடைந்தன. மீளக் குடியேறிய நிலையில் சேதங்கள் சீர்செய்யப்பட்டதோடு ஜி.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் மாணவர்களுக்கான மலசலகூடம் நவீனமயப் படுத்தப்பட்ட முறையில் அமைக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு கனடாவில் உள்ள நீர்வேலி நலன் புரி சங்கத்தின் உதவியுடன் சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டது. யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் குடிதண்ணீர் தாங்கி கட்டப்பட்டது.

ஆண்டுதோறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமை பெறுகின்றனர். 1999 ஆம் ஆண்டு கோட்ட மட்டத்தில் 2 ஆம் இடத்தை பெற்ற அ.கரீந்திரன், இ.சம்பிகா இருவரும் தற்போது வைத்தியர்களாக பணி புரிகின்றனர். 2001 ஆம் ஆண்டு த.கிருத்திகா மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றதோடு, 2010 ஆம் ஆண்டு ப.ரஜீவ் கோட்ட மட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தமிழ்த்தினப்போட்டி, விளையாட்டுப்போட்டி மற்றும் போட்டிகளில் கோட்ட, மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்று பாடசாலைக்கு மாணவர் பெருமை சேர்த்திருப்பதோடு பாடசாலையின் பழைய மாண வர்கள் பல்வேறு துறைகளிலும் முன்னிலையில் துலங்குகின்றனர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 மாகாணங்களில் இடியுடன் கடும் மழை பெய்யும் சாத்தியம்

நுவரெலியா,ஜன.25

காலநிலையில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்களால் ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் வடமத்தி, மத்தி, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு வானிலை அவதான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த மாகாணங்களில் இடி, மின்னலுடன் கடும் மழை பெய்யும். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகக் கடும் மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளது என்று வானிலை அவதான நிலையத்தின் கடமை நேர அதிகாரி சன்ன ரொட்றிகோ கூறினார்.



மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகளால் வரையப்பட்ட ஓவியக்கண்காட்சி மட்டு. இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. அந்தக் கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் பார்வையிட்டனர்.

## பஸ் நடத்துநர் மீது தாக்குதல்; மன்னிப்புக் கோரினர் மாணவர்

அம்பாறை,ஜன.25

இலங்கைப் போக்குவரத்து சபையின் அக்கரைப்பற்று சாலை பஸ் நடத்துநர் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் தாக்கப்பட்ட பிரச்சினை சமாதானமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

நடத்துநரை தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட மாணவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் வைத்து தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அத்தோடு பாதிக்கப்பட்ட நடத்துநரிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து குறித்த விவகாரம் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது என்று அக்கரைப்பற்று சாலையின் ஊழியர்கள் சங்கச் செயலர் ஏ.எம். முபாறக் தெரிவித்தார். அதேவேளை தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது, பஸ் நடத்துநரிடமிருந்து தொலைந்து போன பணத்தையும் மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் வைத்து வழங்கியுள்ளனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட இலங்கை போக்குவரத்து சபையின் அக்கரைப்பற்று சாலை பஸ் நடத்துநர் மீது, பஸ்ஸில் பயணித்த மாணவர்கள் சிலர் தாக்குதலை மேற்கொண்டனர். அதனையடுத்து நடத்துனர் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

# சுதந்திர தினத்தையொட்டி திருமலையில் பாதுகாப்பு

### படையினர் குவிப்பு; ரோந்து அதிகரிப்பு

திருகோணமலை,ஜன.25

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருகோணமலை நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

சந்திகள் மற்றும் முக்கிய கேந்திர இடங்களில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

படையினர் மற்றும் பொலிஸார் வீடு, வீடாகச் சென்று வீட்டில் இருப்பவர்கள் யார், வேறு யாரும் தங்கியிருக்கின்றார்களா? என்பதைக் கேட்டு பதிவு செய்து வருகின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகரின் பிரதான வீதியின் விரிவாக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. வீதியின் மத்தியிலிருந்து இரு பக்கங்களிலும் பத்தடி வரை அகலமாக்கப்பட்டு வருகிறது.

சுதந்திரதினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு திருகோணமலை கல்வி வலயத்திலிருக்கும் 19 பாடசாலைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை இயங்கமாட்டா என்று கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை சுதந்திர தின விழா நிகழ்வுகள் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

1953 ஆம் ஆண்டில் திருகோணமலையில் சுதந்திர தின நிகழ்வுகள் நடத்தப்பட்டதன் பின்னர், இந்த ஆண்டுக்கான சுதந்திரதின விழா திருகோணமலையில் கொண்டாடப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு திருகோணமலையின் பல வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. நகரின் பல பிரதேசங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திர தின நிகழ்வுகளில் சகல சமயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல்வேறு கலை, கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

சுதந்திர தினம் எதிர்வரும் 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளமை தெரிந்ததே. (ச)

## கல்முனையில் நிறைவேற்றப்படாத நூற்றுக்கும் மேற்பட்ட பிடி ஆணைகள்

### பொலிஸ் பொறுப்பதிகாரி தகவல்

கல்முனை,ஜன.25

நீதிமன்றத்தால் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டு இதுவரை நிறைவேற்றப்படாத 100 இற்கும் மேற்பட்ட பிடி ஆணைகள் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ளன.

இவ்வாறு கல்முனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி வசந்தகுமார தெரிவித்தார்.

கல்முனை பிரதேச மட்ட சிவில் பாதுகாப்பு குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீலாவனை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் நீதிமன்றத்தால் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டு இதுவரை நிறைவேற்ற முடியாமல் நூற்றுக்கும் மேற்பட்ட பிடி ஆணைகள் உள்ளன.

**தலைக் கவசமில்லாமல் மோட்டார் சைக்கிள் செலுத்துவோரின் விகிதமும் கல்முனை பிரதேசத்தில் அதிகரித்துள்ளன.**

அவற்றை நிறைவேற்ற மக்களுடன் கடமை புரியும் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

தலைக் கவசமில்லாமல் மோட்டார் சைக்கிள் செலுத்துவோரின் எண்ணிக்கையும் கல்முனை பிரதேசத்தில் அதிகரித்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். -என்றார். (ச)

## குருக்கள்மடம் ஐயனார் ஆலய சங்காபிஷேகம் நாளை



மட்டக்களப்பு,ஜன25

மட்டக்களப்பு, குருக்கள் மடம் ஐயனார் ஆலயத்தின் சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை காலை இடம் பெறவுள்ளது.

அதன் பூர்வாங்கக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. (ச)

## கிழக்கில் ஆசிரிய இடமாற்றங்களை மார்ச் வரை மேற்கொள்ள வேண்டாம்

### மாகாண அமைச்சின் செயலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.25

கிழக்கு மாகாண கல்வி வலயங்களில் புதிய ஆசிரியர் இடமாற்றங்கள் எதனையும் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிவரை மேற்கொள்ள வேண்டாம்.

இவ்வாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என். ஏ. ஏ. புஸ்பகுமார சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

அது தொடர்பான சுற்றறிக்கையை அவர் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மருத்துவ காரணங்களுக்காக ஏதாவது இடமாற்றம் மேற்கொள்ள வேண்டியிருப்பின் அதற்கான அனுமதியை என்னிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.


கிழக்கு மாகாணத்தில் புதிய ஆசிரியர் நியமனங்கள் எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளது.

கல்முனையில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு 2012 ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் தமது சொந்தப் பிரதேசங்களுக்கு கடமைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பான ஒழுங்கான கணக்கெடுப்புக்கள் நடத்தப்பட வேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் மாவட்டத்துக்குள் சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்துக்குள் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யவும், புதிய நியமனங்களை வெற்றிடமுள்ள மாவட்டங்களுக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆசிரிய நியமன விதிகளின்படி ஐந்து வருட கஷ்டப் பிரதேச சேவைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களை அவர்களது சொந்தக் கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யும் வேலைத் திட்டம் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பரிசீலனையில் உள்ளது. கிடைக்கப் பெறும் ஆசிரியர் நியமனத்தின் பின்னர் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம். ரி. ஏ. நிஸாம் தெரிவித்தார். (ச)

## படகு பழுதடைந்தமையால் வாவியில் தத்தளித்த மக்கள்



மட்டக்களப்பு,ஜன.25

படுவான்கரை - மண்முனை இடையிலான வாவியில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த படகு திடீரெனப் பழுதடைந்து செயற்பட மறுத்தது.

அதனால் வாவியின் நடுவில் தத்தளித்த நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள், இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் மண்முனைத்துறையை வந்தடைந்தனர். படகு பழுதடைந்தமையால் 15 நிமிடங்கள் பயணிக்கும் அந்த வாவியில் சுமார் நான்கு மணித்தியாலங்கள் பயணிகள் அவதியுற நேர்ந்தது.

அந்தப் படகின் இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை இந்தப் படகில் பயணிப்பதற்காக இரண்டு துறையிலும் அதிகளவு பொதுமக்கள் பல மணி நேரம் காத்துநின்றனர்.

படகு பழுதடைந்தமை குறித்து வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் எஸ்.மகிந்தன் விசாரணைகளை மேற்கொண்டார்.

குறிப்பிட்ட படகுச் சேவை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேஷம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். கோபம் நீங்கும்.



**இடபம்:** வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.



**மிதுனம்:** வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகளை ஆலோசித்து முடிவுகள் எடுப்பது நல்லது.



**கடகம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவு பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படும்.



**சிங்கம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.



**கன்னி:** பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.'

**நாளை**

தை -13 சனிக்கிழமை 26.01.2013
திதி: சதுர்த்தசி மு.ப. 09.40 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.ப 03.36 வரை
சுபநேரம்: 03.36- 05.06 வரை
ராகுகாலம்: 09.36- 11.06 வரை



**துலாம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிட்டும்.



**விருச்சிகம்:** சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். குடும்பத்தினர் சிலர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வார்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் சிலரின் குறைகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.



**தனுசு:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள்.



**மகரம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.



**கும்பம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதரவகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.



**மீனம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | 9 | | |
| | | 3 | 8 | 1 | | 2 | 7 | 6 |
| 7 | | 5 | | | | | 1 | |
| | | | | 5 | 2 | 6 | 8 | |
| | 9 | | 4 | | 8 | | 5 | |
| | 5 | 8 | 1 | 6 | | | | |
| | 1 | | | | | 5 | | 2 |
| 2 | 8 | 9 | | 4 | 7 | 3 | | |
| | | 6 | | | | | | 7 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 1 | 8 | 2 | 9 | 3 | 7 | 6 |
| 8 | 2 | 3 | 4 | 6 | 7 | 1 | 5 | 9 |
| 9 | 6 | 7 | 3 | 1 | 5 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 4 | 9 | 8 | 2 | 6 | 1 | 5 |
| 5 | 9 | 8 | 6 | 3 | 1 | 7 | 2 | 4 |
| 6 | 1 | 2 | 7 | 5 | 4 | 9 | 3 | 8 |
| 2 | 4 | 5 | 1 | 7 | 6 | 8 | 9 | 3 |
| 1 | 8 | 9 | 5 | 4 | 3 | 2 | 6 | 7 |
| 3 | 7 | 6 | 2 | 9 | 8 | 5 | 4 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 15.06.1944
இறப்பு 26.12.2012



அமரர்
**செல்லையா குணநாதன் (குணம்)**

கடந்த 26.12.2012 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.01.2013)வெள்ளிக் கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வதுடன், அவரின் இறுதிக்கிரியைகளின் போது கலந்து கொண்டோருக்கும் எமக்கு ஆறுதல் கூறி சகலவழிகளிலும் உதவியவர்களுக்கும் நன்றிகள்.

அராலி றோட்,சங்கானை. (28538) (9.6.7)
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் **கந்தையா இலகுப்பிள்ளை**

(முன்னாள் கிளை முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம் அச்சுவேலி)

தோற்றம் 14.09.1935
மறைவு 27.12.2012

அன்னார் நோயுற்றிருந்த வேளையில் சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும், தாதியர்களுக்கும், ஊழியர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (28646) (45.6.7)
குடும்பத்தினர்.

# J.B.CONSTRUCTION

- கொங்கிறீட் சிலப் வேலைகள்
- மாபிள் பதித்தல் (Tiling)
- வீடு திருத்தல் வேலைகள்
- புதிய கட்டடங்கள் கட்டுதல்

போன்ற வேலைகள் செய்து தரப்படும்

தொடர்பு: J.T. Jonson, Playground Rd,
Kopay South, Kopay.
T.P. 077 3264 773 (28547) (45.6.7)

# வீடு வாடகைக்குண்டு

தட்டாதெரு சந்திக்கு அருகில் இரத்தினம் ஒழுங்கையில் இல.7/3,7/4 எனும் முகவரியில் சகல வசதிகளுடனும் கூடிய 2 வீடுகள் வாடகைக்கு கொடுக்கப்படும். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத் தக்கது. வாகன தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்புகளுக்கு: ந.சுஜீவன்
0776454430,0777 225312.
(28512) (6.7.4)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி





தோற்றம் -1959.11.15
மறைவு - 2009.02.08
அமரர்
**கனகசபாபதிக்குருக்கள் இரகுநாதக்குருக்கள்**

தோற்றம் -1984.02.03
மறைவு - 2009.02.10
அமரர்
**இரகுநாதக்குருக்கள் கேசவசர்மன்**

திதி: பூர்வபக்க சதுர்த்தசி (25.01.2013)

நாள்கள் பல ஓடி நான்காண்டு ஆனபோதும்
நிழல் உருவாய் உங்கள் முகம்
நித்தமும் எம்மனதில் நிலையான
உங்கள் நினைவுகள் நீங்காது எப்போதும்.

இல.205/1, முரசுமோட்டை,பரந்தன். [20309][5.6.7]
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 மணிநேரம் சந்தேகநபரை தடுத்து வைப்பதால் மனித உரிமை பேணப்படுமாம்

## சொல்பவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

கொழும்பு,ஜன.25

சந்தேகநபர் 48 மணி நேரம் தடுத்து வைக்கப்படுவதால் மனித உரிமை மீறப்படமாட்டாது. அதற்குப் பதிலாக மனித உரிமை பேணப்படும் என்று முன்னாள் மனித உரிமைகள் அமைச்சரும் தற்போதைய தோட்டத்துறை அமைச்சருமான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இலங்கைத் தேயிலைச் சபையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தடுத்து வைக்கப்படும் நபரின் மனித உரிமை பாதுகாக்கப்படும் என்பதாலேயே அந்தச் சட்ட வரைவுக்கு ஆதரவளித்தேன்.

அந்தச் சட்ட வரைவு குறித்து நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெளிவான விளக்கத்தை வழங்கியிருந்தார் .

ஒரு சந்தேகநபரைத் தடுத்து வைத்து விசாரணை செய்யும்போது அவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுகிறது.

12 மணி நேரத்துக்குள் குறித்த நபரிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸார் சில உத்திகளைக் கையாளலாம். அதன் காரணமாக துன்புறுத்தல்களுக்கு ஆளாகலாம்.

எனினும் 48 மணி நேரம் தடுத்து வைக்கப்படுவதால் சந்தேகநபரிடமிருந்து எளிதாக வாக்குமூலத்தைப் பெற முடியும். துன்புறுத்தல் என்பதற்கே அங்கு இடமில்லாமல் போய்விடும்.-என்றார். (ச)

# எம்.பிக்களுக்கான நடைமுறைக்கோவை

## சபையில் ரணில் வலியுறுத்து



கொழும்பு,ஜன.25

நாடாளுமன்ற அமர்வுகளின்போது உறுப்பினர்களின் பங்களிப்புத் தொடர்பாகப் பொதுவான நடை முறைக் கோவை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் ஆலோசனை ஒன்றை முன்வைத்தார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது கேள்வி கேட்பவர்களும் பதிலளிக்க வேண்டிய அமைச்சர்களும் சபையில் இல்லாமை தொடர்பாகச் சபையில் பிரச்சினை எழுப்பப்பட்ட போதே ரணில் இந்த ஆலோசனையை முன்வைத்தார்.

நாடாளுமன்ற அமர்வுகளின்போது உறுப்பினர்களின் பங்களிப்புத் தொடர்பாக நாம் பல தடவைகள் கலந்துரையாடியுள்ளோம்.

ஆனால், எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. இந்த நிலைமை தொடரக்கூடாது. எனவே, இரு பக்க உறுப்பினர்களினதும் பங்களிப்புத் தொடர்பாகப் பொதுவான புதிய வேலைத்திட்டமொன்று உருவாக்க வேண்டும் என்று ரணில் வலியுறுத்தினார். (ச)

# பதிலளிக்க அமைச்சர்கள் சபையில் இருக்க வேண்டும்

## பிரதி சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு,ஜன.25

நாடாளுமன்றில் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் அவ்வேளை பிரசன்னமாகி பதிலளிக்க வேண்டும். தவிர்க்க முடியாத வேளைகளில் பிரதி அமைச்சர்களாவது பதிலளிக்க வேண்டும். ஆளும் கட்சிக் கொறடா அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இவ்வாறு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஒரு மணிக்கு நாடாளுமன்றம் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க அமைச்சர் சபையில் இல்லாததால் பெரும்பாலான கேள்விகளுக்குப் பதிலளிக்க கால அவகாசம் கோரப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சிக் கொறடாவான ஜோன் அமரதுங்க ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது நன்மை மற்றும் தமது பிரதேசங்களில் காணப்படும் முக்கிய விடயங்கள் தொடர்பாகவே கேள்விகளைக் கேட்கின்றனர். இப்போது பாருங்கள் முன்வரிசையில் இருந்து பதிலளிக்க வேண்டிய அமைச்சர்கள் ஒருவர்கூட சபையில் இல்லை. பிரதி அமைச்சர்களும் சபையில் இல்லை. அது கேள்வி கேட்கும் உறுப்பினர்களை அசௌகரியங்களுக்குள்ளாக்குகின்றது - என்று ஜோன் அமரதுங்க சுட்டிக்காட்டினார்.

**முன்வரிசையில் இருந்து பதிலளிக்க வேண்டிய அமைச்சர்கள் ஒருவர்கூட சபையில் இல்லை.பிரதி அமைச்சர்களும் சபையில் இல்லை.**

அந்தச் சந்தர்ப்பத்தில் கேள்விகளை எழுப்பும் உறுப்பினர்கள் கூட சபையில் இல்லை என்று ஆளும் தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

அவற்றை செவிமடுத்த பிரதி சபாநாயகர், இனிமேல் அவ்வாறான தவறுகள் இடம்பெற இடமளிக்காத வகையில் ஆளும் தரப்பு பிரதான கொறடா ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறினார். (ச)

# தமிழ் – சிங்களம் கலந்து தேசிய கீதம் பாட வேண்டும்

## வாசுதேவ ஆலோசனை



கொழும்பு,ஜன.25

தேசிய கீதம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கலந்து பாடப்பட வேண்டும்.

இந்த ஆலோசனையை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்துள்ளார்.

இரு மொழிகளிலும் கலந்து பாடுவதற்கான தமது யோசனை ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

திருகோணமலையில் நடைபெறவுள்ள 65 ஆவது சுதந்திர தினத்தின் தேசிய வைபவத்தில் இரண்டு மொழிகளிலும் தேசிய கீதத்தைப் பாடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் கோரியுள்ளார்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே அந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த யோசனைக்கு ஜனாதிபதியிடமிருந்து அனுமதி கிடைத்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையை அமைச்சு மேற்கொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



இந்தியா சென்றுள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, டில்லியில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்துப் பேசினார்.

## ஆதரவளிக்காத தேசியப் பட்டியல் உறுப்பினர்களுக்கு நடவடிக்கை

கொழும்பு,ஜன.25

ஆளும் கட்சியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்காத தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆளும் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனங்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிலர், அரசுக்கு ஆதரவளிப்பதில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவ்வாறான தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குற்றப் பிரேரணையால் நட்பு நாடுகளும் போர்க்கொடி

## ரவிகருணாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.25

குற்றப் பிரேரணை விவகாரத்தால் நட்பு நாடுகளும் இன்று அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இவ்வாறு ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டக்கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி, நீதித்துறையின் சுயாதீனத்துக்கு தலைவணங்குவதை அரசு விரும்பவில்லை.

நீதித்துறை சுயாதீனமில்லாத நாட்டுக்கு முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள். தேசிய பொருளாதாரத்துடன் அரசு விளையாடக்கூடாது .

அரசு அரசமைப்பை அப்பட்டமாக மீறி நாட்டை நாசப்படுத்தியுள்ளது.

தீவிரவாதத்தை ஒழித்து விட்டோம் என அரசு பெருமிதமடைகின்றது. தீவிரவாதம் ஒழிக்கப்பட்டதை நாம் மதிக்கின்றோம். ஆனால், அதை வைத்துக்கொண்டு தேசியப் பொருளாதாரத்துடன் விளையாடக்கூடாது.

இங்கு முதலீடுகள் குறித்துப் பேசுகின்றனர். நிதித்துறையில் சுயாதீனமில்லாத நாட்டுக்கு முதலீட்டாளர்கள் எப்படி வருவர்? வருவதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள்.

பாகிஸ்தானில் நிதித்துறையின் சுயாதீனத்துக்கு எப்படி மதிப்பு இருக்கின்றது. ஆனால் இங்கு நீதிமன்றத்தின் சுயாதீனத்துக்கு தலைவணங்குவதற்கு அரசு விரும்பவில்லை.

குற்றப் பிரேரணை குறித்து சர்வதேச நீதிமன்றம் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் அதன் நடைமுறை குறித்து எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

அரசின் நட்பு நாடுகள் கூட அதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன- என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம் பகுதிகளில் சிறிய குடும்பத்துக்கேற்ப வீடு தேவை. A-9 வீதிக்கு அருகில் விரும்பத்தக்கது.

தொடர்பு- 0773518131 (C/6017)(6.7.11)

# சின்மயா மிஷனின் நான்காவது கிளை

யாழ்ப்பாணம், ஜன. 25

ஆன்மிக ரீதியான பணிகளை மேற்கொண்டுவரும் சின்மயா மிஷன் வடமாகாணத்துக்கான நான்காவது கிளை வெகு விரைவில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தியாவைத் தலைமைக் காரியாலயமாகக் கொண்ட சின்மயா மிஷன் கடந்த 2 வருடங்களாக வட மாகாணத்தில் தனது சேவையை ஆரம்பித்துள்ள நிலை யில் மேலும் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்குடன் நான்காவது கிளை கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே கோண்டாவில், நல்லூர், அளவெட்டி ஆகிய இடங்களில் கிளைக் காரியாலயங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த மிஷன்ஊடாக மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு சேமிப்புச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்துவதுடன் இலவச பஜனை மற்றும் ஆன்மிக வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வதிவிட ஆச்சாரி பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய இந்த வகுப்புகளை நடத்தி வருகிறார்.

(ம-14)

## வீடு வாடகைக்கு

ஓட்டுமடம், மானிப்பாய் வீதியில் நான்கு அறைகள், ஹோல், சமையலறை என்பவை உட்பட்ட விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:0774837637. (6/6014)(6.7.4)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 06 - 04 - 1945

மறைவு 07 - 02 - 2012

### அமரர் நன்னியன் இரத்தினம்

திதி: சதுர்த்தசி (25.01.2013)

ஆண்டொன்று கழிந்தது அப்பா - இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி. (25522)(6.7.11) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்திபெற்று 22.01.2013 அன்று மடு கல்வி வலயத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராக (வர்த்தகம்) பதவியேற்றுள்ள

### அழகேந்திரராஜா சுபாகரன்

(BA,Dip.in Edu, SLEAS-111)

அவர்களைமேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று சிறப்புடைய வாழ்த்துகின்றோம்.

செட்டியார் வளவு, சுன்னாகம்.

வாழ்த்துவோர்: அம்மா, பெரியம்மா, சகோதர, சகோதரிகள் மற்றும் உறவுகள். (28708)(6.7.11)

ஓம் விராட்விஸ்வப் பிரமனே நமஹ

## ஓராண்டு நினைவுகள்

மண்ணில் 06 - 11 - 1925



விண்ணில் 06 - 02 - 2012

அமரர்

### தம்பித்துரை சரஸ்வதி

(நொதேன் மோட்டோ வேக்ஸ்) திதி :- பூர்வபக்ஷ சதுர்த்தசி

அம்மா!
எம் உயிர் மூச்சு உள்ளவரை உன் உறவு முடிவதில்லை
திருமுலையின் அமுதமது எம் உடல் உள்ளவரை உறைவதில்லை
உன் உருவம் எம் விழிகள் உறங்கும் வரை மறைவதில்லை
இறுதிவரை உன் வழியில் எம் பயணம் தொடர்ந்திடுவோம்
உன் திருவடியில் ஆணை அம்மா
திருமகனே எமை காத்திடம்மா.

நொதேன் மோட்டோ வேக்ஸ்
250, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

இளைய மகன்
த. கோவிந்நாதன்

(28710) (2.6)

## நடனப் பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம்,ஜன.25

கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாசார அமைச்சு கலை அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அரச ஊடகப் பயிற்சிப் பட்டறை நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை வீரசிங்க மண்டபத்தில்நடைபெறும்.

சாந்தினி சிவநேசன், அருந்ததி ஸ்ரீரங்கநாதன் குழுவினரது நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.

கலை, கலாசார அமைப்புப் பணிப்பாளர், பேராளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். நடனக் கலைஞர் களைக் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

(ம-7)

## மீண்டும் கலட்டிச் சந்தியில்!

உங்கள் நன்மதிப்பையும் அபிமானத்தையும் வென்ற

### AHIEZER SUPPLIERS




நிறுவனமானது புதிய ஆண்டில் புதிய தலைமையின் கீழ் Crown Trader என்ற புதிய பெயருடன் தனது சில்லறை வியாபாரத்தை ஆரம்பிக்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். எமது நிறுவனத்தின் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### Crown Trader

இல, 10, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(பல்கலைக்கழகத்துக்கும் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் இடையில்)

T.P.021 221 9770



உங்கள் வீட்டுக்கு தேவையான மின்சாரப் பொருள்கள், PVC பைப் வகைகள், நீர்த் தாங்கிகள், பல வர்ணங்களில் டைல்ஸ் வகைகள், கொமேட் வகைகள், பிளாஸ்டிக் மரக்கதவுகள் சகலவற்றையும் ஒரே கூரையின் கீழ் மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(விநியோகம் இலவசம்)

**Free Transport** (C/6019)(2.6.7)

## 31 ஆம் நாள் நினைவில் எங்கள் "பப்பா"



அமரர் கந்தையா
### எட்வேட் சண்முகம்

(முன்னாள் வேதாகம சங்க ஊழியர்)

மண்ணில் 23.06.1921 — விண்ணில் 25.12.2012

என்தந்தை வாழும் இடத்தில்
உறைவிடங்கள் பல உள்ளன.
யோவான் 14:22

பாசமுள்ள பப்பாவே
பண்புடன் எங்களை எல்லாம்
பலவழிகளில் கல்வி புகட்டி
பார் போற்ற வழிநடத்தினீர்களே
'பப்பா' உங்கள் இடத்தை
பாரினில் யாரும் நிரப்பமுடியாது
நாங்கள் 31 ஆனபோதும்
நாம் என்றும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் என உங்கள்
நினைவுடன்தான்.

இல.119, ஏழாலை மத்தி, ஏழாலை.

குடும்பத்தினர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(28711)(7.6.4)

## காணி தேவை

கோண்டாவில், கோப்பாய், உரும்பிராய் சந்திகளிற்கு அண்மையாகவும் பிரதான வீதிக்கருகேயும் சுமார் 2 பரப்பிற்கு குறைவான காணி தேவை.

தொடர்புகளுக்கு:0779000352 (28703)(6.7.4)

## CAR FOR SALE

வைத்தியரின் பாவனையில் உள்ள
ALTO K10 2012 MODEL CAR
(5000 Km மட்டும் ஓடியது)
லீசிங் (leasing) வசதியுடன்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0756479221 (28707)(6.711)

## தவறிவிட்டது


நீர்வேலியைச் சேர்ந்த சின்னையா பாலசிங்கம் என்பவருடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன 19.01.2013 சனிக்கிழமை துரையப்பா அரங்கிற்குள் தவறிவிட்டது.

தொடர்பு:0774223121. (28705)(6.7.4)

## 37 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

உதிப்பு 24.12.1938

உதிர்வு 20.12.2012



அமரர்
### முருகுப்பிள்ளை மயில்வாகனம்

கடந்த 20.12.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (25.01.2013) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் நடைபெறும் மதிய போசனத்தில் தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவி செய்தோர், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர், மலர் வளையம் சாத்தியோர், தந்தி, தொலைபேசி, கணினி மூலம் அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் இன்று வரை எமக்குப் பல்வேறு வகைகளில் ஆறுதலும் ஒத்தாசை வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புறாப் பொறுக்கி ஆலடி,
கரணவாய் மேற்கு, கரவெட்டி. (28535)(6.7.11)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு என்றால் என்ன?

கடந்த 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு கீரிமலையில் எனது நண்பன் தனது தகப்பனாரின் கிரியைகளை முடித்து விட்டு குளிப்பதற்காக கேணிக்குள் இறங்கிய போது அங்கு நடந்த சம்பவத்தை எனக்குச் சொன்னான்.

அந்தக் கேணியில் குளித்துக் கொண்டு நின்ற ஓர் இளைஞன் அங்கு குளித்துக் கொண்டிருந்த தனது நண்பர்களைக் கேட்டான். "புனர்வாழ்வு என்றால் என்ன? எங்க நீ சொல்லு பாப்பம், எங்க நீ சொல்லு பாப்பம் என்று ஒவ்வொருவருடைய முகத்தைப் பார்த்துக் கேட்டான்" கேணிக்குள் குளித்துக் கொண்டிருந்த எல்லோரின் முகமும் ஒரு தடவை கேள்வி கேட்டவனைப் பார்த்தது.

கொந்தளித்துக் கொண்ட கடலில் அலையும் கேணிக்குள் வந்து முத்தமிட்டுச் செல்லும் உப்புக்காற்றும் ஒரு கணம் மௌனித்து இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது போல் அமைதியானது.

தனது நண்பர்கள் மட்டுமல்ல, அங்கே குளித்துக் கொண்டிருந்த எல்லோரும் தன்னைப் பார்ப்பதால் ஒரு தடவை தண்ணீரின் உள்ளே சென்று சிறிது நேரம் சுழியோடி விட்டு மேலே வந்தான். வந்த வேகத்தில் ஓர் உற்சாகத்துடன் அந்த இளைஞன் காணப்பட்டான். கேணியில் குளித்துக் கொண்டிருந்த எல்லோரையும் அவர்கள் தன்னைப் பார்க்கிறார்களா என ஒரு முறை கடைக் கண்ணால் பார்த்து விட்டு தன்னைப் பார்க்காததால் அவன் மீண்டும் அதே கேள்வியை முன்னரை விட எல்லோருக்கும் கேட்கும் படி சத்தம் போட்டுக் கேட்டான். மீண்டும் எல்லோரும் அவனைப் பார்த்தனர். அவனோ "புனர்வாழ்வு என்றால் என்ன? என்று தானே கேட்டேன். ஏன் எல்லோரும் என்னை ஒரு மாதிரிப் பார்க்கிறீர்கள்?" என்றான். அவனது நண்பனில் ஒருவன் "அடி, உதை" என்றான். அவனோ "உனக்கு நான் அடி போட வேண்டும்." என்றான். மற்றவன் "சிறை வாழ்வு" என்றான். அவனோ "உன்னைக் கொண்டு போய் சிறைக்குள்ள போட வேண்டும்." என்றான். ஒருவன் "வன்முறையாளர்களை அதிலிருந்து விடுவிப்பது" என்றான். அவனோ 'உன்னிடம் புனர்வாழ்வு என்றால் என்ன? என்று கேட்டால் உனக்கு வன்முறை என்றால் என்ன என்று கூட தெரியாமல் இருப்பது தெரிகிறது' என்றான்.

கேணிக்குள் நல்ல பட்டிமன்றம் நடக்கிறது. புத்திஜீவிகள் கூட தமது பட்டிமன்றத்தில் பழைய புராணக் கதைகளை தலைப்பாக வைத்து வாதாடும் திறமை உள்ளவர்கள். இன்றைய பிரச்சினைகள் பற்றி துளியளவு கூட எட்டிப் பார்க்க மாட்டார்கள். ஏனெனில் பட்டிமன்றக் குழுவுக்கும் புனர்வாழ்வு அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுவிடும். ஆனால் கிரியைகள் செய்ய வந்த இந்த இளைஞர்கள் பேசுவதைப் பார்க்கிற போது உணர்வு செத்துவிடவில்லை என்று தோன்றுகிறது.

சிறிது நேரம் அமைதியான எனது நண்பன் மீண்டும் கேணிக்கதையைச் சொல்ல ஆரம்பித்தான். புனர்வாழ்வு என்பதற்கு விளக்கம் சொல்ல தனது நண்பர்களுக்கு தெரியாததால் அவனோ அவர்களிடம் புனர் என்றால் என்ன என்று பிரித்துக் கேட்டான். "இப்ப இங்க போரால் சேதமடைந்த புனர்நிர்மாண கட்டட வேலைகளும் நடக்குது. அதோட போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வும் நடக்குது. அதனால் புனர் என்றால் என்ன என்று விளக்கம் கொடுக்க முடியாமல் கஷ்டமாக இருக்கிறது." என்றான் ஒருவன்.

அவனோ "புனர்வாழ்வுக்கு விளக்கம் சொல்ல முடியாமல் இருக்கும் போது எப்படி அந்த வாழ்வை அனுபவிப்பவர்கள் பற்றி சிந்திக்கப் போகிறீர்கள்." என்றான். அந்தக் கேணியில் குளித்துக்கொண்டிருப்பவர்கள் பலருக்கு புனர்வாழ்வு என்றால் என்ன என்பது தெரியும். ஆனால் இங்கு புனர்வாழ்வு என்றதும் பயத்தில் விளக்கம் சொல்ல மறுத்துவிடுகின்றனர்" என்றான் மற்றவன்.

"புனர்வாழ்வு என்ற சொல்லுக்கு இன்று இங்க பெரிய மரியாதை. எந்த வேளையும் எந்த நேரத்திலும் கைது செய்யப்படுபவர்கள் கண்டிப்பாக புனர்வாழ்வு முகாமுக்கு சென்றே வெளியே வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்ப இங்க புனர்வாழ்வு என்றால் சிறை என்று அர்த்தம்" என்றான் ஒருவன். கேணியில் குளித்துக் கொண்டிருந்த அரைவாசிப் பேர் குளிக்கிறதை நிற்பாட்டிவிட்டு அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். அதனைப் பார்த்த அவனோ "என்னத்தைப் பற்றிக் கதைத்தனாங்கள், ஏன் இப்படி அரக்கப் பறக்க கேணியை விட்டு வெளியேறுகிறார்கள்" என்றான்.

"புனர்வாழ்வுக்குத் தங்களையும் கொண்டு சென்றாலும் என்று பறக்கிறார்கள்" என்றான் மற்றவன். கேணிக்குள் அவனும் நண்பர்களும் தான். நான் குளித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து விட்டு " ஏன் அண்ணை நீங்கள் கிளம்பவில்லையா?" என்று ஒருவன் கேட்டான். அதற்கு நானோ "கிரியை செய்ய கீரிமலைக்கு வந்தது, வடிவாய்க் குளித்து விட்டுப் போவோம்." என்றேன். மற்றவன் " நாங்கள் கதைப்பதைப் பற்றி நீங்கள் பயப்படவில்லையா? என்று கேட்டான். நானோ "ஊரே இப்பொழுது உதைப் பற்றித்தானே கதைக்குது , பிறகு எதற்குப் பயம். கதைக்கவும் பயம் என்றால் இந்தக் கேணிக்குள் குளிக்கவும் பயம். கிரியை

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

செய்ய கீரிமலைக்கு வருவதற்கும் பயப்பட வேண்டும்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியை விட இந்தக் காலம் படு பயங்கரமாக இருக்கிறது. எந்த வேளையும் எவரும் கைதாகும் சூழ்நிலை இருப்பதால் தமிழ் மக்களின் முகங்கள் அச்சத்தில் உறைந்து காணப்படுகின்றன.

சிங்கள மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள். தமிழ்மக்களே அடக்கு முறைக்குள் வாழ்கிறார்கள். பல பிரச்சினைகளுக்கு இன்றும் விடிவில்லாமல் முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க எவரும் முன்வராத காரணத்தால் பல சம்பவங்கள் இந்த மண்ணில் நாளாந்தம் அரங்கேறுகிறது. இராணுவத்தால் கைதாகி சிறையில் வாடியவர்கள் பல வருடங்கள் கழித்து நிரபராதி என விடுதலை செய்யப்படுவார்கள். இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது பயப்படாமல் இருக்க முடியாது" என்று நான் அவர்களிடம் சொன்னவுடன் அந்த இளைஞர்கள் உடனடியாக அந்தக் கேணியை விட்டு வெளியேறினார்கள் என்று தனது கேணிக் கதையை சொல்லி முடித்தான் எனது நண்பன்.

## இலவச இணையக் கற்கைநெறி நிறுவகம்
## SERVE - eLearning Institute

★ தகைமைகள்: ப.எண்- 1098

1) க.பொ.த உயர்தரத்துக்கு இரு தடவைக்குள் தோற்றிய மாணவர்கள்
 a) கற்கை நெறி ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம்,
2) இரண்டாம் தடவை ஆங்கில மொழி மூலம் தோற்றிய மாணவர்கள்
 b) கற்கை நெறி கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேலை வாய்ப்பைத் தேடுபவர்கள்

★சாதாரண தரத்தில் ஒரு தடவை தோற்றிய மாணவர்கள்
 c) கற்கைநெறி ஆங்கிலம், விஞ்ஞான்ம், கணிதம்

பதிவுகளுக்கு முந்துங்கள் SERVE - eLearning இற்கு நேரில் வரவும்

66, கட்டைப்பாலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. தொடர்பு:0212256206 | முடிவுதிகதி: 28.01.2013

(28627)(6.7.2)


## Personal Class

தரம்6-8 வரையான மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் பாடங்கள் பல்கலைக்கழக மாணவரால் வீடுகளுக்கு நேரில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:0772608578.
(28702) (6.7.4)

## வீடு வாடகைக்குண்டு

517/7, ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் 5 அறைகள், 3 குளியல் அறைகள் வாகனத் தரிப்பிடம் உட்பட வீடு வாடகைக்கு உண்டு. அரச தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொ.பே.077 8035236.
(28701) (6.7.4)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



ஆரோக்கியநாதர் திருமாவளவன் (திரு)

மலர்வில் மகிழ்ந்தது: 26 - 10 - 1975

மறைவில் வெந்தது: 25 - 01 - 2009

கருவில் தாங்கியவள்
தோளில் சுமந்தவர்கள்
உடன் பிறந்தவர்கள் - உன்
நினைவின் பெருமூச்சில்.
ஓலமிட்டுத் தேடுகின்றோம் - எங்குற்றாய்
இறைவன் தாளில் இன்பம்
துய்க்க ஆசிக்கின்றோம்.

64, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

சி.ஆரோக்கியநாதர் (தந்தை)
குடும்பத்தினர்.
(28629)(3.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:- 12.02.1925

மறைவு:- 25.12.2012



கடந்த 25.12.2012 அன்று இறைவனடி சேர்ந்த

அமரர் **சின்னத்தம்பி பாறுபதி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.01.2013) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நிகழவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம். இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கரவெட்டி.


குடும்பத்தினர்.
(28504)(6.7.4)

## இதய அஞ்சலி

ஹார்மோனியச் சக்கரவர்த்தி
**பிலிப் ஜோன்கபாஸ்**
அவர்களின் மறைவையிட்டு மிகுந்த துயரில் உள்ளோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையினர்.
(28704)(6.7.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விரைவில் அறிமுகமாகிறது 8 அங்குலமே உடைய Samsung Galaxy Note

அப்பிள் நிறுவனத்துடனான போட்டிக்கு மத்தியிலும் இலத்திரனியல் உற்பத்தியில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் சம்சங் நிறுவனம் 8 அங்குலமே உடைய Samsung Galaxy Note எனும் புத்தம் புதிய சாதனம் ஒன்றை அறிமுகப்படுத்தத் தயாராகின்றது.


ஏற்கனவே 5 அங்குலம், 10 அங்குல அளவுகளில் Galaxy Note சாதனங்களை அறிமுகப்படுத்தியிருந்த சம்சங் நிறுவனம் தற்போது 8 அங்குலள அளவுடைய Galaxy Note - ஐ உருவாக்கியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில்விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் இச்சாதனமானது, 1280 x 800 Pixel Resolution மற்றும் SLCD தொழில்நுட்பத்தில் அமைந்த தொடுதிரையக் கொண்டுள்ளதோடு பிரதான நினைவகமாக 2GB RAM, மற்றும் 16GB, 32GB அளவுகளை உடைய சேமிப்புச் சாதனங்களையும் உள்ளடக்கியுள்ளது. தவிர 5 மெகாபிக்சல் கமெரா, 4300mAh மின்கலம் ஆகியனவும் இணைக்கப்பட்டுள்ள இச் சாதனத்தின் எடையானது 330 கிராமாகக் காணப்படுகின்றது.

# Android சாதனங்களுக்காக AirDroid v2 உலாவியின் பீட்டா பதிப்பு வெளியானது

மொபைல் சாதனங்களுக்கான பல்வேறு இயங்குதளங்களுக்கு மத்தியில் முன்னணியில் திகழும் கூகுளின் Android இயங்குதளத்தில் பயன்படுத்துவதற்கான AirDroid v2 உலாவியின் பீட்டா பதிப்பானது தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


இந்தப் புதிய பதிப்பில் முன்னை பதிப்பின் மூலம் பயனர்களால் எதிர்கொள்ளப்பட்ட சில பிரச்சினைக்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதோடு சில புதிய அம்சங்களும் உட்புகுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பார்ப்பதற்கு நுளம்பைப் போலவே தோன்றும் உளவாளி ரோபோக்கள்

பார்ப்பதற்கு அப்படியே நுளம்பு போலவே தெரிகிறதா? ஆனால் அதுதான் இல்லை. இது முழுமையாக ஓர் உளவாளியைப் போலவே கண்காணிக்கும் திறனுள்ள ஆளில்லாத மிகச்சிறிய விமானமாகும். இதனை இன்னும் தயாரித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதற்குரிய நிதியை அமெரிக்க அரசே வழங்குகிறது. இதனை இருந்த இடத்திலிருந்து ரிமோட் மூலமாகவே விரும்பியவாறு இயக்கலாம். அத்துடன் நவீனரக சிறிய கமராவையும் மைக்ரோபோனையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்த நுளம்பு போன்று பறக்கும் ரோபோவை ரிமோட் மூலமாக மனிதர்கள் மீது நுளம்பைப் போலவே கச்சிதமாகப் பறந்து சென்று உட்கார்ந்து கொள்ளச் செய்யலாம். பின்னர் தனது மிக நுண்ணிய ஊசியால் தேவையான மனிதரின் தோலில் குத்தி அழுத்தசக்கியின் பிரயோகத்தால் DNA மாதிரியை (குருதியை) எடுத்து விடலாம்.



முக்கியமாக குறிப்பிட்ட ஒரு நபரைப் பின்தொடர்ந்து செல்ல (Tracking) உதவிவருகின்ற RFID Nanotechnology ஐ தோலின் மீது விட்டுச்செல்லவும் இந்த ரோபோவால் முடியும்.

சாதாரணமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள ஒரு ஜன்னலின் ஊடாகவே ஒருவரின் வீட்டுக்குள் பறந்து சென்று நுழையக்கூடிய ஆற்றல் இதற்குள்ளது. அத்துடன் இது பறந்து சென்று குறிப்பிட்ட மனிதரின் ஆடையில் ஒட்டிக் கொள்வதன் மூலம் இரகசியமாக அவருடன் சேர்ந்து அவரது வீட்டுக்கே சென்று துப்பறியக் கூடிய திறமையுடையது. மேலும் அதிதிறமை வாய்ந்த இவ்வகை ரோபோக்கள் இராணுவத் துறையிலும், உளவுத் துறையிலும் தான் பெரிதும் பயன்படுகின்றன.

# ISO சாதனங்களுக்கான google+ அப்ளிக்கேஷன்

முன்னணிசமூகவலைத் தளங்களுள் ஒன்றாகத் திகழும் கூகுள் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட Google+ சேவையை iPhone மற்றும் iPad போன்ற iOS சாதனங்களில் பெற்றுக்கொள்வதற்காகப் புதிய அப்பிளிக்கேஷன் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

48 நாடுகளைப் புதிதாக உள்ளடக்கியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இது 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்படவிருந்த போதிலும் தற்போதே வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மற்றொரு சமூக இணையத்தளமான பேஸ்புக் Graph Search எனும்புதியவசதியை அறிமுகப்படுத்திய சில நாள்களிலேயே Google+ இந்த அப்பிளிக்கேஷனை வெளியிட்டுள்ளது.

bing™

# தேடுபொறியை மேம்படுத்தியது மைக்ரோசொப்ட்

மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட Bing தேடுபொறியில் சமூகதளங்களைத் தேடுவதற்கான வசதியை மேம்படுத்தியுள்ளதாக அந்தநிறுவனம் அறிவித்துள்ளது. இதன்மூலம் பயனர்கள் Status updates, Shared links, Comments மற்றும் புகைப்படங்கள் போன்ற தமது நண்பர்களின் பேஸ்புக் தவகல்களை முன்னையதை விடவும் 5 மடங்கு வேகத்துடன் தேடிப்பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனம். குறித்த மேம்படுத்தலானது பயனர்களுக்கு இலகுவான இடைமுகத்தைக் கொடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# sony நிறுவனம் அறிமுகப்படுத்தும் புதிய வகை சாதனை

அதிநவீன இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்வதில் முதல்வனாக விளங்கும் Sony நிறுவனமானது Xperia Tablet Z எனும் தனது புதிய சாதனத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

1920 x 1080 Pixel Resolution மற்றும் 10.1 அங்குல HD தொடு திரையைக் கொண்ட இந்த சாதனங்கள் Android 4.1.2 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன.

Snapdragon S4 தொழில்நுட்பத்தினாலான Processor, 2GB RAM, 8 மெகாபிக்சல் உடைய பிரதான கமரா மற்றும் 2 மெகாபிக்சல் உடைய துணைக்கமரா ஆகியவற்றையும் 32GB வரையான சேமிப்பு வசதியையும் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய திருப்பம்

- ★ நவீன முறையிலான கற்பித்தல் நடவடிக்கை (projecter மூலமான விளக்கம்)
- ★ குழுக்களாக சேர்ந்து கற்றல்.
- ★ 10 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர்.(தொடர் பயிற்சி வினாக்கள்)
- ★ நவீன வசதிகொண்ட இருக்கைகள்.
- ★ தனித்தனி பாடங்களுக்கான ஆசிரியர்கள்.

01. பகுதி i
திரு. மு.ஜெயமதன்
(மதன் ஆசிரியர்)

02. பகுதி ii
திரு. S. நவகாந்தன்

வழிகாட்டலும்,ஆலோசனையும்
திருமதி அ.வேதநாயகம்.
(ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்)

நிர்வாகம்
சி.குகனேசன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

குறைந்த கட்டணத்தில் நிறைந்த அறிவைப் பெற உடனே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

இடம்:-3RD FLOOR, THANARAJ BUILDING, STANLEY ROAD, JAFFNA(மக்கள் வங்கி 3ஆம் மாடி)
காலம்:- 27.01.2013
நேரம்:- 9மணி தொடக்கம் 12 மணிவரை (பதிவுகளை மேற்கொள்ளவும்)

குறிப்பு:- கை நூல் தழுவியே கற்பித்தல் இடம் பெறும்

"சிறப்புற கற்று மேன்நிலை பெறுக"


## மரண அறிவித்தல்



### ஜெயக்குமார் தேவராணி (சந்திரா)

(நயினாதீவு-பிரான்ஸ்)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் தேவராணி நேற்று (24.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சுந்தரலிங்கம்- கனகலெட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசலிங்கம்- அன்னம்மா தம்பதியரின் மருமகளும், ஜெயக்குமாரின் அன்பு மனைவியும், வினுசன், அனுசன், தனுசன் ஆகியோரின் அன்புத்தாயும் தேவதாசன் (கனடா), பத்மகுமார், சத்தியபாமா சாவித்திரி (ஜேர்மனி), அருட்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வள்ளிநாயகி (கனடா), அசோகமலர், ஸ்ரீமோகன், சிங்கராசா (ஜேர்மனி), அமிர்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பிரான்ஸில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சு-அமிர்தராசா (மைத்துனர்)
7ஆம் வட்டாரம்
நயினாதீவு
021 3008188

(28668)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14 * 03 * 1937

மறைவு
06 * 02 * 2012

அமரர்
### மாணிக்கம் நரேந்திரன்
(மில் கனகு)

ஆண்டு ஒன்று ஆனதுவோ அப்பா—நாம்
எழவில்லை இன்றும் எம் துயரிலிருந்து—நீர்
எழுந்து வருவீரென ஏங்கியிருந்தோம்—அப்பா
எப்போதுதான் எழுவீரோ எம் அப்பாவே.'

இன்று (25.01.2013) வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி,
அல்வாய் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## சாரதி பயிற்றுவிப்பாளருக்கான விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 25

சாரதிப் பயிற்றுவிப்பாளர்களுக்கான கருத்தரங்கு, நாளை மறுதினம் ஞயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். நகர் சுபாஸ் விடுதியில் நடை பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உயரதிகாரிகள் பங்குபற்றி கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

எனவே வடமாகணத்திலுள்ள சகல சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளில் பணியாற்றும் சகல பயிற்றுவிப்பாளர் களையும் இக் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு யாழ்.மோட்டார் வாகன பரிசோதகர் விஷ்வ.டி .சில்வா அறிவித்துள்ளார். (16)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayam.com
0215671111

### தேவை
ஊர்சேவல், ஊர்பேடு, விறாத்துக் குஞ்சு என்பன உடன் தேவை.
தொடர்பு: தாசன் பாம் 158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0775071817

## வியப்பூட்டும் விலைக்குறைப்பு
தினசரி சென்னை சேவை



சென்னை 8,100/= (செல்ல மட்டும்)
சென்னை 16,500/= upwards (சென்று திரும்ப)
மும்பாய் 10,000/= upwards (செல்ல மட்டும்)
மும்பாய் 22,000/= upwards (சென்று திரும்ப)
(all inclusive) Upwards

AIR INDIA express
Groups fares offer only over 30 passengers.
www.airindiaexpress.in

Contact for further information:
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818
or Contact your nearest Travel Agent

## Tilko Jaffna City Hotal (Pvt) Ltd
Cleaner (கிளீனர்) சுத்திகரிப்பாளர் தேவை.
ஹோட்டல், உணவகம் மற்றும் பொது இடங்களை சுத்திகரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு: 0774477302


## கண்ணீர் காணிக்கை

மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும்
**திருமதி மேரி கலைச்செல்வி சுதாஸ்கரன்**
அவர்களின் அன்புத் தந்தை
*உயர்திரு பிலிப் ஜோன்கபாஸ்* அவர்கள்
23.01.2013 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட செயலக நலன்புரி கழகம்

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தரும் எமது சங்க அங்கத்தவரும் ஆகிய
திரு.R.பாஸ்கரன்
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி.இராசப்பு ரிலோபிபா**

அவர்கள் (24.01.2013) காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்புத்திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்,
நலன்புரிசங்கம்.

(28673)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
10 * 02 * 1943

மறைவு
26 * 12 * 2012

### அமரர் சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம்

மண்ணில் வாழ்ந்த நாள்களெல்லாம்
மனங்கள் மகிழ உறவு தந்தீர்
விண்ணில் வாழத்தான் நினைத்தோ-எமை
விட்டுச் சென்றீர் கண்ணீர்க் கடலில்
குடும்பம் காக்கும் குலவிளக்காய்
குறைவு நீக்கி உறவு தந்தீர்
உம்மை நினைத்தே கண்ணீர் வடிப்போம்-உமது
உருவம் மீண்டும் காண ஏங்கி...

இல.07 வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

சி/6028

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### இராயப்பு புலோமினா

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு புலோமினா நேற்று (24.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்புவின் அன்பு மனைவியும், இரவிச்சந்திரன் (திருகோணமலை), பாஸ்கரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்), ஸ்ரெலா, பிரதீபன் (உரிமையாளர், அபிஷன் வெல்டிங்சொப்- சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஜேம்ஸ், சந்தியாப்பிள்ளை, ஜோர்ச், செசிலியா, ஜெனோவா காலஞ்சென்றவர்களான தாவீது, றீற்ரா ஆகியோரின் சகோதரியும் யூடிற்லொறிடீயா (திருகோணமலை) வக்ஷலா, யூரியா, அன்ரன்நிமல்ராஜ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.01.2013) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் மட்டுவில் புனித லூர்த்து அன்னை ஆலயத்தில் நடைபெற்று உடலம் லூர்த்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.பிலிப்ஸ்வீதி
மட்டுவில் வடக்கு
சந்திரபுரம், சாவகச்சேரி.

தகவல்:
பிள்ளைகள்

---

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## பணிநிலை வெற்றிடம்
## விற்பனை உதவியாளர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1.சம்பள அளவுத்திட்டம்-(கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவின்66/2006 சுற்று நிருபத்திற்கமைய 308/17 ஆவது சம்பளக்குறியீடு)

8950 -10300
65x10-70x10

இதரபடிகள்,விசேட படிகளும் வழங்கப்படும்.

2. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வய தெல்லை பொருந்தாது)

3. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ.கூட்டுறவுப்பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்.

அல்லது

ஆ.08 ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று(03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

4.விண்ணப்பிக்கும்முறை: மேற்படி பதவிக்கான விண்ணப் பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விற்பனை, உதவியாளர் 308/17 பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப் பிட்டு "பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,127,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு 2013.02.07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

(சி/8023)(6.7.4)

---

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினரும் மன்ற சேமிப்புத்திட்ட உறுப்பினருமான இ.பிரதீபன் (உரிமையாளர், அபிஷன் மின் வாயு ஒட்டு நிலையம்,சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி **இராயப்பு பிலோமினா**

அவர்கள் நேற்று (24.01.2013) வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரின் மறைவுக்கு மன்றத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி
கைத்தொழில் வணிகர் மன்றம். (சி/2829)(6.7.4)

---

## மணிவிழா அழைப்பு



யா/புங்குடுதீவு
ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில்
அதிபராகக் கடமையாற்றி
09.12.2012இல் ஓய்வுபெற்ற
S.K.சண்முகலிங்கம் (J.P.)
அவர்களுடைய மணி விழா
நிகழ்வானது 25.01.2013 இன்று
(வெள்ளிக்கிழமை)
பாடசாலை பிரதான மண்டபத்தில்
மு.ப 9.00 மணிக்கு நடைபெற
வுள்ளதால் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை சமூகத்தினர்
யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம.வி. (28056)(6.7.11)

---

## விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜன.25

மோட்டார் சைக்கிள் மற்றும் ''படி'' வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாய மடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6 மணியளவில் சாவகச்சேரிவடக்கு மருதடி வீதிச் சந்தியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த தங்கவேலு அங்குசன் (வயது-23) மற்றும் ஆவரங்காலைச் சேர்ந்த உதயராஜா சரவணபவன் (வயது-15) ஆகிய இருவருமே காலில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக ஆதார வைத் திய சாலையில் அனுமதிக் கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


## iphone unlock செய்து தரப்படும்

iphone 4S /iphone 5 unlock செய்து தரப்படும்.
தொடர்பு: 0777794324
யாழ்ப்பாணம்

## வான் விற்பனைக்கு

253 - XXXX தொடரிலக்கமுடைய High roof Van (நீளmodel ) Dual AC, T.V வசதியுடைய Toyota Van விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0777635926 (28530)(6.7.41)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இலக்கம் 139, நான்காம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுடன் மேல் மாடியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்கு அல்லது குடியிருப்புக்கு ஏற்றது. நாளையும் நாளை மறுதினமும் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:
0777038738

## Science

Personal & Group Classes for Grade: 9,10,11
தொடர்பு: 075 6749 516
(பிற்பகல்: 4 மணிக்குப்பின்னர்)

## iPAD விற்பனைக்கு

New iPad (iPad3)
64 GB Memory உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0779025987


advt@uthayan.com
0215671111

## 33ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில்
10 * 03 * 1964



இறைவன் அடியில்
24 * 12 * 2012

### அமரர் வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு)

(அல்லைப்பிட்டி - பிரான்ஸ்)

காற்றோடு வந்த செய்தி கனவாகி போகாதோ?
தேற்றிட இயலாது தவித்து நாம் வாடுகிறோம்
அன்பான உறவே! சொந்தம் நிறைந்த பந்தமே!
பண்பின் பிறப்பிடமே! பாசத்தின் உறைவிடமே!
அறிவின் சிகரமே! அழகின் வடிவமே!
உன் சிங்க நடையும், சிரித்த முகமும்
அக்கினி வாய்பட்டு ஆகுதி ஆனதுவோ?

அன்பு மனையாளும், ஆருயிர் செல்வங்களும், பெற்ற தாயாரும், சகோதரரும், சித்தப்பா சித்திமாரும், மாமா மாமிமாரும், மைத்துனரும், உற்ற உறவுகளும் உளம் வெந்து வாடுகின்றோம்.
ஒரு முறை தானும் ஓடி நீர் வாரீரோ!

130, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர்.

நின் பிரிவால் வாடும்
செ.நடேசபிள்ளை, பொ.வி.திருநாவுக்கரசு
குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி

மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் **திருமதி.சு.மேரிகலைச்செல்வி** அவர்களின் அன்புத் தந்தை

### பிலிப் ஜோண் கவாஸ்

அவர்கள் 23.01.2013 ஆம் திகதி இறைபதம் அடைந்ததனையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள், கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள்
நலன்புரி சங்கம்- யாழ்மாவட்டம்.

---

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை அன்ரனி யோகராசா

(ஊழியர், ஸ்ரீ மகா விஷ்ணு, யாழ்ப்பாணம்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் ஓடக்கரை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அன்ரனி யோகராசா நேற்று முன்தினம் (23.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வகுமாரின் (பிரதேச செயலகம் - துணுக்காய்) அன்புத் தந் தையும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் செல்வரத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தேவராஜா, பிச்சையம்மா - ராமச்சந்திரன் (கனடா), சங்கரலிங்கம் (பிரான்ஸ்), இராஜலட்சுமி - அமிர்தலிங்கம் (லண்டன்), தையலா - அமிர்தேஸ் வரராசா (இந்தியா), நடராஜா (லண் டன்), காலஞ்சென்ற முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதர ரும், செல்வராசா, இராஜேஸ்வரி -சௌந்தரராசா, யோகேஸ்வரி - அரியரத்தினம், தங்கராசா, யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2013) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடக்கரை,
பருத்தித்துறை, (சி/6020) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறாம்பியடி ஒழுங்கையை புனரமைக்குக

குருநகர், ஜன.25

யாழ். ஸ்ரான்லி வீதிக்கும் யாழ்-பருத்தித்துறை வீதிக்கும் இடையே அமைந்துள்ள சிறாம்பியடி ஒழுங்கை பலத்த சேதங்களுக்கு உள்ளாகிக் காணப்படுகின்றது. அதனால் அந்த வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த போக்குவரத்து நெருக்கடிகளை அனுபவித்து வருகின்றனர். அந்த வீதியில் கூட்டுறவு, மொத்த விற்பனை நிலையத்தின் கிளை, தனியார் உணவகம், மோட்டார் வாகன சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை அமைந்துள்ளன.

வீதியூடாக மக்கள் அடிக்கடி பயணிப்பதனால் அந்த வீதி அவசியம் புனரமைப்பு செய்யவேண்டுமென அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (3-51)

# தரநிர்ணயத்தை மீறி பொலித்தீன் உற்பத்தி செய்தால் நடவடிக்கை

கொழும்பு, ஜன.25

பொலித்தீன் உற்பத்தியின்போது 20 மைக்ரோன்களை விடக் குறைந்த பொலித்தீன் உற்பத்திக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைச் சட்டத்தை கவனத்தில் கொள்ளாது செயற்பட்டுவரும் பொலித்தீன் உற்பத்தி நிறுவனங்களைக் கண்டறிந்து, அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது.

அது சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள புதிய சட்டங்கள் 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2007 ஆம் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் விமல் ரூபசிங்க தெரிவிக்கிறார்.

இருந்த போதிலும் அச்சட்டங்களை மீறி பொலித்தீன் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக ஏராளமான முறைப்பாடுகள் அதிகார சபைக்குக் கிடைத்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விதிக்கப்பட்டுள்ள தரநிர்ணயங்களை மீறி சுற்றாடலை மாசுபடுத்தும் விதமாக தயாரிக்கப்படும் பொலித்தீன் உற்பத்திகள் தொடர்பான பரிசீலனைகளை மேற்கொள்ளுமாறு மாகாணப் பணிப்பாளர்களுக்கு, மாவட்டப் பணிப்பாளர்களுக்கு மற்றும் பிரதேச சுற்றாடல் அதிகாரிகளுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தகைய நபர்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ம-22)

## இறைவன் வயிற்றை நிரப்புவானா?

நாத்திகன் ஒருவன் உணவைத் தயாரித்துக் கொண்டு பாலைவனத்துக்குப் போனான். அவன் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, 'என் முன் உள்ள உணவை நானே என் கையால் எடுத்துச்சாப்பிடாவிட்டால் கடவுள் எப்படி என் வயிற்றை நிரப்புகிறார் என்று பார்ப்போம்'!

என்று நினைத்து மௌனமாக உணவின் முன் அமர்ந்திருந்தான்.

தற்செயலாக அந்த வழியில் வழி தவறிய இரண்டு பேர் பசியுடன் வந்தார்கள். நாத்திகன் முன் இருந்த உணவைப் பார்த்ததும் அவர்களில் ஒருவன் மகிழ்ச்சியுடன் அதை எடுத்து உண்ணப்போனான்.

ஞானக்கதிர்

ஆனால் அவனுக்கே ஒரு சந்தேகம் எழுந்தது. 'இவன் ஏன் இந்த உணவை வைத்துக்கொண்டு சாப்பிடாமல் இருக்கிறான். ஒருவேளை இதில் விஷம் கலந்திருப்பானோ' என்று நினைத்து நாத்திகனிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். நாத்திகன் பதில் சொல்லவில்லை. அதனால் வழிப்போக்கன் இருவருக்கும் சந்தேகம் வலுத்தது. கோபத்துடன் இருவரும் அவனைப் (நாத்திகன்) பிடித்துக்கொண்டு வலுக்கட்டாயமாக அவனது வாயில் உணவைத் திணித்து அவனை விழுங்கச் செய்தார்கள். நாத்திகன் இறைவன் செயலை நினைத்து அன்றுமுதல் ஆத்திகன் ஆனான்.

நன்றி 'ஞானச்சுடர்'

60 அடி உயரத்தில்.......



மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட மிக உயரமான ஆஞ்சநேயர் சிலை

## நூல் போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி, ஜன.25

தென்மராட்சி பிர தேசத்தில் கடந்த வருடம் வெளியிடப்பட்ட நூல்கள் தொடர்பான போட்டிகளுக்கு எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடா வருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தென்மராட்சி பிரதேச எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர்கல்வி, ஆய்வும், விமர்சனமும், சமயம், வரலாறு, பல்துறை, கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம், மொழி பெயர்ப்பு ஆகிய துறைகளில் கடந்த 2012 ஜனவரி முதலாம்திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அச்சில் வெளிவந்தவையாகவும் முதல் பதிப்பாகவும் உள்ள தமிழ் மொழி நூல்கள் போட்டியில் சேர்க்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலக கலாசார அலுவலரிடம் பெற்று, பூர்த்தி செய்து நூல்களை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனையிலோ சமர்ப்பிக்கமுடியும்.

வெளியான நூலின் நான்கு பிரதிகள் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ம-9)

## விபத்துக்களில் காயம்

தென்மராட்சி, ஜன.25

மட்டுவில் முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் மீசாலை - புத்தூர் வீதியில் காரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி படுகாயமடைந்ததுடன் சுயநினைவையும் இழந்தார்.

இந்தச் சம்பவம் புதன் கிழமை பகல் இடம்பெற்றது. மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வன் சிவா(வயது-33) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

★★★

அளவெட்டி, ஜன.25

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் காயமடைந்த மூவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சுன்னாகம்-புத்தூர் வீதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்த நடராசா சாரங்கன் (வயது-/), கே.கே.எஸ். வீதியில் இடம்பெற்ற விபத்தில் கட்டுவன் வீதி மல்லாகத்தைச் சேர்ந்த ஐயாத்துரை சூரியகுமார் (வயது-30) சுன்னாகம் ஜெட் மோட்டேர்ஸ் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைச் சேர்நத மகேந்திரராசா ரமேஷ் (வயது-29) காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ம-36)

## செய்மதி தொலைபேசியுடன் இலங்கையர் இந்தியாவில் கைது

பாவனைக்குத் தடை செய்யப்பட்ட செய்மதித் தொலைபேசி ஒன்றைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஆஸ்திரேலிய குடியுரிமை பெற்ற இலங் கையர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டார்.

39 வயதான ஒருவரே நேற்று முன்தினம் புதன் கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோழிப்பண்ணையொன்றை அமைக்கும் நோக்கில் இந்தியாவின் தேநீர்பட்டிப் பகுதியில் அவர் காணியொன்றை வாங்கியுள்ளார். இதற்காகவே அவர் தேநீர்ப்பட்டிக்கு வந்த தாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

அவரது முன்னோர்கள் இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களெனவும் இதனால் அவர் வெளிநாட்டு இந் தியக் குடியுரிமையை பெற் றிருந்ததாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கியூ பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

இந்திய வயர்லஸ் தந்திச் சட்டம் 1933 பிரிவு 6 இன் (1 ஏ) கீழ் பொலிஸார் அவர் மீது நடவடிக்கையை ,, மேற்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட அவர் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதிவரை நீதிமன்றக் காவ லில் வைக்கப்பட்டுள்ளார். (வ)

## கால்கோள் விழா

குருநகர், ஜன.25

யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் தரம் ஒன்றில் புதிய மாணவர்களை சேர்க்கும் கால்கோள் விழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் திருமதி ஐ.பி. கிளிஸ்ரபெல் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி எம்.ஆர்.சி. கொன்ஸ்ரன்ரைனும் சிறப்பு விருந்தினராக யாழ். புனித மரியன்னை பேராலயத்தின் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகளாரும் கலந்துகொண்னர்.

## உளச் செயற்பாட்டிலும் அக்கறை

குருநகர், ஜன.25

யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய பாடசாலை நிர்வாகம் மாணவர்களின் கல்வியில் மட்டுமன்றி மாணவர்களின் உளச் செயற்பாடுகளிலும் [illegible] அக்கறை காட்டி வருவதாக பாடசாலையின் அதிபர் ரி.ஞானப் பிரகாசம் தெரிவித்தார். பாடசாலையில் கல்வி கற்கும் தரம்9 வகுப்பு மாணவர்களுக்கு உளவளம் பற்றி ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (3-51)

## கும்பாபிஷேகம்

வல்வெட்டித்துறை வேவில் கலட்டி ஸ்ரீ சித்தி விநாயக பூலட்சுமி மகாலட்சுமி சமேத நாராயணசுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7.42 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை 8மணி முதல் 3 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும். (3-13)

## கந்தபுராண படிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் கந்தபுராண படிப்பு இன்று வெள்ளிக்கிழமை காலை விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த கந்தபுராண படிப்பு தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் குருபூசை

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தின் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் குருபூசை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் தலைவர் இ.குழந்தைவடிவேலு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிவஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள் ஆசியுரையையும் வழங்கவுள்ளார்.

அன்றைய தினம் திருவாசக முற்றோதல், விசேட அபிஷேகம், பொது அறிவுப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கல் ஆகியன நடைபெறவுள்ளன. (3-13)

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

வீதி அகலிப்பு பணிகளுக் காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின் சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 6 மணி வரையும், மூளாய், சுழிபுரப் பிரதேசம் மாவடி பிரதேசம், கைதடி, நவபுரம், கைதடி, மானிப்பாய் வீதி ஆகிய இடங்களிலும்-

நாளை சனிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5மணிவரையும் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டாதெரு தொடக்கம் முட்டாஸ் கடைச் சந்தி வரையான பிரதேசம், வேம்படி, மனோகரா சந்திப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் மந்திகைப் பிரதேசம், புலோலி, சாரையடி, ஓராம்கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறைப் பிரதேசம், அல்வாய்ப் பிரதேசம், நெல்லியடிப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், கரணவாய்ப் பிரதேசம், குஞ்சர்கடைப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்-

28 ஆம் திகதி திங்கட் கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அராலி வடக்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேசங்கள், அராலி மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி, மாலுசந்தி முதல் மடத்தடி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் கிரிக்கெட்டில் லெவன் ஸ்ரார் சம்பியன்



வலி.வடக்கு, ஜன.25

வலி. தென் மேற்கு இளைஞர் கழக சம்மேளனத்தினால் தைப்பொங்கல் திருநாளையொட்டி நடத்திய ஆறு பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை 'லெவன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை 'லெவன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மேற்கு காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களை பெற்றது. அந்த அணி சார்பில் செல்ரன் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும், ரம்மிய ராகுலன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

'லெவன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சாருஜன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.


78 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய 'லெவன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகம் 4.3 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம்இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் கஜேந்திரா 28 ஓட்டங்களையும், சாருஜன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களை பெற்றனர். 'லெவன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிஷா 2 இலக்குகளை கைப்பற்றினார்.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 'லெவன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கஜேந்திராவும் போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கிருபவனும் சிறந்த துடுப்பாட்ட வீரனாக ரம்மிய ராகுலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

வலி. தென்மேற்கு இளைஞர் சம்மேளனத்தின் தலைவரும், வலி .தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளருமான ஜெபநேசன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் ஈஸ் வரதாசனும் தொழிலதிபர் வரதராஜனும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்கள். (ந-86)

## விசுவமடுவில் மாட்டுவண்டிச் சவாரி



கிளிநொச்சி,ஜன.25

முல்லைத்தீவு விசுவமடுவில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு விசுவமடு சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது.

இந்த மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியில் யாழ்ப் பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான போட்டியாளர்கள் தமது வெற்றிக் காளைகளுடன் பங்குபற்றவுள்ளனர். (ந-6)

## கரவெட்டிப் பிரதேச கிரிக்கெட் ஆரம்பம்

வடமராட்சி,ஜன.25

வடமராட்சி, கரவெட்டிப் பிரதேச செயலகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்திவருகிறது. இதில் ஓர் அங்கமான கிரிக்கட் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை ஆரம்ப மாகவுள்ளது.

31 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டி நான்கு பிரிவுகளாக நடை பெறவுள்ளது. சுற்றுத் தொடரின் ஆரம்பச் சுற்று 10 பந்துப் பரிமாற்றங் களையும், அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் 15 பந்துப் பரிமாற்றங் களையும் கொண்டவை யாக அமையும்.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்களின் விவரம் வருமாறு:

குழு -'ஏ'

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம், கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம், கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம், மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம், வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகம், கரவெட்டி நவ சக்தி விளையாட்டுக் கழகம், கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகம்.

குழு -'பி'

கரவெட்டி திருவள்ளுவர் விளையாட்டுக்கழகம், கரவெட்டிவளர்மதி விளையாட்டுக் கழகம் ,வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம், கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம், இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம், கரவெட்டி ஐங்கரன் விளையாட்டுக் கழகம், கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.

குழு-'சி'

உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகம், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம்,கரவெட்டி சுடர் ஒளி விளையாட்டுக் கழகம், கரணவாய் இளைஞர் விளையாட்டுக் கழகம், அல்வாய் பாரதிதாசன் விளையாட்டுக் கழகம், வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் , சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம்.

குழு-'டி'

இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம், கரவெட்டி கலைச்சுடர் விளையாட்டுக் கழகம், கரவெட்டி செஞ்சுடர் விளையாட்டுக் கழகம்,வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம், அண்ணா சிலையடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் , உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம்.

குறித்த சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானம், மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானம், இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன. (ந-8)

## அருணோதய கல்லூரி வீதியோட்டம் இன்று



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டியை முன்னிட்டு வருடாந்தம் நடைபெறும் வீதியோட்டப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை காலை 6.00 மணிக்கு பாடசாலை முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்த வீதியோட்டப் போட்டி, சிரேஸ்ட பிரிவு மற்றும் கனிஷ்ட பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த வருடம் வீதி யோட்டத்தில் இரு பிரிவு களையும் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். (ந-86)

## இன்றைய ஆட்டங்கள்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தினால் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையே 22 ஆவது ஆண்டாக நடத்தப்படும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ,கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி,மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி மைதானங்களில் இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்.**

காலை 8.30 மணி

ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 1 மணி

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக புளூஸ் அணி எதிர் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம்.

**கனகரத்தினம் மத்திய மகா மைதானம்.**

காலை 8.30 மணி

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் வண்ணார் பண்ணை ஸ்ரீகாமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் 1 மணி

சென்றல் விளையாட்டுக்கழகம் எதிர் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

★குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் 4.30 மணி

★ அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் எதிர் இளவாலை சென்.ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 6 மணி

★ உதயதாரகை விளையாட்டுக்கழகம் எதிர் ஈஸ்வரன் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி இன்று வெள்ளிக் கிழமை நெடுந்தீவு சிக்கீரியாம்பள்ளம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின்.அனுமதியுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக யாழ்.மாவட்டரீதியாக நடத்தும் தாச்சி போட்டி இன்று வெள்ளிக் கிழமை அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது

பிற்பகல் 3மணி

இணுவில்அறிஞர் விளையாட்டுக் கழகம் எதிர்ஆனைக் கோட்டை நடனமுருகன் விளையாட்டுக் கழகம்

பிற்பகல் 4மணி

மாவை கலட்டி கணேசா விளையாட்டுக் கழகம் எதிர் ஆலடி சிந்துவிளையாட்டுக்கழகம்.

(ந-86-23-288)

## வலைப்பந்துக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.மாவட்டத்திலுள்ள வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று முற்பகல்10 மணிக்கு நடைபெறவுள்ளது.


இதில் விரைவில் நடைபெறவுள்ள'' ரூபசிங்கம் வெற்றிக்கிண்ண'' வலைப் பந்தாட்டம் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அனைத்து வலைப்பந்து மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ந-422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# ரெய்னாவால் தோற்றோம் - குக்

இந்திய அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்து தொடரையும் இழந்தது.

இது குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்டயர் குக் கூறுகையில், "257 ஓட்டங்கள் என்பது வெற்றிக்குரிய இலக்காகவே நினைத்தோம். ஆரம்பத்தில் முக்கியமான சில இலக்குகளை வீழ்த்த வேண்டி இருந்தது.




ஆனால் ரோகித் ஷர்மா-ரெய்னாவின் கூட்டணி எங்களிடம் இருந்து ஆட்டத்தைப் பறித்துச் சென்று விட்டது. அவர்கள் துரிதமாக ஓட்டங்கள் எடுத்து விட்டனர். அதிலும் ரெய்னா மிக அபாரமாக ஆடி வெற்றியை நோக்கி அணியை அழைத்துச் சென்றார்.






ஸ்டீபன் பின் வீசிய பந்தில் ரெய்னா ஆட்டமிழந்து விட்டார் என்று தான் நினைத்தோம்.

ஆனால் நடுவர் ஸ்டீவ் டேவிஸ், அந்தப் பந்தை முறையற்றது என்று அறிவித்தார். இது எமக்கு ஏமாற்றம் அளித்தது. ஆயினும் தான் விதிமுறைப்படியே நடந்து கொண்டதாக நடுவர் கூறினார்.

உண்மையில் எனக்கே விதிமுறை பற்றி குழப்பமாகத்தான் இருந்தது. அந்தத் தருணத்தில் ரெய்னா ஆட்டமிழந்திருந்தால் ஆட்டம் எங்களுக்குச் சாதகமாக மாறியிருக்கலாம்"- என்றார்.

இந்த ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீபன் பின் வீசிய பந்தில் ரெய்னா (41 ஓட்டங்களில் இருந்த போது) பிடிகொடுத்திருந்தார். எனினும் ஸ்டீபன் பின் பந்து வீசுவதற்கு முன்பாக எதிர்முனையில் இருந்த ஸ்டம்பின் பெய்ல்சை காலால் தட்டி விட்டார். இந்த விடயம் தெரியவந்ததாலேயே நடுவர் அந்தப் பந்தை முறையற்றது என்று அறிவித்தார்.

ஏற்கனவே கொச்சி ஒரு நாள் போட்டியின்போதும் ஸ்டீபன் பின் இவ்வாறு செய்ததால் நடுவரால் எச்சரிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# பெடரர் முன்னேற்றம்

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் கடும் போராட்டத்துக்குப் பின்னர் அரையிறுதிக்கு முன்னேறினார் ரோஜர் பெடரர்.

ஆண்களுக்கான தனிநபர் காலிறுதி ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் உலகின் இரண்டாம் நிலை வீரர் ரோஜர் பெடரருக்கும், 7ஆம் நிலை வீரரான பிரான்சின் ஜோவில்பிரட் சொங்காவுக்குமிடையில் இடம்பெற்றது. விறுவிறுப்பாக அமைந்த இந்த ஆட்டத்தில் ரோஜர் பெடரர் 7:6, 4:6, 7:6, 3:6, 6:3 என்ற கணக்கில் போராடி வெற்றிபெற்றார். இதன் மூலம் அவர் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

உலகின் 3ஆம் நிலை வீரர் அன்டி முரேக்கும், ஜெரமி காட்டிக்குமிடையில் இடம்பெற்ற இன்னொரு காலிறுதியில் அன்டி முரே 6:4, 6:1, 6:2 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிபெற்றார்.


பெண்களுக்கான தனிநபர் காலிறுதிப் போட்டிகளில் உலகின் முதல் நிலை வீராங்கனை ஸ்வெற்லானா 7:5, 6:1 என்ற செற் கணக்கில் குஷ்னெற்சோவாவை தோற்கடித்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

உலகின் 3ஆம் நிலை வீராங்கனையான செரினா வில்லியம்ஸ், 29ஆம் நிலை வீராங்கனையான ஸ்லோன் ஸ்டீபன்ஸிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்திருந்தார். அவர் 6:3, 5:7, 4:6 என்ற செற் கணக்கில் தனது சகநாட்டு வீராங்கனையான ஸ்லோன் ஸ்டீபன்ஸிடம் தோல்வியடைந்தார்.

ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டிகளில் நொவக் ஜெக்கோவிச்சை எதிர்த்து டேவிட் பெரரும், அன்டி முரேயை எதிர்த்து ரோஜர் பெடரரும் மோதவுள்ளனர். (ந)



# எல்கருக்கு வாய்ப்பு




தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டியில் டீன் எல்கர் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்துள்ள ஹசிம் அம்லாவுக்குப் பதிலாகவே அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணி சார்பாக இதுவரை 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியுள்ள டீன் எல்கர், மிக அண்மையிலேயே தனது முதலாவது டெஸ்ட் சதத்தினைப் பெற்றிருந்தார். இந்த நிலையிலேயே அவருக்கு மீண்டும் ஒருநாள் சர்வதேசப் போட்டி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரின் இரண்டாவது போட்டியில் பங்குபற்றியிருக்காத ஹசிம் அம்லா, மூன்றாவது போட்டியிலும் பங்குபெறுவதற்கான உடற்தகுதியை அடையமாட்டார் எனக் கருதப்பட்டதாலேயே டீன் எல்கர் இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூன்றாவது போட்டியில் ஹசிம் அம்லா பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் 50/50 என்ற கணக்கிலேயே காணப்பட்டதாகத் தெரிவித்த தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை, பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், அந்தத் தொடருக்கு முன்னதாக ஹசிம் அம்லாவை இந்தப் போட்டியில் பயன்படுத்த விரும்பியிருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

ஹசிம் அம்லா தவிர, அந்த அணியின் இடதுகைச் சுழற்பந்து வீச்சாளர் றொபின் பீற்றர்சனும் மூன்றாவது போட்டியில் பங்குகொள்ளமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றாலும் பெருமைதான் - மஹேல -

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 5ஆவது போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்து தொடரை வெல்லும் வாய்ப்பை இழந்த போதிலும், இந்தத் தொடர் தொடர்பாகப் பெருமையடைவதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரித்ததாவது:

''5ஆவது போட்டியில் தோல்வியடைந்தமை கவலைதான். ஆனால் இந்தத் தொடர் முழுவதும் இலங்கை அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது.

இந்தத் தொடரைச் சிறப்பான முறையில் முடித்துக்கொள்ள முடியாமை குறித்து ஏமாற்றமடைந்துள்ளோம். ஆனால் இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியமை குறித்து இலங்கை அணி பெருமையடைய முடியும்.

இலங்கை அணியின் தலைவராக எனக்கு இதுவே இறுதிப் போட்டியாக இந்தப் போட்டி அமைந்திருந்தது. இதற்காக அணியின் வீரர்களுக்கும், அணி நிர்வாகத்துக்கும் நன்றியுடையவனாக உள்ளேன்.

கடந்த 12 மாதங்களில் இலங்கை அணியில் ஏற்படுத்திய விரும்பிய மாற்றங்களுக்காக அணியும், முகாமையும் சிறப்பாகச் செயற்பட்டன. இலங்கை அணி தற்போது சரியான பாதையில் பயணிப்பதாகவே கருதுகிறேன்.'' - என்றார்.

இலங்கை அணியின் தலைவராக கடந்த வருட ஆரம்பத்தில் மீண்டும் பதவியேற்ற மஹேல ஜெயவர்த்தன, ''ஒரு வருடத்துக்கு மாத்திரம் அணித் தலைவராகச் செயற்படுவேன்'' என முன்னரே தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ந)

# கங்குலியை முந்தினார் டோனி

இங்கிலாந்துக்கெதிரான நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் இந்திய அணி ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்ததுடன் தொடரையும் கைப்பற்றியது.

இந்திய அணிக்காக இதுவரை 134 ஒருநாள் போட்டிகளில் அணித்தலைவராக டோனி செயற்பட்டுள்ளார், இந்த ஆட்டத்தில் அவர் அணித்தலைவராக தனது 77 ஆவது வெற்றியைப் பதிவு செய்தார்.

இதன் மூலம் அதிக வெற்றிகள் பெற்றுத்தந்த இந்திய அணி அணித் தலைவர் என்ற வரிசையில் டோனி, கங்குலியை (146 போட்டியில் 76 வெற்றி) முந்தினார். இந்தப் பட்டியலில் முதலிடத்தில் முஹமட் அசாருதீன் (174 போட்டியில் 90 வெற்றி) உள்ளார்.

சர்வதேச அளவில் ஆஸ்திரேலியாவின் பொண்டிங் (165 வெற்றி), அலன் போர்டர் (107), தென்னாபிரிக்காவின் குரோஞ்சே (99), நியூசிலாந்தின் ஸ்டீவன் பிளமிங் (98) முதல் நான்கு இடங்களில் உள்ளார். இந்த வரிசையில் டோனி, 8 ஆவது இடத்தில் உள்ளார்.

மேலும், நேற்று முன்தினம் வெற்றி பெற்ற இந்திய அணி 120 புள்ளிகளுடன் ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைத் தக்க வைத்தது. அடுத்த இரு இடங்களில் இங்கிலாந்து (117), ஆஸ்திரேலியா (113) உள்ளன.

அடுத்து நடைபெறவுள்ள போட்டியில் இந்தியா ஒருவேளை தோற்றால் இங்கிலாந்தும் இந்தியாவும் 119 புள்ளிகளைப் பெறும் வாய்ப்பு ஏற்படும். எனினும் சில தசம புள்ளிகள் வித்தியாசத்தில் இந்திய அணியே முதலிடத்தில் நீடிக்கும்.

(ந)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
Advance Diploma in English

இக்கற்கை நெறியானது:–

உயர்தர ஆங்கில Diploma வும் ஆங்கில மொழி கற்பதும் 6 மாதங்கள் அடங்கிய நிறைவான பல அம்சங்களைக் கொண்ட ஒரு கல்விநெறி. இந்நெறி ஆங்கில இலக்கியத்தினையும் பிரயோக மொழியினையும் பேச்சையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- மேலும் ஆங்கிலத்தினைப் பகுத்து வகுத்து விரிவாக்கி ஆங்கில இலக்கியத்தினூடாகவும் அவையல்லாத ஏனைய நூல்களுக்கூடாகவும் அறிவைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.
- ஆங்கில அறிவைப் பெற்று மேலும் அதை விருத்தியாக்கி அதோடு சேர்த்து ஏனைய துறைகளும் அடங்கிய மொழியியல், ஆங்கிலம் கற்பித்தல் போன்றவற்றை உருவாக்க உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக் கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

விசேடமாகக் கவனிக்க வேண்டியவை

- ஆங்கிலத்தில் உயர்தரத் தகமை பெற்றுக்கொள்ள முடியும்.
- அரசாங்க நிறுவனங்களில், தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற உதவும் கற்கை நெறி.
- எதிர்காலத்தில் ஆங்கில ஆசிரியராக வர இருப்பவர்களுக்கான கற்கை நெறி.
- ஆரம்பநிலை ஆங்கில ஆசிரியர்கள் உயர்தர நிலைக்கு இக்கற்கை நெறியைக் கற்பதன் மூலம் தம்மை மாற்றிக் கொள்ள முடியும்.

காலம் : 6 மாதம்

Week Days 9.00 - 12.00 / 3.00 - 5.00
Week Ends 11.30 - 1.30 / 3.00 - 5.00

புதிய வகுப்புக்கள் Batch I - 27.01.2013 Batch II - 28.01.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074



Walk In Interview

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல ஆங்கிலக் கற்கை நெறிகளை நடாத்தும் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிக்கு ஆட்கள் தேவை. தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்கவும்.

Lecturers : Full time (English medium)

Graduates/Diploma holders from English department of Universities, Open universities, College of Education or those who wanted to get work experience are can join with us. Attractive Salary will be provided.

Date : 28/01/2013 & 29/01/2013
Time : Between 10.00 am to 4.00pm
Venue : British College of Higher Studies
Address : No.3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavapuliyankulam, Vavuniya.
Telephone : 024-3245287, 0777585913 or 0777855463



புதிய பிரிவுகள் ஆரம்பம்

(SAT&SUN)
aat(SriLanka)
FUNDATION, INTERMEDIATE, FINAL
Medium:Tamil, English
க.பொ.த. (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

External degree
G.A.Q, B.A1,BA(Final)
1st in Com,B.Com.(part 1),B.Com(part 11), B.Com(final)

further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept.
464, Hospital Road,Jaffna.
021 222 3382



இயந்திரம் மூலம் நெல் அறுவடை

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல்வயல்கள் இயந்திரம் மூலமாக (Combine Harvester) அறுவடை செய்து கொடுக்கப்படும் (தண்ணீர் உள்ள வயல்களும்).

தொடர்பு: அமேசின் என்ரபிறைஸஸ்
T.P- 0777742436 (சுஜீவன்)



உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111



மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

புதிய நிலையிலுள்ள CD200 Road master, சிவப்பு நிறம் English Number உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 0777361862



MCC
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
கணக்கீடு
பிரத்தியேக வகுப்புக்கள் நடை பெறுகின்றன.
A/L, CBF, AAT, HNDM, HNDA
CBF, A/L-2013 மாணவர்களுக்கான துரித மீட்டல்
ஆரம்பம் 26.01.2013
By:- T.Sutharsan, BBA T.P:-0750710252, 0774525213



Vinoth Curtains
இப்பொழுது யாழ். மண்ணில்......
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
இல-50/1, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
தொடர்பு- மைக்கல் 0774906323 / 0777797532, 0719050145



யாழ்.நகரில்
Diploma in Mass Media
அறிவிப்பாளர் பயிற்சி

(2ஆவது பிரிவு 16 மாணவர்களுடன் வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து 3 ஆவது பிரிவு ஆரம்பம் 10.02.2013 காலை 9.00) வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக ,தயாரிப்பாளராக,நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா!

இதோ...

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலை சிறந்த அறிவிப்பாளர்களாக உருவாக்கிவரும் Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ். மற்றும் வவுனியா மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சி நெறி.

(Diploma in Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு- நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத்தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்)

தயாராகுங்கள். பதிவுகளுக்கு விரையுங்கள்.

வவுனியா,முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College
No-26 Station Road
Vavuniya
0777929475.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாணவர்கள்.
IISEEE NALLUR CAMPUS
No-72,Point Pedro Road,
NALLUR, JAFFNA
0777929475, 0212224728.

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.



SPOKEN ENGLISH
யாருக்காக ?
- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-26.01.2013
1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) பி.ப. 3.00-5.00

குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாதமுடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

அனுமதி, புத்தகம், சான்றிதழ் இலவசம்

SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ். நகர். TEL.0776214567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.